பக்கங்கள்:இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 19 ஞாயிற்றுக்கிழமை (03.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 038

# அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு

# பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படும்

## ★ காணாமற்போனோர் குறித்தும் நடவடிக்கை என்கிறார் சரத் ★

— உதயன் அலுவலகச் செய்தியாளர்கள் —

யாழ்ப்பாணம், ஜனவரி 03



★எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் வெற்றிபெற்றவுடன் அவசரகாலச்சட்டம் உடன் நீக்கப்படும்.

★யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தும் முற்றாக அகற்றப்படும்.

★ காணாமற்போனோர் மற்றும் கைது செய்யப்பட்டோர் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

★ பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்பட்டு சர்வதேச விமானநிலையமாக மாற்றப்படும்.

ஜனாதிபதி பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா இவற்றை நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)



(மற்றும் செய்திகள், படங்கள்: 02 ஆம், 03 ஆம், 17 ஆம் பக்கங்களில்)

## யாழ்.தேர்தல் தொகுதியைச் சேர்ந்த 4,000 பேர் வாக்களிக்கத் தடை; இரு இடங்களில் விண்ணப்பித்ததால்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த 4 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தடைவிதித்துள்ளார்.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தார்.

அதன் பிரகாரம், யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த 4 ஆயிரம் வாக்காளர்கள் யாழ்ப்பாணம், புத்தளம் ஆகிய இரண்டு இடங்களிலும் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்ததை (20ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை பொலிஸ் அதிகாரியின் இடமாற்றத்தை ரத்துச் செய்ய தேர்தல் ஆணையாளர் உத்தரவு

கொழும்பு, ஜன.3

அம்பாறையில் அமைக்கபட்டிருந்த மஹிந்த ராஜபக்ஷவின் 'கட்அவுட்'டை அகற்ற முயற்சித்த அந்தப் பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவரது இடமாற்ற உத்தரவு தேர்தல் விதிகளை மீறும் செயல் எனச் சுட்டிக்காட்டியுள்ள தேர்தல் ஆணையாளர், அந்த இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் காலங்களில் இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்பட முடியாது என்ற வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தேர்தல்கள் ஆணையாளர் முதன் முறையாக தமது அதிகாரத்தை பயன்படுத்தி அந்த இடமாற்றத்தை ரத்துச் செய்யதுள்ளார்.

தேர்தல் காலத்தில் பொதுசேவையாளர்களின் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்தையும், நீதியையும் மலரச் செய்யவே ஜே.வி.பியுடன் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம்

### இனப்பிரச்சினை தீர்வுக்கும் இது வழிவகுக்கும் என்கிறார் ரணில்



யாழ்ப்பாணம், டிசெ.3

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும் அரசியல் ரீதியாக இனப்பிரச்சினை உட்பட நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஐ.தே.கவும் ஜே.வி. பியும் இணைந்து செயற்படுவதற்கான இணக்கப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக எதிர்காலத்தில் ஜனநாயகத்தையும் நீதியையும் மலரச்செய்ய முடியும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டின் போது தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்

கொழும்பு, ஜன.3

ஜனாதிபதித் தேர்தலில் அரசு வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசாரத்துக்காக எதிர்வரும் 9 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

அமைச்சர்கள், கட்சிப் பிரமுகர்கள் சகிதம் வரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சமய வழிபாடுகளில் ஈடுபடுவதுடன் பல தரப்பட்டவர்களையும்(20ஆம் பக்கம் பார்க்க)

## தமது உறவுகளை மீட்டுத்தரக் கோரி கதறி அழுதவாறு மனோகணேசனைச் சூழ்ந்து கொண்டனர் சொந்தங்கள்

யாழ்ப்பாணம், ஜன.3

எமது பிள்ளைகள் எங்கே? எமது உறவுக்கு என்ன நேர்ந்தது ? அவர்களை மீட்டுத் தாருங்கள் என்று கதறி அழுதபடி காணமற்போனோரின் உறவினர்கள் பல நூற்றுக்கணக்கானோர் மனோ கணேசனைச் சூழ்ந்து கொண்டனர்.

எமது உறவுகளின் கொலைகளுக்குப் பொறுப்பானகொலையாளிகள் யார்? எம் உறவுகள் தொடர்பான உண்மை நிலையைப் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் என்றெல்லாம் மனோ கணேசனிடம் அவர்கள் கவலை கட்டுக்கடங்காமல் கண்ணீர் சிந்தியபடி கேள்விகளை எழுப்பினர்.

நேற்று மாலை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற (02ஆம் பக்கம் பார்க்க)





## சந்திரசேகரனின் இறுதிக்கிரியைகளில் திருமாவளவன்


கொழும்பு, ஜன.3

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வேட்பாளராகப் போட்டியிடும் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு திரட்டும் வகையில் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடத்தப்பட்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஜெனரல் சரத் பொன்சேகா மக்களை வரவேற்பதையும், ஜயலத் ஜயவர்த்தனா, ரணில் விக்கிரமசிங்க, ரவூப் ஹக்கீம், சோமவன்ஸ அமரசிங்க, மனோ கணேசன், ரவி கருணாநாயக்க இறைவணக்கம் செய்வதையும் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் மேல்வரிசையிலும் - நிகழ்வில் கலந்துகொண்டவர்களை கீழ் வரிசையிலும் காணலாம். *(படங்கள்: பிரபா, தமிழரசன், நேசன்)*

## ஜனநாயகத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிக நீண்ட காலமாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளை ஏற்கனவே நாம் ஆரம்பித்துவிட்டோம். இதற்காக புதியதோர் அரசமைப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவது தொடர்பாக தொடர்ச்சியான கலந்துரையாடல்களை பல்வேறு கட்சிகளுடனும் நடத்தி வருகின்றோம். குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சகல கட்சிகளுடனும் இத்தகைய கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் மூலம் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இதுநாள் வரையும் காலத்தை இழுத்தடிப்பதற்கே இத்தகைய நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு வந்தது. ஆனால் இம்முறை புதிய அரசமைப்பின் கீழ், சக்திமிக்க நாடாளுமன்றக் குழுவை அமைத்து மிக விரைவாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

சர்வாதிகார ஆட்சி புரியும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை அகற்றி சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்க நாம் முயற்சிப்பது ஜனநாயகம், நீதி, கருத்துச் சுதந்திரம் என்பவற்றை நாட்டில் மீண்டும் நிலைநாட்டுவதற்கே. இதற்காகத் தான் எதிரும் புதிருமாக இருந்த ஐ.தே.கவும், ஜே.வி.பியும் இணைந்து செயற்படுகின்றன.

இதேபோல வருங்காலத்திலும் இனப்பிரச்சினை உள்ளிட்ட சகல பிரச்சினைகளையும் ஏனைய கட்சிகளுடனும் இணைந்து செயற்பட்டு தீர்வுகாண்போம்.

மீண்டும் ஒரு தடவை தமது உரிமைகளுக்காகத் தமிழ் மக்கள் போராடுவதற்குத் தேவையற்ற வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைந்திருக்கும். இது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடனும் விரிவாக ஆராய்ந்துள்ளோம்.

மஹிந்த ஆட்சியின் விளைவாக இன்று வடக்கில் மட்டுமல்லாது தெற்கிலும் கூட அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தலைநகரில் பல இடங்களில் இத்தகைய பாதுகாப்பு வலயங்கள் இருக்கின்றன. இதுதவிர தெனியாயவிலும் குருநாகலிலும் மஹிந்த குடும்பத்தின் சொத்துக்கள் உள்ள இடங்கள் - அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக மாறி வருகின்றன. யுத்தம் நிறைவடைந்து விட்டதாக அரசு அறிவித்து பல மாதங்கள் கடந்த பின்னரும் இன்னமும் அவை விலக்கிக்கொள்ளப்படவேயில்லை - என்றார். (ஒ-50-04)

## தமது உறவுகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், காணாமற்போனோர் தொடர்பான கண்காணிப்புக்குழுவின் தலைவருமான மனோ கணேசனைச் சந்தித்த காணாமற்போனோரின் உறவினர்கள் நண்பகல் தொடக்கம் காத்திருந்தனர். அவர்களின் ஓலங்களும் அவலக்குரல்களும் காண்போர் கண்களையும் கலங்க வைத்தது. மேடையைவிட்டு கீழ் இறங்கிய மனோவை அவர்கள் சூழ்ந்து கொண்டு கதறி அழுதனர். மனுக்களையும் அவர்களிடம் கையளித்தனர்.

அவர்களுக்கு ஆறுதல் கூறிய மனோ கணேசன் இந்த விவகாரம் குறித்து பகிரங்க விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து அங்கு வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிடமும் அதே கேள்விகளை தமது உயிருக்கு உயிரானவர்களைக் காணாமற் தவிக்கும் பெற்றோர், மனைவிமார், சகோதரர்கள் என்று பலரும் தொடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த ஹக்கீம்:-

உயிருடன் இருப்பவர்கள், இறந்தவர்கள் தொடர்பான பட்டியலைத் தாங்கள் கோரியுள்ளதாகவும் இது தொடர்பாக பகிரங்க விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். (ஒ-6-86)

## அவசரகாலச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட சரத் பொன்சேகா பல்வேறு நிகழ்வில் கலந்து கொண்ட பின்னர் நேற்று மாலை 7 மணியளவில் யாழ்.பாடி ஹோட்டலில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அந்த மாநாட்டில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், எம்.பி.க்களான ஜயலத் ஜயவர்த்தன, ரவிகருணா நாயக்க,அனுரகுமார திஸநாயக்க, அர்ஜீண ரணதுங்க, அகில்விராஜ் காரியவாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் சரத் பொன்சேகா மேலும் விவரித்தவை வருமாறு:

இன்று எமது நாட்டுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை. யுத்தம் முடிவடைந்து விட்டது. எனவே உயர்பாதுகாப்பு வலயங்கள் தேவையில்லை. யுத்தம் முடிவடைந்தவுடனேயே அவை அகற்றப்பட்டிருக்க வேண்டும். எனினும் இதுவரை அது நடைபெறவில்லை. அது ஏன் என்பது தான் எனக்கு விளங்க வில்லை.

நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டதும் முதலில் முகமாலை, தனங்கிளப்பு, அரியாலை, யாழ்.நகர், பலாலி, நாகர் கோயில் பகுதிகளில் அமைந்துள்ள இராணுவத்தினரின் பாதுகாப்பு வலயங்கள் அனைத்தும் உடனடியாக அகற்றப்படும். பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்பட்டு சர்வதேச விமானநிலையமாக மாற்றப்படும்.

தற்போது நடைமுறையில் இருக்கும் அவசரகாலச்சட்டம் இனிமேல் தேவையற்றது. அது உடனடியாக நீக்கப்படும்

அத்துடன் காணாமற்போனோர் மற்றும் கைது செய்யப்பட்டோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். இவர்களில் சிறையில் உள்ளவர்களின் விவரங்கள் உடனடியாகப் பகிரங்கப்படுத்தப்படும். முன்னர் யுத்தகாலத்தில் கைது செய்யப்பட்டோரினதும் இப்போது முகாமில் வைக்கப்பட்டுள்ள 10 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்களினதும் விவரங்கள் இதில் அடங்கும். சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களை உடனடியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் காணாமற்போனோரில் உயிருடன் இல்லாதவர்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### மீளக்குடியமர்த்தல் தேர்தல் நாடகம்

இப்போது இடம்பெயர்ந்த மக்களுக்கான அடிப்படைக் கட்டமைப்புகள் எதுவும் ஏற்படுத்தப்படாமல் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டுள்ளார்கள். இது ஒரு தேர்தல் நாடகம்.

மீளக்குடியேற்றப்பட்ட இடங்களில் கள்ள வாக்குகளைப் போடுவதற்கும் அங்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. மீள்குடியேற்றத்துக்கு வழங்கப்பட்ட சர்வதேச நிவாரண நிதியை 'ராஜபக்ஷ கம்பனி' களவாடிவிட்டது.

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் நான் நன்கு அறிந்தவன். இங்கு நான் இராணுவ தளபதியாக பணியாற்றியவன். எனவே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான தகுதி என்னிடம் உள்ளது. ஆனால் பாதுகாப்புச் செயலருக்கு இது தொடர்பாக போதிய அறிவு இல்லை. அவர் 20 வருடங்களின் பின்னர் ஒரு வெளிநாட்டுத்தூதுவர் போல இங்கு வந்துள்ளார்.

நான் ஆட்சிக்கு வந்தால் இங்கு இராணுவ ஆட்சி நடைபெறும் என்று கூறப்படுகிறது. நான் இராணுவ ஆட்சியை விரும்பியிருந்தால் இப்போதுள்ள அரச தலைமையை எப்போதோ சிறையில் அடைத்து ஆட்சிக்கு வந்திருப்பேன். ஆனால் நான் அதை விரும்பவில்லை.

### இந்த நாடு அனைத்துப் பிரஜைகளுக்கும் சொந்தம்

இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகள் என நான் கூறியதாக முன்னர் ஊடகம் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது. அந்தச் செய்தி முற்றிலும் தவறானது. நான் அதனை முற்றாக மறுக்கின்றேன். சிங்கள மக்கள் அனைத்து இனங்களுடனும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டும் என்பதையே நான் கூறினேன். அது திரிவு படுத்தப்பட்டு வெளியிடப்பட்டு விட்டது. இந்த நாடு தனியே சிங்களவருக்கோ, தமிழருக்கோ சொந்தமானதல்ல. அது இந்த நாட்டின் அனைத்துப் பிரஜைகளுக்கும் உரியது - என்றார். (அ-50-4)

## கல்விமாணி புதிய மாணவர் வரவேற்பு நிகழ்வு

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப்பட்ட நெறி (2009/2010) புதிய கல்வியாண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் திசைமுகப் படுத்தல் நிகழ்வும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று ஞாயிறு காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரிய வலுவூட்டல் திணைக்களப் பணிப்பாளர் நிகால் விக்கிரம சிங்க கலந்து கொள்கின்றார்.

ஆசியுரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் வாழ்த்துரைகளை யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தியும் வழங்கவுள்ளனர். (ஒ-1)

## யூனியன் கல்லூரியின் ஆசிரியர், மாணவருக்கு

யூனியன் கல்லூரியின் கற்றல் செயற்பாடுகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. வலி.வடக்கின் மீள்குடியேற்றம் தொடர்பான வைபவங்கள் நாளை இக் கல்லூரியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்ததால் நாளை மறுதினமே கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதால் நாளை பாடசாலை ஆரம்பமாகும் என்றும் ஆசிரியர்கள், மாணவர்களையும் தவறாது சமுகமளிக்க வேண்டும் என்றும் கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-16)

**Computer sales**

Pentium 4 கணனிகள் மிகவும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்

Intel Processor, Intel Mother Board, 15" LCD Moniter, ATX Silver Black Casing, DVD Writer, UPS, Computer Table, Multimedia Key Board, Laser Mouse அனைத்தும் 35, 250 மட்டுமே

(PHILIPS 19" REAL FLAT MONITOR WITH T.V Combo, 13,000 மட்டுமே)

(அனைத்திற்கும் ஒரு வருட உத்தரவாதம்)

**STR Computer System**

*384, Navalar Road, Nallur Jaffna.*

T.P - 021 222 4459, 0774192275

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் வடக்கில் யுத்தத்தில் ஈடுபட்டேன் அதேபோல் தெற்கிலும் இதனையே செய்திருப்பேன்

## யாழ்.நகரில் நேற்று நடந்த கூட்டத்தில் பொன்சேகா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன.03

நான் இராணுவ அதிகாரியாக இங்கு இருந்த போது யுத்தத்தில் ஈடுபட்டேன் அது எனது கடமை. அதே சமயம் நான் தெற்கில் இருந்தாலும் இதனையே செய்திருப்பேன். எனது கடமையைத் தவறவிட்டிருக்கமாட்டேன்.

இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சிப் பொதுவேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகா.

நேற்று மாலை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமது தேர்தல் வாக்குறுதிகளை விவரித்து உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாணத்தை நன்கு அறிந்தவன், நான் இங்குள்ள மக்களாகிய உங்களின் பாதுகாப்புக்காக நான் கடமையாற்றியுள்ளேன். உங்களின் அன்பு, கலாசாரம் என்பவற்றையும் இங்கிருந்ததால் நன்கு அறிந்தவன்.

30 ஆண்டுகளாக நடைபெற்ற போரில் இளைஞர்கள் பலரின் உயிர்கள் நம்மை விட்டுப் பிரிந்தன. அதனை எண்ணி நான் மிகவும் வருந்துகின்றேன். ஆனால் வடக்கு, கிழக்கு, தெற்குக்கு என்ன தேவையோ அதனையே புரிந்தேன். தமிழ் மக்களுக்கு சுகாதாரம், உணவு, உடை என்பன கிடைக்கவில்லை ஆனால் இந்த அரசு இதனை அறிந்தும் அறியாதது போல் உள்ளது.

நான் ஜனாதிபதியானதும் இலங்கையில் தமிழ், சிங்களவர், முஸ்லிம் என்று வேறுபாடு இல்லாத நாட்டை உருவாக்குவேன் என்றார்.

அங்கு மற்றும் வாக்குறுதிகள் பலவற்றையும் பொன்சேகா வழங்கினார். அவை வருமாறு:-

* முகாம்களில் அடைத்துவைத்து துன்பத்தை அனுபவிக்கும் மக்கள் உடனடியாக சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவர்.
* அவசரகாலச் சட்டம் உடன் நீக்கப்படும்.
* வீடுகளை இழந்த மக்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு உதவிகள் வழங்கப்படும்.
* 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதுடன் இடைக்கால வருமானம் ஒன்றைப் பெறவும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தல்.
* வேலையற்ற பட்டதாரிகளுக்கும், இளைஞர் யுவதிகளுக்கும் மாதம் 2,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும்.
* பொலிஸார், இராணுவத்தினர் தவிர்ந்த ஆயுதக்குழுக்களின் ஆயுதங்கள் அனைத்தும் களையப்படும்.
* தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ்பேசும், தமிழ் அறிவுள்ள அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.
* சீரற்ற நிலையில் இருக்கும் போக்குவரத்துப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்க்கப்படும்.
* போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களுகளுக்கு பொற்றோல் மானியவிலையில் வழங்கப்படும்.
* விவசாயிகளுக்கு உரிய மானியங்கள் வழங்கப்படும்.
* கொழும்பில் இருக்கும் பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்று யாழ்ப்பாணப் பாடசாலைகளும், வைத்தியசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும்.
* பொலிஸாரின் நடவடிக்கைகளில் தலையிடுபவர்களுக்கு எதிராக உரிய சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

இவை தமது தேர்தல் விஞ் ஞாபனத்தில் அடங்கியுள்ளன என்று தெரி வித்தார் பொன்சேகா. (ஒ-6)

# பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் அனைத்தும் தகவல் தொழில்நுட்ப நகர்களாக மாறும்

## வீரசிங்கம் மண்டபக் கூட்டத்தில் ரணில் தகவல்

யாழ்ப்பாணம், ஜன.03

யாழ்.நகர் உட்பட அகற்றப்படும் அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்கள் அரியாலை, முகமாலை, பூநகரி போன்ற இடங்கள் த்கவல் தொழில்நுட்ப நகர்களாக மாற்றப்படும். இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான ரணில்விக்கிரமசிங்க

எதிர்கட்சியின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.வீரசிங்க மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது வருமாறு:-

ராஜபக்ஷ எந்த நேரத்திலும் தமிழர்களை இனம் கண்டு துன்பங்களை ஏற்படுத்தினார். ஆனால் சரத்பொன்சேகா போரை மாத்திரமே இல்லாது ஒழித்து நாட்டுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தினார். ராஜபக்ஷ எவ்வாறு தமிழர்களை சித்திரவதை செய்ய முடியுமோ அந்தளவிற்கு முகாம்களில் அடைத்து வைத்து சித்திரவதை செய்தார்.

பொன்சேகா ஜனாதிபதியானதும் நிறைவேற்று அதிகார முறையை இல்லாது ஒழிப்பார். அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

இந்த நிலைமையை உருவாக்க தமிழ் மக்களாகிய நீங்கள் தான் உதவவேண்டும். கடந்த முறை போன்று இம்முறையும் தேர்தலை பகிஷ்கரிக்காது அனைவரும் வாக்களிக்க வேண்டும். தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து புதிய ஆட்சி மாற்றம் ஒன்றை உருவாக்க வேண்டும். பொன்சேகா ஜனாதிபதியானதும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கொடுப்பனவுகள் வாழங்கப்படும். 1978 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும். மீன்பிடித் துறைக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்றார். (ஒ-6)



# எவருக்கும் தலை வணங்காத கூட்டமைப்பினர் சரியான முடிவு எடுத்து தமிழரைக் காக்க வேண்டும்

## சாதகமான சமிக்ஞை தெரிகிறது என்கிறார் ஹக்கீம்

யாழ்ப்பாணம், ஜன.03

எவருக்கும் தலை வணங்காத, சரணாகதி அடையாத தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, இந்தத் தருணத்தில் சரியான முடிவை எடுத் து தமிழ் மக்களைப் பாதுகாக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் வந்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். நேற்று மாலை வீரசிங்கப் மண்டபத்தில் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய ரவூப்ஹக்கீம் மேலும் கூறியதாவது :

வடக்கு, கிழக்கில் நடைபெற்ற போராட்டத்தைப் பயங்கரவாதம் எனக்கூறி அடக்கிய அரசு, இன்று அரச பயங்கரவாதத்தை மக்கள் மீது திணித்து வருகின்றது. இந் நிலையில் கொச்சைப்படுத்தப்படாத நீதியான, நேர்மையான அரசியலை நடத்துவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போது சாதகமான சமிக்கையைக் காட்டி வருகின்றது. ஆறு தசாப்தங்களாகப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் தமிழினம் மூன்று தசாப்தங்களாக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தது. ஆனால் தற்போது அது பின்னடைவைச் சந்தித்துள்ளது. இருந்த போதும் தற்போது புதிய போராட்டம் ஒன்றை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.



ஐக்கிய தேசிய முன்னணியினரான நாம் இன்னமும் தமிழ் தேசிய கூட்டமைப்பினருடன் கலந்துரையாடி வருகின்றோம். இது வித்தியாசமான ஏற்பாட்டுடன் நடைபெற்று வரும் தேர்தலாகும். எனவே, தான் நாமும் வித்தியாசமான முறையில் எதிர்கொள்கின்றோம். தமிழ் மக்களாகிய நீங்களும் இத் தேர்தலில் பங்கேற்க வேண்டியது அவசியமாகும். கடந்த முறை போன்று தேர்தலை பகிஸ்கரித்து விடாதீர்கள்! இது எவ் வளவு ஆபத்தானது என் பதை புத்திஜிவிகள் பலரும் எடுத்துக் கூறிவருகின்றனர்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற கசப்புணர்வுகளைத் தூக்கி வைத்துவிட்டு, காலம் காலமாக, பரம்பரை பரம்பரையாக அரசாள முற்படும் ராஜபக்ஷ குடும்பத்தை வீட்டுக்கு அனுப்புங்கள். இன்று புதுப்பிரகாசத்துடன், ஆளுமையுடன் ஜனநாயக அரசியலுக்குத் தன்னை அர்ப்பணித்து வந்துள்ளார் பொன்சேகா.

தெற்கு, வடக்கு, கிழக்கு என்று வாக்களித்த காலம் மாறி, சுயநிர்ணயம் வேண்டும் என்று வாக்களித்த காலம் மாறி, சுதந்திரத்துக்கு எந்த விதமான அரசு எமக்கு வேண்டும் என்ற நிலைமாறும் காலகட்டத்தில் நன்கு சிந்தித்து புத்திஜீவிகளாக இருக்கும் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும்-என்றார். (ஒ-4)

# தேர்தலை பகிஷ்கரித்தால் பின்விளைவுகளை தமிழர்கள் சந்திக்க நேரிடும் என்பது திண்ணம்

## சிந்தித்துச் செயற்படுமாறு அழைக்கிறார் மனோ



யாழ்ப்பாணம், ஜன.03

ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்பது தமிழர்களைப் பொறுத்தளவில் பாரதூரமான பின் விளைவுகளையே ஏற்படுத்தும். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரித்த தனாலேயே மாபெரும் அவல நிலையை தமிழினம் சந்தித்திருக்கின்றது. எனவே சிந்தித்து வாக்களிப்பதே சரியான முடிவாக இருக்கும். அதுவே தமிழருக்கு விடிவாக இருக்கும் என்பது திண்ணம்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான சரத் பொன்சேகாவுக்கு ஆதரவுப் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் சென்றமுறை யாழ்ப்பாணம் வந்த போது இதே மண்டபவாசலில் காணாமற் போன ஒருவரின் தாய் என் கைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டார். அந்தக் கண்ணீர் என் நெஞ்சில் இன்னமும் உறைந்துபோய் இருக்கின்றது. இத்தகைய கண்ணீர்க் கதைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க நமக்குள்ள ஒரே தெரிவு சரத் பொன்சேகாதான்.

மஹிந்த ராஜபக்ஷ அணியில் பேரினவாதக் கருத்துக்களைக் கக்கும் விமல் வீரவன்சவும், சம்பிக்க ரணவக்கவும் முக்கியநபர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய இனவாதிகளைத் தன்னுடன் வைத்திருக்கும் மஹிந்த ராஜபக்ஷ எப்படிச் சிறுபான்மை மக்களுக்கு நீதியான தீர்வைத் தருவார்? எப்படித் தரமுடியும்?

நாட்டிலே இருக்கும் சர்வாதிகார ஆட்சியை அகற்ற இதுதான் சரியான சந்தர்ப்பம். அவ்வாறான ஆட்சி மாற்றத்தை உண்டாக்க வேண்டுமென்ற எண்ணந்தான் யாழ்.மக்கள் மத்தியிலே இருக்கின்றது என்பதை இங்கு பெருந்திரளாகக் கூடியுள்ள மக்கள் கூட்டமே நிரூபித்துள்ளது.

இவ்வாறான மாற்றத்தை வேண்டுகின்ற எண்ணம் இங்குமட்டுமல்ல, இலங்கை முழுவதிலும் தோற்றம் பெற்று, எழுச்சி கொண்டு வருவதால் சரத்பொன்சேகா ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப் படுவது உறுதியாகிவிட்டது- என்றார்.(ஒ-04)

# நல்லூர் ஆலயத்திற்கும் ஆயரிடமும் சென்று சரத் பொன்சேகா நேற்று ஆசி பெற்றார்

யாழ்ப்பாணம், ஜன.3

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின்பொது வேட்பாளராகக் களம் இறங்கியுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா நல்லூர் கந்தசுாமி கோயில், யாழ்.ஆயர் இல்லம் ஆகியவற்றுக்குச் சென்று ஆசிபெற்றுக் கொண்டார்.

ஐ.தே.கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, முன்னணியின் பிரமுகர்களான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, ரவி கருணாநாயக்க, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் சகிதம் சரத் பொன்சேகா நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்குச் சென்று வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

அங்கு நடைபெற்ற விசேட பூசை களில் கலந்து கொண்ட சரத் பொன்சேகா தமது வெற்றிக்காக இறையாசி பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து யாழ். ஆயர் இல்லத்துக்கு பிரமுகர்கள் சகிதம் சென்ற சரத் பொன்சேகா, ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகத்திடம் ஆசி பெற்றுக்கொண்டார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டிய அவசியம், இடம்பெயர்ந்த மக்களின் தற்போதைய நிலைமைகள் உட்பட மக்களின் முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், சரத் பொன்சேகா, ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரமுகர்களுக்கும் தெளிவாக எடுத்து விளக்கினார்.

சரத் பொன்சேகா, ரணில் விக்கிரமசிங்க சோமவன்ஸ அமரசிங்க, ஜயலத் ஜயவர்த்தன உட்பட அனைத்துப் பிரமுகர்களும் ஆயரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டனர்.

அடுத்து யாழ்பாடி ஹோட்டலுக்குச் சென்ற ஜனாதிபதி வேட்பாளரும் ஏனைய பிரமுகர்களில் ஒரு பகுதியினரும் யாழ்.வணிகர் கழகப் பிரதிநிதிகளுடன் முக்கிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர். ரணில் விக்கிரமசிங்காவுடன் ஏனைய சில பிரமுகர்கள் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் இல்லத்திற்குச் சென்று அங்கு காரை நகரில் உள்ள மக்களைச் சந்தித்தனர்.

அதனைத் தொடர்ந்து, யாழ். நகர் மானிப்பாய் வீதியில் ஐக்கிய தேசியக்கட்சியின் அலுவலகம் பிற்பகல் 3.45 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அலுவலகத்தை திறந்து வைத்தார்.(ஒ-1-14-111-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உளம் நெகிழ்ந்த அஞ்சலிகள்



### அமரர் திலகநாயகம் போல்

இலங்கை வானொலியின் முதலாம் தர வாய்ப் பாட்டு இசைக்கலைஞரும், யாழ். பல்கலைக் கழக நுண்கலைப்பீட முன்னாள் வருகைதரு இசை விரிவுரையாளரும், வட இலங்கைச் சங்கீத சபையின் முன்னாள் பரீட்சகரும், யாழ். கல்வித்திணைக்கள இளைப்பாறிய சங்கீத உதவிக் கல்விப்பணிப்பாளரும், சிறந்த இசை யமைப்பாளரும், கைவரப்பெற்ற மெல்லிசைப் பாடகரும், இராகம், தாளம், பல்லவி பாடுவதில் மனோதர்மம் மிக்கவரும், பல விருதுகளையும் பட்டங்களையும் தனதாக்கிய வருமாகிய கலாபூஷணம், சங்கீதபூஷணம்

அமரர் திலகநாயகம் போல்

அவர்களின் ஆத்மா சுருதிலயமோடு சாந்திபெற, உளம் நெகிழ்ந்த அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

அழகியல்பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்,
சங்கீத ஆசிரிய ஆலோசகர்,
சங்கீத, நடன ஆசிரியர்கள்,
வலிகாமம் கல்வி வலயம்.

மருதனார்மடம்,
சுன்னாகம். (91967)

## மரண அறிவித்தல்கள்



### தம்பு சக்திவடிவேல்

(இளைப்பாறிய சிறைச்சாலை உத்தியோகத்தர்)

அந்திரான், சண்டிலிப்பாயை பிறப்பிடமாக வும், சங்கானை, சிலம்புப்புளியடியை வசிப்பிட மாகவும் கொண்ட தம்பு சக்திவடிவேல் 31.12.2009 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-தங்கம்மா தம்பதி யினரின் புதல்வரும் அமரர் ருக்குமணியின் அன்புக்கணவரும், அமரர் தர்மராஜா மற்றும் அன்னபூரணம் (மலேசியா), அருணாசலம், புவனேஸ்வரி, மணிமேகலை, பாக்கியலக்சுமி ஆகி யோரின் அருமைச் சகோதரனும் இரத்தினசிங்கம் (கனடா), சத்தியரஞ்சன் (பிரான்ஸ்), தருமராசா, துரைராசா (கனடா), சந்திரா தேவி, ஜெயச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அருமைத் தந் தையும், அமரர்களான வ.சிவராசா, வீ.அப்புத்துரை, மற்றும் இராச ரத்தினம் (மலேசியா), சிவக்கொழுந்து, அன்னபூரணம், சின்ன மணி, செபமாலை, திருநாவுக்கரசு, ஜனகர் ஆகியோரின் மைத்து னரும் மங்கையர்க்கரசி (கனடா), சுபத்திரா (பிரான்ஸ்) சிலோணி (யாழ்.வீமன்காமம் ம.வி), சிவா (கனடா), கருணாகரன் (இலங்கை மின்சார சபை) சுஜாதா (கனடா) ஆகியோரின் அருமை மாமனாரும் ராதிகா, சுரேகா, லவன், பிரதிஸ் (கனடா), சயிந்தன் (பிரான்ஸ்), அகல்யன், அஜந்தன், அபிராமி (கனடா), ஆதவன், ஆரபி (கனடா), ஜெனோலினா (யா/ இந்து மகளிர் கல்லூரி), சிறீக்குமரா (யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), ஹரீனா (யா/ வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேரனும்,ரனேஸ், ரஸ்வீன் (கனடா) யோசவ்வு, ஜோசான்(கனடா), அபிரா, அலிரா (கனடா) ஆகியோ ரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2010) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலம்புப்புளியடி,
சங்கானை.
T.P. No. 021 300 8130
தகவல் : குடும்பத்தினர் (93215)

### திருமதி தம்பிராசா ருக்குமணி



கல்வளை, சண்டிலிப்பாயைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா ருக்குமணி 28.12.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாக லிங்கம்- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் தம்பிராசாவின் அன்பு மனைவியும் வரதரா ஜன், சிவனேஸ்வரி, அருளானந்தம், செல்வானந்தம், யோகேஸ்வரி, பரமேஸ் வரி, விக்னேஸ்வரி, காலஞ்சென்ற சிவானந்தம் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஜெபச்செல்வம், கௌரி, செல்வராணி, விக் னேஸ்வரன், மணிராஜ் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கம் புலவு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்வளை,
சண்டிலிப்பாய் (93217)
தகவல் : குடும்பத்தினர்.

### வரணி ஆஸ்பத்திரியில் மகப்பேற்று மனை

வரணி பொது வைத்தியசாலையின் மகப்பேற்று மனை தற்சமயம் செயற்படத் தொடங்கியுள்ளது.

வன்னி நலன்புரி முகாம்களில் இருந்து தென்மராட்சிப் பிரதேசத்துக்கு அதிகளவு எண்ணிக்கையில் கர்ப்பிணித் தாய்மார் வந்து சேர்ந்துள்ளதன் காரணமாக மகப் பேற்று மனையை இயங்கவைக்க யாழ். சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. தற்சமயம் இரவு வேளையிலும் இந்த மகப்பேற்று மனை யில் பணியாளர்கள் கடமை புரிகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-122)

### புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறு

ACCA புலமைப்பரிசில் பரீட்சைப் பெறு பேறுகள் வெளியாகியுள்ளன. தெரிவு செய் யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரங் களை யாழ். தொழில்நுட்ப நிறுவனத்தின் விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

இதேவேளை, ACCA கற்கைநெறி வழிகாட் டிக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (ஒ-07)


### SWORN TRANSLATIONS

வெளிநாடுகளுக்குத் தேவையான சகல ஆவணங்களும் ENGLISH, FRENCH, GERMAN, ITALIAN, SWEDISH, PORTUGUESE, SPANISH, ARABIC மொழி பெயர்புகளுக்கு நாடுங்கள் :

T.K.INTERNATIONAL
LANGUAGE TRANSLATION SERVICE,
No: 218, BASEMENT, HULFTSDORP STREET,
COLOMBO-12. TEL: 0718258714
(சி/563715)

### தரம் 5 வகுப்புகள்

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு யாழ்.மாநகர சபை பிரதேசத்திற்குள் வீடுகளுக்கு வந்து பிரத்தி யேகமாக பிரபல ஆசிரியரால் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- T.P- 0772487080
B.M. தரன்
15, கோயில் வீதி / புகையிரத லேன்,
யாழ்ப்பாணம். (93216)

### சாதாரண தொழிலாளி-தேவை

45 வயதுக்கு மேற்பட்ட ஆண் தொழிலாளி உடன் தேவை.
தொடர்பு: பணிப்பாளர்,
சென்றல் நேசிங் ஹோம்,
350, பலாலி வீதி, திருநெல்வேலி.
(சி/563861)

### தவறிவிட்டது

N.P JT- 5774 இலக்க மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு தவறிவிட்டது. கண்டெடுத்தோர் 0789133646 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (93231)

### வீடு விற்பனைக்கு

வீட்டோடு சேர்ந்த 8½ பேர்ச்சஸ் கொண்ட காணி விற்பனைக்குண்டு. அமைதியான சுற் றுச் சூழலில் நீதிமன்றத் தொகுதியின் பின் னால் சாஞ்சி ஆராய்ச்சிகேவத்தை, கொழும்பு 12 இல் உள்ளது.
தொடர்பு கொள்ளவும்
0712719453
(சி/563716)

### காணவில்லை

01.01.2010 நண்பகல் 12 மணியிலி ருந்து கறுப்புநிற பொக்கெட் பெண் நாய்க்குட்டி (Pocket Dog) வால் நல்ல சடையும் செம்படைக்கலரும். யாராவது கண்டால் கீழ்க் குறிப்பிடும் விலாசத்துக்கு தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் தரப்படும்.

சி.சத்தியமூர்த்தி,
கணேசா பத்திரிகைக் கடை,
329, பிரதான வீதி, பருத்தித்துறை,
தொ.பே.: 0212263928

### A/C பஸ் புக்கிங் சென்ரர்

யாழ்-கொழும்பு,
கொழும்பு-யாழ்.

முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசான பாதுகாப்பான பயணத்திற்கு முன்கூட்டியே ஆசனப் பதிவுகளை மேற்கொள்ளலாம். உங்கள் பதிவுகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கங்கள்




யாழ்ப்பாணத்தில் : 021 222 7125, 021 222 3817
கொழும்பில்: 0113133811, 0113133815.
பஸ் புறப்படும் நேரம் காலை 7 மணி
கட்டணம் 200 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.
இடம் : யாழ்.போன்சொப்
நவீனசந்தை, இல.9 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

### Computer Express

INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
No.167, Kasthuriyar Road, Jaffna. Tel: 021 222 8250

1 வாரகால முழுநேரக்கற்கை நெறிகள்...

**Diploma in Film Technology & Video Editing**

Adobe Photoshop
Cool 3D Studio
VCD Cutter
Capturing
Pinnacle Studio
Adobe Premiere
Internet & e mail

**Diploma in Hard ware Engineering & Net working**

System Configuration, Hardware Devices
Assembling, Repairing, Trouble Shooting
Installation of Hardware & Software, Project Works
Internet & e mail

**Diploma in Graphic Designing & Adverdisement Marketing**

Photoshop ,Macromedia Flash
Corel Draw, Cool 3d Studio
Internet & e mail

**DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE**

Course Module Quick Book + ACCPAC + MOYOB
Fundamentals of IT, Manual Accounting, Financial Accounting, Cost Accounting, Taxation (Including VAT), Stork Control, Bank Reconciliation, Budgeting, Fore Casting, Business Planing
VAT ஐயும் உள்ளடக்கியது

வகுப்புக்கள் ஆரம்பம் :- Batch. i - 4.01.2010 - 9AM
Batch ii - 5.01.2010 - 9AM
Free Software CDs



## பதவி வெற்றிடம்

கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஏற்றுமதிக்கு உணவுகள் பதனிடும் தொழிற்சாலை ஒன்றிற்கு கீழ்காணும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

01. தொழிற்சாலை, தர உத்தரவாத உத்தியோகத்தர் (ஆண்)
(Factory and Quality Assurance Officer)
தகைமைகள்
★ க.பொ.த உயர்தர கணித,விஞ்ஞானம் சித்தி (விஞ்ஞான பட்டதாரி விரும்பத்தக்கது)
★ உணவு விஞ்ஞான தொழில்நுட்பவியலில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையுடைய வர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. கொள்வனவு உத்தியோகத்தர் (ஆண்)
(Purchasing Officer)
★ க.பொ.த. உயர்தரம் சித்தி

03. மேற்பார்வை உத்தியோகத்தர் (ஆண்)
Supervising Officer
★ க.பொ.த உயர்தரம் சித்தி

கொழும்பிலுள்ள இரும்பு விற்பனை நிலையம் ஒன்றில் பணிபுரிய ஆண் விற்பனை உதவியாளர் (Salesman) தேவை. முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

மேற்படி பதவிகளுக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் தொடர்பான சகல கல்வித்தராதரங்கள், அனுபவங்கள் தொடர்பான சான்றிதழ்களின் போட்டோப் பிரதி மற்றும் உங்கள் தொடர்பான விவரங்களைப் பெறக்கூடிய உறவினரல்லாத இருவரினது விவரங்கள் என்பவற் றினை 14.01.2010 ஆம் திகதிக்கு முன்னராக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நாகலிங்கம் அன் சன்ஸ்,
கே.கே.எஸ் வீதி,சுன்னாகம்.
(93204)

### Garden City College
Bangalore, India




A permanent affiliated institution of Bangalore University, Approved by AICTE-Govt. of India,Accredited by NAAC & an ISO 9001:2000 Certified Institution

Apply Now!

COMPUTER
B.Sc - Computer Science, Statistics & Mathematics
BCA - Bachelor of Computer Application
MCA - Master of Computer Application

FASHION
B.Sc - Fashion & Apparel Design

LIFE SCIENCES
B.Sc - Genetics, Microbiology, Chemistry
B.Sc Biotechnology, Bio Chemistry / Chemistry, and Genetics
M.Sc Microbiology
M.Sc Biochemistry
M.Sc.Biotechnology
M.Sc Applied Genetics

TOURISM
B.A - Tourism, History & Journalism
MTA - Master of Tourism Administration

MEDIA STUDIES
B.A - Journalism, Psychology & English
M.S. Communication
M.Sc - Electronic Media

LAW
B.A LLB

COMMERCE & MANAGEMENT
B.Com - Bachelor of Commerce
B.B.M - Bachelor of Business Management
B.H.M - Bachelor of Hotel Management
M.T.F-Management Trainee in Food and Beverage Operations
MBA - Master of Business Administration

MEDICAL FACULTY
BPT - Bachelor of Physiotherapy
MPT - Master of Physiotherapy
B.Sc - Nursing
M.Sc - Nursing
BASLP - Bachelor of Audiology and Speech Language Pathology

Contact Mrs. Amutha Gobalan for further details
(Former Teacher / Registrar - Royal College, Colombo - 7)

EduCare INTERNATIONAL
18/3, Dr. E A Cooray Mawatha,
Colombo 6.
Tel. 0718186185 (HOTLINE)
2596676, 5235462 (After Office Hours)
Fax. 0112 360976
Email : educareintlsri@gmail.com

O/L தகமையுடன் பட்டதாரியாகுங்கள்!!!

மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2010

விண்ணப்பிக்கும் ... புலமைப்பரிசில்!!!

### விண்ணப்பித்துவிட்டீர்களா?

மேற்படி திட்டத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் உங்கள் கற்கைநெறியை குறைந்த கட்டணத்தில் கற்பதுடன் வெளிநாடுகளில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவிலும் பங்குபெற முடியும்!!!

போட்டிப் பரீட்சை பொது அறிவு, நுண்ணறிவு சார்ந்ததாக அமையும்!!

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் விரும்பின் வங்கிக் கடன் வசதி செய்து தரப்படும்

இக் கற்கைநெறிக் காலத்திலேயே எமது நிறுவனத்தின் ஊடாக MCP, MCSA, MCSE கற்பதன் மூலம் 4 பட்டங்களையும் ஒரே நேரத்தில் அள்ளிச் செல்லுங்கள்!!!

பட்டப்பின் படிப்பு, 2ம், 3ம் வருடங்களை வெளிநாடு ஒன்றில் தொடர்வதற்கான ஒழுங்குகள் Part Time Job உடன் செய்து தரப்படும்!

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

NORTH LANKA IIT
#113, Laxan Plaza,
Navalar Road, Jaffna.
0213214305 , 0217390110
0217290779


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போலி மரியாதை



ஜேர்மனிய சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லர் ஒருசயம் மாறு வேடத்தில் திரைப்படமொன்றைக் கண்டு களிப்பதற்காகத் திரையரங்கு ஒன்றுக்குச் சென்றிருந்தார்.

அது ஹிட்லர் ஜேர்மனியைக் கட்டியாண்டு வந்த காலகட்டம். படத்தின் முடிவில் ஹிட்லரின் படம் திரையில் காட்டப்பட்டது. படம் பார்க்க வந்திருந்த அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து நின்று ஹிட்லரின் உருவத்துக்கு வணக்கம் தெரிவித்து மரியாதை செலுத்தினர். ஆனால் அந்தப் படத்தைப் பார்க்க வந்திருந்த ஹிட்லர் மட்டும் இருக்கையை விட்டு எழாமல் உட்கார்ந்திருந்தார்.

ஹிட்லருக்கு அருகிலிருந்த ஒருவர் ''எனக்கும் எழுந்து மரியாதை செலுத்தமால் உம்மைப்போல் உட்கார்ந்திருக்க ஆசைதான். ஆனால் அதனை வேறு யாராவது அவதானித்து விட்டால் எங்கள் பாடு ஆபத்துதான்.

ஆதலால் ஹிட்லர் குறித்து மனதில் வெறுப்பு இருந்தாலும் நீரும் எழுந்து நின்று ஹிட்லரின் படத்துக்கு வணக்கம் தெரிவித்து மரியாதை செலுத்துவது தான் நல்லது'' என மாறு வேடத்திலிருந்த ஹிட்லரிடம் தெரிவித்தார். அதைக் கேட்டதும் ஹிட்லருக்கு எப்படி இருந்திருக்கும்?★★

கே.கரன், நல்லூர்.

# இசைக்கு மொழி ஏது?



தலைசிறந்த கர்நாடக இசைமேதை எம்.எஸ் சுப்புலட்சுமி ஐக்கிய நாடுகள் சபையில் இசைக் கச்சேரி செய்த பெருமைக்குரியவர். 1966 ஆம் ஆண்டில் ஐ.நா. சபையில் தமது இசைக்கச்சேரியை நிகழ்த்தி முடித்த பின்னர் அமெரிக்காவிலுள்ள இந்திய நண்பர்கள் பலரது அழைப்பின் பேரில் அவர்களது வீடுகளுக்கு அவர் விஜயம் செய்தார்.

அவ்விதம் ஒரு சமயம் நண்பர் ஒருவரின் வீட்டுக்கு விஜயம் செய்த வேளை, அவ்வீட்டில் கூடிய இந்திய நண்பர்களின் வேண்டுகோளின் பேரில் அவ்வீட்டில் அவர் தமது இசைக்கச்சேரியொன்றினை நிகழ்த்த நேர்ந்தது.

அந்த வேளையில் பக்கத்து மாடியில் ஏதோ தச்சு வேலை நடந்து கொண்டிருந்தது. அதன் போது பயன் படுத்தப்பட்ட சுத்தியல், வாள் என்பவற்றால் ஏற்பட்ட சத்தம் எம்.எஸ்.ஸின் கச்சேரிக்குத் தொந்தரவாக இருந்தது.

ஆனால் அந்த இடையூறு எதனையும் பொருட்படுத்தாமல் எம்.எஸ். மெய்மறந்து கணீரென்ற குரலில் பாடிக்கொண்டிருந்தார்.

திடீரென்று தச்சுவேலையால் ஏற்பட்ட சத்தங்கள் அனைத்தும் நின்று விட்டன.

தச்சு வேலையில் ஈடுபட்டிருந்த வேலையாள்கள் அனைவரும் எம்.எஸ். பாடிக்கொண்டிருந்த வீட்டிற்கு வந்து ''எங்களுக்கென்னமோ இந்த மொழி புரியவில்லைத்தான், ஆனாலும் இந்த இசை எங்கள் உள்ளத்தை உருக்குகின்றது. நாங்களும் இதனைக் கேட்டு ரசிக்க அனுமதிப்பீர்களா?'' என வீட்டுக்காரரைக் கேட்டு அவரின் அனுமதியுடன் எம்.எஸ்.ஸின் இசைக் கச்சேரியை அமைதியாக இருந்து கேட்டு ரசித்தனர். ★★

க.ராதிகா, துணாவில்.

# நகரும் வீடு - ஆமை



பலகோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆமை இனம் பூமியில் வாழ்ந்து வருவதாக ஆய்வாளர்கள் நம்புகின்றனர். முதுகெலும்புள்ள பிராணிகளில் அதிக காலம் உயிர் வாழக்கூடியவை ஆமைகள் தான். சுமார் 150 ஆண்டுகள் வரை இவை உயிர் வாழ்கின்றன. ஒரு சில இனங்கள் 200 ஆண்டுகளுக்கு மேலாகவும் உயிர்வாழ வல்லன.

ஆமைகளில் சுமார் 275 வகைகள் உள்ளதாகக் கணக்கிட்டுள்ளனர். பச்சை ஆமை, பெருந்தலை ஆமை, நட்சத்திர ஆமை, கடல் ஆமை என்பன இவற்றில் சிலவாகும்.

ஆமைக்குப் பாதுகாப்பு அதன் மேலோடு தான். சிறுவர்களது கண்களில் பட்டு விட்டால் போதும், அவற்றின் மீது கல்லெடுத்தெறிந்து தாக்குவதில் அவர்கள் இன்பம் காண்பார்கள். அது மட்டுமல்லாது ஆமைகளைக் கண்டால் ஏனைய சில பிராணிகளும் பறவைகளும் கூட அவற்றைத் தாக்கிக் கொன்று உண்பதற்கு விளைகின்றன. அந்த வேளைகளில் மற்றப் பிராணிகளைப் போல வேகமாக ஓடி ஒளிந்து தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள ஆமைகளால் இயலாது. ஏனெனில் ஆமைகளால் வேகமாக நகரமுடியாது. எனவே தான் ஏதாவது ஆபத்து ஏற்படும் வேளைகளில் உடனே தமது தலை, வால், கால்களை உள்ளே இழுத்துக் கொண்டு ஆமைகள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் அவற்றின் உடலமைப்பு அமைந்துள்ளது. ஆமைகளின் பாதுகாப்புக்கு அவற்றின் மேலோடு உதவுவது போன்று, அவற்றால் வேகமாக அசைய முடியாமலிப்பதற்கும் அவற்றின் மேலோடே காரணமாகின்றது. கழுத்து, கால், வாலைத் தவிர விலா எலும்புகளையோ வேறு ஊறுப்புகளையோ ஆமைகளால் அசைக்க இயலாது.

நிலத்தில் மட்டும் வாழும் இன ஆமை சைவ உணவுகளையே உண்பன. முட்டைக்கோஸ் இலை என்றால் இவைகள் விருப்புடன் உண்கின்றன. தவிர காய்கறிகள், இலைதழைகள், பழங்கள் போன்றவற்றை இவை உண்கின்றன. கடல் ஆமைகள் அசைவம் உண்ணக் கூடியவை. சிறிய புழு, நத்தை, மீன்கள், இறந்த கடற்பிராணிகள், கடற்பாசிகள் மற்றும் அழுக்குகளை கடல் ஆமைகள் பெரும்பாலும் தமது உணவாகக் கொள்கின்றன.

ஆமைகளுக்கு பறகளே கிடையாது. ஆனால் உறுதியான தமது அலகுகளால் இவை உணவை வெட்டி விழுங்கிவிடுகின்றன. அது மட்டுமன்றி ஆமைகளால் மாதக்கணக்கில் எதுவுமே உண்ணாமல் உயிர் வாழவும் இயலும்.

நிலத்தில் மட்டும் வாழும் ஆமைகளின் முதுகு குவிந்து காணப்படும். கடல் ஆமைகளில் முதுகு தட்டையாக இருக்கும். அவைகளுக்கு நீந்துவற்கு ஏற்ற வகையில் கால்களில் சவ்வுப் படலம் அமைந்திருக்கும்.

ஆமைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் இனத்தைச் சார்ந்தவை. ஆமைகள் ஒருதடவையில் 20 முதல் 30 வரை முட்டைகளை இடுகின்றன. சில வகை கடல் ஆமைகள் ஒருதடவையில் நூறு முதல் 200 முட்டைகள் வரை இடக்கூடியவை. ஆமைகள் காலாலும் வாலாலும் நிலத்தைத் தோண்டி மண்ணுக்குள் முட்டைகளை இட்டு மூடி விடுகின்றன. சூரிய வெளிச்சத்தில் குஞ்சுகள் ஒரே சமயத்தில் பொரித்து வெளிவருகின்றன. ஆமைகளை அவற்றின் ஓடு கீழ் நோக்கியிருக்குமாறு திருப்பிப்போட்டால் அவற்றால் பழையபடி திரும்பிக் கொள்ளவே இயலாது.★

து.ஜெயரூபன், கந்தரோடை.

# வாழ வழிகாட்டிய உத்தமர்கள்





நபிகள் நாயகம் தமது தோழர்களிடம் ''வலிமையுள்ளவன் யார்?'' என்று கேட்டார். அதற்கு அவர்களில் ஒருவர் ''எவன் மக்களை வீழ்த்துகின்றானோ அவனே வலிமையுள்ளவன்'' என்றார். அதற்கு நபிகள் நாயகம் ''இல்லை, கோபம் வந்தவேளையில் யார் தனது கோபத்தை அடக்கி ஆள்கின்றானோ அவனே வலிமையானவன்'' எனக் கூறினார்.

பல சித்திகள் தெரிந்த சித்தர் ஒருவர் புத்தரைச் சந்தித்தார். புத்தரிடம் சிப்பி ஒன்றைக் கொடுத்த அந்தச் சித்தர் ''இந்த சிப்பிக்குள் விலை உயர்ந்த முத்து உள்ளது. சிப்பியை உடைத்து முத்தை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்றார்.

அதற்குப் புத்தர் ''முத்து எவ்வளவுதான் விலை உயர்ந்ததாக இருக்கட்டுமே, ஓர் உயிரைக் கொல்வது என்பது என்னால் முடியாது. சிப்பியை நீயே எடுத்துச் செல்'' என்று கூறிவிட்டார்.

ஒரு சமயம் சிறுமி ஒருத்தியின் காலில் காயம் பட்டு இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. அச்சமயம் அன்னை தெரேசா அந்த வழியாக வந்தார். அழுது கொண்டிருந்த சிறுமியிடம் ''நீ அழக்கூடாது, உனக்கு வலிக்கிறது என்றால் அது யேசுபிரான் உனக்குத் தரும் முத்தங்கள் என எண்ணிக்கொள்'' எனக் கூறினார் அன்னை தெரேசா.

அதைக்கேட்டுத் தனது அழுகையை நிறுத்திய சிறுமி ''அம்மா, எனக்கு இவ்வளவு முத்தங்கள் தர வேண்டாம் என யேசுபிரானிடம் கூறுங்களேன்'' என வேண்டிக்கொண்டாள்.★

ஆர்.சாளினி, மானிப்பாய்.

# காட்சிப் பொருளாகும் பரிதாபநிலை இவருக்கு....



கடவுள் தான் மனிதனைப் படைத்ததாக சகல மதங்களுமே கூறுகின்றன. எந்தவொரு உடற்குறைபாடுமின்றி வாழ்பவர்கள் பெரும் புண்ணியம் செய்தவர்கள் என்றே கருதப்படுகிறது. அது எவ்வாறான போதிலும் இயல்பான உடலமைப்புக்கு மாறுபட்ட விதங்களில் காணப்படும் சிறுசிறு குறைபாடுகளைத் தமது உடலில் கொண்டிருப்போர் பெரும் மனஉழைச்சல், தாழ்வு மனப்பான்மை உணர்வுகளுடன் வாழ்நாள் முழுவதிலும் அக்குறைபாடுகளைச் சுமந்துகொண்டு மனவேதனையுடன் வாழ வேண்டி நேர்வது பரிதாபமே.சிலரது உடலில் மச்சங்கள், மறுக்கள், உண்ணிகள், பாலுண்ணிகள், சிறு கட்டிகள் வளர்வதை நாம் கண்டிருக்கிறோம்.

இந்தோனிசியா ஜாவாத்தீவின் 'பங்ரங்' கிராமத்தைச் சேர்ந்த இம்மனிதரின் உடலில் ஒருவிதமான உண்ணிகள் அவரது 15 வயதிலிருந்து வளர ஆரம்பித்து இன்று பயங்கரமாக வளர்ந்து விட்டுள்ளன. அவரது 15ஆவது வயதில் முழங்காலில் ஏற்பட்ட சிறு வெட்டுக்காயம் குணமடைந்ததையடுத்து அந்த இடத்தில் இந்தவித உண்ணிகள் வெளிப்பட ஆரம்பித்தன. அவை படிப்படியாக அடுக்கடுக்காக உடலின் பல பாகங்களிலும் வளர்ந்து பரவி அவரை இந்த நிலைக்கு உள்ளாக்கியுள்ளன. 'டீட' என அழைக்கப்படும் இவரது கைகளிலும் கால்பாதங்களிலும் இவ்விதம் பயங்கரமான விதத்தில் இந்த உண்ணிகள் வளர்ந்து வருகின்றன.

''ஹியுமன்பெப்பிலோமா'' என்ற வைரஸின் காரணமாகவே இவை இவ்விதம் உடலில் வளர்கின்றன எனவும், இவரது உடலினுள் இயல்பிலேயே அமைந்துள்ள அசாதாரணமான மரபணுக்களின் பிறழ்வு நிலையே இவரது இந்த நோய்க்கு காரணம் என்பதோடு இதனைக்கட்டுபடுத்த இயலாது எனவும் மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. இருந்த போதிலும் 2008 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையொன்றின் மூலம் நான்கு இறாத்தல் உண்ணிகள் மருத்துவர்களால் இவரது உடலிலிருந்து அகற்றப்பட்டன. மரமனிதன் (TREE MAN) எனக் காரணப் பெயரால் அழைக்கப்படும் இந்த மனிதருக்கு ஏற்பட்டிருக்கும் சோக நிலை, மனஉளைச்சல், ஆதங்கம் உலகில் எவருக்குமே ஏற்படக்கூடாது.★

லங்காதீப சிங்களப் பத்திரிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம்

கோப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் அறிவித்துள்ளார். (204-72)

## மரண அறிவித்தல்

### கலாபூஷணம் சைவப்பெரியார் சின்னப்பு அரசஇரத்தினம் (ஜே.பி)

(மாவிட்டபுரம் இந்துக் கல்லூரி கனிஷ்ட பிரிவு மற்றும் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை ஆகியவற்றின் முன்னாள் அதிபர், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபக உறுப்பினர், உடுவில் கிராமோதய சபையின் தவிசாளர், சங்குவேலி கிராம அபிவிருத்திச் சங்கம், சுன்னாகம் ப.நோ.கூ.சங்க கிளை இல 6 என்பவற்றின் உறுப்பினர், சங்குவேலி வெட்டுக்கட்டை சித்திவிநாயகர் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் மற்றும் சங்காபிஷேகம் ஆகியவற்றின் உபயகாரர், மேற்படி ஆலய தர்மகர்த்தா)



சங்குவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு அரசஇரத்தினம் (ஜே.பி) தனது 87 ஆவது வயதில் ஆயிரம் பிறைகண்டு 31.12.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னப்பு - பொன்னம்மா தம்பதியினரின் மகனும் கொக்குவில் உடையார் ஒழுங்கை காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் (சித்திரம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சி.துரைராசா (பெற்றாலிங் ஜயா), சி.சின்னத்துரை (மலேசியா), சி.மங்களேஸ்வரி (மங்களம் - மலேசியா), சி.சிங் கராசா (மலேசியா), சி.சின்னம்மா (சென்னை), சி.கந்தசாமி, R.P.M குருநாகல் ஆகியோரின் ஆசைச் சகோதரனும் அ.அரசகுலசேகரன் (பிறேம், B.A. ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), திருமதி கெ.இந்திராணி ஆகியோரின் அருமைத் தந்தையும் ந.கெங்காசுதன் (இ.போ.ச. - யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மந்துவில் இ.மோகனமுகுந்தன், கொக்குவில் கிழக்கு மகேஸ்வரன் - திலகவதியம்மாவின் மகள் நளாயினி ஆகியோரின் அருமை மாமனும் காலஞ்சென்ற மோ.தாரணி (உடுவில் மகளிர் கல்லூரி பழைய மாணவியும் மின்னியல் தொழில்நுட்பவியல் டிப்ளோமா பட்டதாரியும்) மற்றும் கெ.தேமதுரா (உடுவில் மகளிர் கல்லூரி), அ.மோகனமுரளி, அ.ஆர்த்திகாயினி ஆகியோரின் நேசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்குவேலியில் அவரது இல்லத்தில் இன்று (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று சங்குவேலி சங்கம்புலவு இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொலைபேசி இலக்கம்*
*021 373 7840,*
*077 9672742* (93227)

தகவல்: அ.அரசகுலசேகரன் [மகன்]
[ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்].

## தேவை

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட லொறிகளை (கன்ரர் Trucks) யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்வதற்கு உடனடியாக விற்பனை முகவர் தேவை.

**தொடர்பு: 0714252443** (93228)

## சமையல் வேலையாள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உல்லாச விடுதிக்கு உடனடியாக Western, chinese, indian உணவுவகைகள் தயாரிக்கும் நன்கு அனுபவமுள்ள சமையல் ஆளும் சமையல் உதவியாளும் மற்றும் விடுதி உதவியாளரும் தேவை. சுயவிபரத்துடன் உடனடியாக தொடர்புகொள்ளவேண்டிய முகவரி.

*கிரீன் கிராஸ் ஹோட்டல்*
NO: 33 Aseervatham lane, Hospital Road, jaffna T.p-021-222-4385

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே, சுயதெரிவு முறைபற்றிய வரன் முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவு முறை முன்னோடி-தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி
2360488, 2360694, 4873929.

## அறை/வீடு வாடகைக்கு

கொழும்பு வெள்ளவத்தையில் AC/NON AC அறைகள், 2 அல்லது 3 அறைகளுடன் கூடிய வீடுகள் நாள் அல்லது மாத வாடகைக்குண்டு. தொலைபேசி மூலம் பதிவுகள் மேற்கொள்ளலாம்.

**Suriyan Rest,**
**18/3, Station Road, Wellawatta.**
**T.P.0112581441, 0112556175.**

## புறொய்லர் தேவை

புறொய்லர் கோழிகள் உடன் தேவை. கூடிய விலையில் கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: **மல்ரி பாம் சென்ரர்**
61, இராமநாதன் வீதி,கலட்டி.தொ.பே: 021 7912783

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட்ஸ், முட்டை என்பன மலிவான விலையில் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: **மல்ரி பாம் சென்ரர்**
61, இராமநாதன் றோட், நாச்சிமார் கோவிலடி

## வீடு தேவை

எமது வைத்தியசாலைக்கு அண்மையில் ஒரு வீடு வாடகைக்குத் தேவை

**பணிப்பாளர்,**
**சென்றல் நேசிங் ஹோம்**, திருநெல்வேலி.

## ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம

### தபால் மூல ஆங்கிலப் பாடநெறிகள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

கிளாஸ் போகும் காலம். நேரம் மிகுதி / குருகிய காலம் / ஆங்கில முன் அறிவு தேவையில்லை. வயது கட்டுப்பாடு இல்லை.
வீண் கட்டணங்கள் செலுத்தத் தேவையில்லை.



**இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் உங்களுக்கு**

இலவச அழகிய பேக் ஒன்றும் **Dialog Sim Card** ஒன்று **Spoken English Book** ஒன்றும் **Spoken English Video CD** என்பன இலவசமாக வழங்கப்படும்.



எமது Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை மற்றும் தொழில் வாய்ப்புக்கு வேண்டிய வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்


மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

### வீட்டுக் கிருத்திய அழைப்பு

தோற்றம்
25
★
10
★
1913



மறைவு
02
★
12
★
2009

### அமரர் செல்லப்பா கிருஸ்ணமூர்த்தி

கடந்த 02.12.2009 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கந்தசாமி கோவிலடி,
இணுவில் மேற்கு, இணுவில். (93227)

**க.நித்தியானந்தம்**
**குடும்பத்தினர்.**

## ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME

- A three-month English course for School leavers/Job seekers.
- The Course content comprises the four skills - Listening, Speaking, Reading & Writing.
- Evaluation & Award of certificate at the end of the programme.
- Free Handouts.

Commencement 11th January 2010

Lessons on Weekdays from 3.30 - 5.45 p.m.

Application Forms could be obtained at the College office.

**Closing Date: 09th January 2010**

*Awarding Ceremony for the previous batch will be held on 20th Jan. 2010 at 3.30 p.m. Parents are invited.*

***English Language Teaching Unit***
***St. John's College, Jaffna***

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## வீதி திருத்த வேலைக்கான கற்கள் வழங்குதல்

### யாழ்.மாவட்டத்தில் வீதிதிருத்த வேலைகளுக்கான கற்கள் வழங்குவதற்கான கேள்வி கோரல்

1.பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை .. யாழ்ப்பாணம் வீதி திருத்த வேலைக்கான கற்கள் வழங்குவதற்கான மூடிய கேள்விப் பத்திரங்களை பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம், கேள்விச்சபையின் சார்பாக பெற்றுக்கொள்வார், கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறை 11.01.2010 அன்று முற்பகல் 10 மணியுடன் முடிவடையும். கேள்விப் பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் யாழ்ப்பாணம் காரியாலயத்தில் கிடைக்கும் கேள்விப் பத்திரப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் பத்திர ஆவணங்கள் 04.01.2010 தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | கற்களில் அளவு (Size) | Town (Qty) | Anaikodai (Qty) | Velanai (Qty) | Manthikai (Qty) | Meesalai (Qty) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2" (50 mm) | 250 மீ.கீயுப் | 400 மீ.கீயுப் | 250 மீ.கீயுப் | 250 மீ.கீயுப் | 250 மீ.கீயுப் |
| 2 | ¾" (50 mm) | 75 மீ.கீயுப் | 100 மீ.கீயுப் | 75 மீ.கீயுப் | 75 மீ.கீயுப் | 75 மீ.கீயுப் |
| 3 | ½" (12.5 mm) | 200 மீ.கீயுப் | 200 மீ.கீயுப் | 200 மீ.கீயுப் | 200 மீ.கீயுப் | 200 மீ.கீயுப் |
| 4 | Chips 6.3 mm | 200 மீ.கீயுப் | 200 மீ.கீயுப் | 200 மீ.கீயுப் | 200 மீ.கீயுப் | 200 மீ.கீயுப் |
| 5 | Crusher Dust | - | - | - | - | 100 மீ.கீயுப் |

2.மூடி ஒட்டப்பட்ட கேள்விப் பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை இல.761, கடற்கரை வீதி யாழ்ப்பாண அலுவலகத்தில் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3.கிடைக்கப்பெற்ற கேள்விப் பத்திர ஆவணங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, இல.761, கடற்கரை வீதி யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப் படும். கேள்விப் பத்திரம் திறக்கப்படும் குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்கு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

எந்திரி.வி.சுதாகர்
பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
[illegible]
[illegible] 021 222 2968 (சி/563860)

## பதவி வெற்றிடம்/Vacancy

1. **Office Staff**
   Qualification: G.C.E(O/L, & A/L), Computer Knowledge
2. **Office Boy**
   ***( சுத்தப்படுத்துபவர்/ உதவியாளர்)***

**நேர்முகத்தேர்விற்கு 5ம் திகதி நேரில் வரவும்**
நேரம் : 11.00 am - 3.00 pm வரை

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No. 15, Second Floor, Sirambiyadi Lane, (Off Stanly Road) (கொசி ஹோட்டலுக்கு மேல்)
Jaffna, Tel: 021 2224550 (563857)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி முறையில் தமிழ்பேசும் மக்களுக்கு அரசியல் விமோசனம் எதுவும் சாத்தியமில்லை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப மாநாடு மருதானையிலுள்ள அரசாங்க எழுதுவினைஞர் சேவைச்சங்க மண்டபத்தில் 18.12.1949 அன்று நடந்தபோது, கட்சியின் ஸ்தாபகத் தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகம் கியூ.ஸி. அவர்கள் அதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஆரம்ப மாநாட்டில், அவர் ஆற்றிய உரை இது.

வரவேற்புக் கழகத் தலைவருக்கும் இலங்கையின் பற்பல பகுதிகளிலிலுமிருந்து இங்குவந்து குழுமியிருக்கும் பிரதிநிதிகளுக்கும் எனது அன்பான வணக்கம்.

இன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமை வகிக்கும் படி என்னைத் தெரிந்தெடுத்துக் கௌரவித்ததற்காக எனது மனப்பூர்வமான நன்றியறிதலை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நீங்கள் எனக்கு அளித்திருக்கின்ற பெரும் பொறுப்பினை நோக்கும்போது, அவற்றையெல்லாம் கொண்டு நடத்துவதற்குப் போதுமான வன்மை என்னிடமிருக்குமோ என்று ஐயுறுகின்றேன். எனினும், நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து எனக்கெனக் குறிக்கும் பணியினை ஏற்று எங்கள் நோக்கத்துக்காக நான் தொண்டு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். என்னைத் தலைவராகத் தெரிவுசெய்ததில் நல்ல நியாயம் ஒன்று மாத்திரம் இருக்கின்றது. அது, இலங்கையில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்கள் அடைந்திருக்கும்

**அறுபது வருடங்களுக்கு முன்னர் நிலவிய அதே அரசியல் பின்னடைவு நிலையிலேயே இன்றும் - தனக்குரிய உரிமைகளை இழந்து - நிற்கிறது இலங்கைத் தமிழினம். அன்று பெரியார் சா.ஜே.வே.செல்வநாயகம் தீர்க்கதரிசனத்துடன் வெளியிட்ட கருத்துக்கள் இப்போதும் பொருந்துவனவாக அமைகின்றன. அவற்றின் பெறுமதிகருதி இன்றைய சந்ததியினரும் தெரிந்து கொள்ளும் முகமாக உதயனின் ஞாயிறு வெளியீட்டில் இவ்வாரம் தொடக்கம் தொடர்ந்து வெளிவருகிறது.**

பரிதாப நிலைமையினையும், அவர்கள் அதினின்று நீங்கி விடுதலை பெறுவதற்காக ஓர் இயக்கம் அவசியமாகும் என்பதையும் நீங்கள் உணரும் அளவுக்கு யானும் உணர்கின்றேன் என்பதேயாகும்.

இலங்கையில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள், விடுதலை பெறுவதற்காக உழைக்கும் ஒரு ஸ்தாபனத்தை அமைக்க வேண்டும் என்னும் தனிநோக்கத்துடன், நாங்கள் இன்று கூடியிருக்கின்றோம். இப்போதிருக்கும் நிலைமையில், நாம் விடுதலைபெறுவதற்கு ஒரு சுதந்திரத் தமிழரசை நிறுவுவது இன்றியமையாதது என்பது எமது திடமான நம்பிக்கையாகும். பழைய காலச் சரித்திரத்தைத் தெளிவாக நன்றாக ஆராய்ந்து பார்த்தால், தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டிலே இப்போது எப்படியான நிலைமைகளுக்கிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து நோக்கினால், இதுதான் ஒரேயொரு வழி - வேறு எந்தவிதமான பரிகாரமும் கிடையாது - என்பது நன்கு விளங்கும்.

### ஐரோப்பியர் வருவதற்கு முன்பிருந்த நிலை

16 ஆம் நூற்றாண்டிலே, ஐரோப்பியர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னதாக இந்நாட்டு மக்களே தங்களுக்கென அரசாங்கங்களை அமைத்திருந்தனர். ஆயினும், நாங்கள் ஒரு விஷயத்தை மாத்திரம் ஊன்றிப் பரிசிலனை செய்தல் வேண்டும். *அதாவது, போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன் இங்கு வசித்த மக்கள் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் இனம், தமிழ் பேசும் இனம் என இரு தேசிய இனங்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்தார்கள்.*

விஜயன் காலந்தொடங்கிப் பல நூற்றாண்டுகளாகச் சிங்களம் பேசும் தேசிய இனத்தைப்பற்றி மாத்திரம் பேசப்படுகிறது. இவர்களைச் சில காலங்களில் தமிழ் மன்னர்களும் அரசு புரிந்தார்கள். எனவே, தமிழ் மக்கள் அவர்களிடையே எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பது புலனாகின்றது. ஆயினும், அது சிங்களத் தேசிய இனமும் சிங்கள அரசாங்கமுமேயாகும். பூமிசாத்திர சம்பந்தமான காரணங்களாலும் வேறு பல நியாயங்களாலும் இலங்கையின் வடபகுதிகளில் வாழ்ந்த மக்கள் நெடுங் காலமாகத் தமிழர்களாகவே திகழ்ந்திருத்தல் வேண்டும். அதனால், பெரும்பாலும் தமிழ் மக்களையே கொண்ட வட பகுதிகளைத் தென்பகுதியிலிருந்த சிங்கள இராச்சியங்கள் ஆட்சி புரிவது வரவரக் கடினமாக இருந்திருத்தல் வேண்டும். இறுதியாக இயற்கையாயமைந்த ஒரு பரிகாரம் கண்டு பிடிக்கப்பட்டது. *9ஆம், 10ஆம் நூற்றாண்டளவிலே, வடபகுதித் தமிழ்ப்பிர தேசங்கள் பிரிந்து தனியரசாயின*, இலங்கையின் தென்பகுதி, சில வேளைகளில் 2,3 இராட்சியங்களாகப் பிரிந்திருந்தாலும் சிங்களப் பிரதேசமாகவே இருப்பதாயிற்று.

### மொழிமிக முக்கியம்

சில காலங்களில் இந்த நிலைமை மாறியிருந்தாலும், ஐரோப்பியர் வரும் வரை இந்தச் சிங்கள, தமிழ் இனப் பாகுபாடு பல நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்தது. முதலிலே தமிழ் இராச்சியத்தை அழித்த ஐரோப்பியர், படிப்படியாகச் சிங்கள இராச்சியங்களையும் ஒழித்துவிட்டார்கள். இதிலிருந்து நாம் பெறக்கூடிய பெரும் படிப்பினை, *மக்களின் வாழ்க்கையிலும் அரசியலிலும் மொழிமிக முக்கியமானதென்பதே யாகும்.* சிங்களத் தேசிய இனமாகவும் தமிழ்த்தேசிய இனமாகவும் இலங்கை பிரிக்கப்பட்டிருந்த போது கூட சிங்களச் சாகியத்தினரிடையே தமிழ் மக்களும், தமிழ்ச் சாகியத்தினரிடையே சிங்கள மக்களும் வாழ்ந்திருத்தல் வேண்டும். மக்கள் இப்படியாக நாடெங்கும் பரவிக் கலந்து வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் அரசியல் விஷயங்களுக்காக, வடபகுதியிற் பெரும்பான்மையினராய்த் திகழ்ந்த தமிழர்- தென்பகுதியிற் பெரும்பான்மையினராய்த் திகழ்ந்த சிங்களவர் - என இருபிரிவினராகப் பகுக்கப்பட்டார்கள். தமது ஆட்சிச் சௌகரியத்தை மட்டுமே கருதிய பிரிட்டிஷார், சிந்தனைக்குறைவான முறையில், நாடு முழுவதையும் ஒரே குடியேற்றநாட்டு அரசாங்கத்தின் கீழ்க் கொண்டு வந்து, பல நூற்றாண்டுகளாக இரு தேசிய இனங்களாக இருந்த பாகுபாட்டினை ஒழித்துவிட்டார்கள். ஆயினும், இவ்விரு தேசிய இனங்களும் இயற்கையாகக் கலந்து ஒன்றாகி விடவில்லை. ஆயினும், மக்களுட் பெரும் பகுதியினர் வெவ்வேறான இரண்டு மொழிகளையே பேசுபவராய் வெவ்வேறு நிலப்பகுதிக்குள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆயினும், இரு இனங்களிலிருந்தும் ஆங்கிலம் பேசுகின்ற ஒரு சிறுபான்மைச் சமூகத்தினர் தோன்றினார்கள். ஆனால், நாட்டு மொழிகள் பொதுவாழ்விலே தமக்குரிய ஸ்தானத்தைப் பெற்றவுடன், தொகையிற் குறைந்தவர்களாகிய இவ் ஆங்கிலம் பேசும் சமூகத்தினர் அருகிவருகிறார்கள். நாளடைவில், குடியேற்ற நாட்டு ஆட்சிமுறை மாறி, மக்களாட்சி படிப்படியாக நிலைபெறத் தொடங்கிய காலத்தில் , புதிய அரசியற்றிட்டங்களை வகுத்தவர்கள் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு ஆட்சி முறையினைப் பின்பற்றி, ஒற்றையாட்சி அமைப்பு அடிப்படையிலேயே தமது திட்டங்களை வகுத்தனர். இதற்குப் பல காரணங்களுள்ளன. வெளித் தோற்றத் தளவில், பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு ஆட்சியின் கீழ் இலங்கை மக்கள் ஒரே தேசிய இனமெனும்படி ஆகிவிட்டார்கள். அன்றியும் நமது அரசியற் சீர்திருத்தவாதிகள் அரசியலமைப்பும் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அனுபவமற்றவர்களாகியிருந்தார்கள். அல்லாமலும், ஆங்கிலேயரும், ஸ்கொச்சுக்காரரும், உவெல்சுக்காரரும், ஒரு அரசின் கீழ்ச் சேர்ந்து கொண்டது போல, அதையே முன்மாதிரியாக வைத்து, இலங்கையிலும் அரசியலமைக்கலாம் என எல்லோரும் ஏமாறினார்கள். அதிலும் பார்க்கச் சிறந்ததொரு மாதிரிகிடையாதென்றும் நம்பியிருந்தார்கள். பெரிய பிரித்தானியாவிலே, ஸ்கொச்சு மொழியும், உவெல்சு மொழியும் முற்றாக [illegible] தொழிந்து, பிரித்தானிய மக்கள் எல்லோரும் ஆங்கில மொழியையே பேசுபவர்களாக மாறிவிட்டார்கள் என்பதைச் சிந்தித்து, எவராவது எடுத்துக் காட்டினாரல்லர். ஆனால் இருபது நூற்றாண்டுகள்வரை கூடி வாழ்ந்திருந்தும் சிங்கள மொழியோ தமிழ் மொழியோ அழிந்தொழியவில்லை. ஒவ்வொரு சாராரிலும் அம் மொழிகள் அழிந்தொழியாதபடி காக்கும் இயற்கைச் சக்திகளும் நோக்குகளும் அமைந்துள்ளன.

### நம் நாட்டிற்கு ஏற்ற அரசியல் அமைப்பு

பிரிட்டனிலும் இலங்கையிலுமிருந்து எமது நாட்டின் அரசியலமைப்பினை வகுப்பதில் பங்குபற்றியோர், பிரிட்டிஷாரின் ஒற்றையாட்சி அமைப்பினை மாதிரியாகக் கொண்டு, அதையே எமது நாட்டிலும் தழுவிக்கொள்ள முயன்றார்கள். சென்ற முப்பது ஆண்டுகளாக நடைபெற்ற அரசியற் சீர்திருத்த இயக்கத்தின் வரலாற்றை நோக்குவோமாயின், நமது சீர்திருத்தவாதிகள் பிரிட்டிஷ் ஆட்சி முறையைத் தழுவுவதிற் கவனஞ் செலுத்தினார்களேயன்றி, எமது நாட்டிற்கு எவ்வகையான அரசாங்கம் பொருத்தமானதென்று ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. தமது அரசியலமைப்பேயல்லாமல் வேறு எதனையும் இலங்கைக்கு மாதிரியாகக் கொள்ளலாமென்று பிரிட்டிஷார் கருதவில்லை. பிரிட்டிஷ் அரசியலமைப்பானது, சிங்கள மக்களுக்கு விசேஷ திருப்தியளிப்பதாயிற்று. ஏனெனில் சிங்கள மக்கள் பெரும்பான்மையோர். எனவே, வெறும் எண்ணிக்கையினாலேயே அவர்கள் பூரணமான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அல்லாமலும். பழைய சிங்கள இராச்சியத்தை அமைத்துக் கொள்ளலாமென்றும் கனவு கண்டார்கள். சென்ற பத்து நூற்றாண்டுகளாக ஏற்பட்டிருந்த மாற்றங்களையெல்லாம் ஒரு சிறிதாவது அவர்கள் கருத்திற் கொள்ளவில்லை. பல இன மக்கள் கூடி வாழும் நாட்டிலே ஒற்றையாட்சி அமைப்பை நிறுவுவதனால் ஏற்படக் கூடிய அபாயங்களை தமிழ் பேசும் மக்கள் தெளிவாகக் கண்டார்கள். அவர்கள் தங்களை எதிர்நோக்கியி ருக்கும் ஆபத்தை என்றும் உணர்ந்திருந்தது போற்றத்தக்கதாகும். தலைவர்களென்போர் இந்த ஆபத்தைக் குறைப்பதிற் கவனஞ் செலுத்தினார்களேயன்றி அதை நீக்க முயற்சிக்கவில்லை. சிறுபான்மையினருக்கும் கூடுதலான பிரதிநிதித்துவம் பெற்றுக் கொண்டாற் போதுமென்று அவர்கள் நம்பினார்கள். அவர்களுக்குத் தோன்றிய ஒரே பரிகாரம் அது தான். அவர்கள் வருங் காலத்தைப் பற்றிப்



## தந்தை செல்வா அன்று சொன்னவை 1

போதிய முன் யோசனை யுடனும் பரந்த நோக்கத்துடனும் நடந்து கொள்ளாதது வருத்தத்திற்குரியதாகும். இங்ஙனம் தவறியதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை. தமிழ் பேசும் மக்கள்- முஸ்லிம்கள், இந்தியத் தமிழர், இலங்கைத் தமிழரென மூன்று பிரிவினராய் இருந்தனர். இந் நாட்டிலே முஸ்லிம்களும் இலங்கைத் தமிழர்களும் வாழும் பிரதேசங்கள் பிரிட்டிஷார் ஆட்சியின் கீழ் விருத்தி செய்யப்படாதனவாய் , கீழ்நிலை எய்திக் கிடந்தன. இதனால் அப்பிரதேசங்களின் பொருளாதாரநிலை சீரழிந்திருந்தது. அப்பிரதேசங்களிலேயே வாழ்ந்து கொண்டு அரசியல் விஷயங்களில் [illegible] போதுமான அவகாசம் [illegible] இடங்களிலே தோன்றவில்லை. இந்தியத் தமிழரென்ற பிரிவினர் அரசியலமைப்பு ஆலோசனைகளிற் பங்குபற்ற இயலாதவர்களாயிருந்தனர். அவர்கள் எங்கள் நாட்டுக்கு ஏனையோரிலும் பார்க்கப் பிந்திய காலத்தில் வந்தவராவர். அவர்கள் தமிழ்பேசும் பிரதேசங்களுக்குப் புறம்பான சிங்களமொழி பேசப்படும் பிரதேசங்களிற் குடியேறியிருந்தார்கள். இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறியிருந்த போதிலும் அவர்கள் தொழிலாளர்களாகிய தங்களது வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகளிற் கவனம் செலுத்தினார்களேயன்றி அரசியலமைப்புச் சிக்கல்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. இந் நிலைமையின் பயனாக அரசியலமைப்பில் ஈடுபட்டோர் பிரிட்டிஷ் ஒற்றையாட்சி அமைப்பினையே அடிப்படையாகக் கொண்டனர். சிறுபான்மையினருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் அளிப்பதானது ஜனநாயகத்துக்கு மாறானதென்று சிங்கள மக்கள் எதிர்த்தனர். சிறுபான்மையினருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் அளிப்பதனாலேனும் அதிகாரம் முழுவதையும் தம் கையிலேயே வைத்திருக்கக் கூடிய ஒற்றையாட்சி அமைப்பினை நிலைபெறச் செய்யலாமென்று அவர்களுக்குத் தென்படவில்லை.

### சோல்பரி அரசியற்றிட்டம்

நீதி செய்வார்களென்று எதிர்பார்க்கப்பட்ட பிரிட்டிஷ் எஜமானர்கள் தம் கடமையில் முற்றாகத் தவறிவிட்டார்கள். அரசியலதிகாரம் சிங்களவரின் கையிலேயே இருப்பதை அவர்கள் கண்டார்கள். எனவே, தமிழ்பேசும் மக்களுக்கு நீதிவழங்குவதிலும் பார்க்கச் சிங்கள மக்களைத் திருப்தி செய்வதே உசிதமென்று கருதினர். அது ஆண்மையற்ற செயல் எனினும் அதையே விரும்பினர். இதன் பயனாக இந்த நாட்டின் அரசியற் பிரச்சினைக்கு ஒரு பரிகாரமென பிரதிநிதித்துவம் அளிக்காத ஒரு ஒற்றையாட்சி அமைப்பு சோல்பரி-பிரிட்டிஷ் அரசியற்றிட்டம் தமிழ்பேசும் மக்களின்மீது திணிக்கப்படுவதாயிற்று. வாக்காளர்கள் அளித்தஉத்தரவாதத்தை மறந்து எம் பிரதிநிதிகள் சோல்பரித் திட்டத்தை ஏற்றமையால் இப்பிரச்சினை மேலும் சிக்கலடைந்தது. இதனால் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களது அரசியல் வாழ்வுக்கு அந்திமக்கிரியைகள் செய்யப்பட்டுவிட்டனவென்று பலரும் கருதியிருக்கக்கூடும். ஆனால் பொதுமக்கள் சரணடைய மறுத்தனர். 1945 ஆம் ஆண்டு வெள்ளை அறிக்கையை ஏற்ற அப்போதைய அரசாங்க சபைத் தமிழ் அங்கத்தவருள் ஒருவர் தவிர்ந்த பிறரெல்லாம் 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிற் படுதோல்வி அடைந்தனர். தமிழ்ப் பிரதிநிதிகள் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதா அன்றேல் சரணடைவதா என்ற ஒரே கேள்வியை அடிப்படையாகக் கொண்டே தமிழ்த் தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது. தேர்தலின் தெளிவான முடிவு போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்பதேயாகும்.

ஆனால், முஸ்லிம் தொகுதிகளில் இதற்கு வேறான கொள்கையுடன் தேர்தல் நடைபெற்றது. 1945 ஆம் ஆண்டு வரை சிறுபான்மயனருக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற கொள்கைக்காகத் தமிழரும் முஸ்லிம்களும் சேர்ந்துழைத்தனர். சோல்பரித்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டபின், வேறு வழியின்றி முஸ்லிம்கள் தயங்கினர். இப்போது நாங்கள் கைக்கொண்டிருக்கும் கொள்கையைப் போன்ற திட்டங்களெவையும் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரதேசங்கள், தனிச்சுயாட்சி அரசாக அமைக்க முடியாதனவாய் இருந்தன. வடபகுதியிலும் திருகோணமலையிலும் வாழும் தமிழ் மக்களுக்கு, இப்பிரதிகூலமில்லாதபடியால் அவர்களிடையே ஒரு விடுதலை உணர்ச்சி நிலவியது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவைப்படுகிறது

திரு.தா.சண்முகநாதன் (சோக்கல்லோ சண்முகம்) என்பவரால் எழுதப்பட்ட ''கோமதியின் கணவன்'' என்ற நாவல் 1956 ஆம் ஆண்டு பதுளை காந்தி அச்சகத்தில் வெளியிடப்பட்டு கலுகல்ல, நமுனுகுல, பள்ளக்கட்டுவ போன்ற இடங்களில் விநியோகிக்கப்பட்டது. தற்போது இந்நாவல் திருத்திய பதிப்பிற்காக தேவைப்படுகிறது. ஆசிரியரிடம் இந்நாவல் கைவசம் இல்லாததால் இந்நாவலை வைத்திருப்பவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டுகிறோம்.

முகவரி:
திருமதி க.கௌரிகாந்தன்
மில் லேன், ஏழாலை மேற்கு, ஏழாலை.

T.P:-011 4978806, 021 7911776
Mobile: 0776577415
(92053)

## 5 ஆம்ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 ★ 03 ★ 1951



மறைவு
29 ★ 12 ★ 2004

அமரர்
**சங்கரப்பிள்ளை செல்வராஜா (சின்ராசு)**
(முன்னாள் உரிமையாளர்-செல்வா ரான்ஸ்போட்)

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடங்களோ ஐந்தாகின-அப்பா
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்....

மனைவி,
பிள்ளைகள்.

மேற்கு கண்டுவில் ஒழுங்கை,
டச்சு வீதி, சாவகச்சேரி.
(92093)

## 'ஐங்கரன் திருமண சேவை'

எங்களிடம் யாழ்.இந்து கௌரவ குடும்பம் UK Citizen 29, 32, 35, 39வயது, Canada Citizen 32, 35 வயது (கத்தோலிக்கம்), சுவிஸ் Citizen 27,33 வயது, அவுஸ்திரேலியா Citizen 36 வயது ஆகிய மணமகன்மார் உள்ளனர். 24மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் இல்லை.

லண்டன் தொடர்பு: 00447508295863, 00447404120188.
Fax No: 00442086810707, 00442086720673.
(92083)

## 'ஐங்கரன் திருமண சேவை'

எங்களிடம் யாழ்.இந்து கௌரவ குடும்பம் UK Citizen 28, 34, 36 வயது (Engineer), Canada Citizen 29, 34 வயது, ஜேர்மன் Citizen 28 வயது, அவுஸ்திரேலியா Citizen 28 வயது Doctor ஆகிய மணமகள்மார் உள்ளனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் இல்லை.

லண்டன் தொடர்பு:
00447508295863, 00447404120188
Fax No: 00442086810707, 00442086720673
(92082)

## காணி விற்பனைக்கு

சங்கத்தானை, சாவகச்சேரியில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0774605329
(91946)

## வீடு விற்பனைக்கு உண்டு

வட்டு. கிழக்கு, குளிப்பன் ஒழுங்கையில் 6 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0713486725
(91983)

## வீடு வாடகைக்கு உண்டு

தெகிவளையில் 2 அறைகளுடன் கூடிய வீடு சகல வசதிகளுடனும் (தளபாடங்கள், சமையல் வசதி) வாடகைக்குண்டு. யாழ்ப்பாணத்தில் பதிவு செய்து கொடுக்கப்படும். ஒரு நாளைக்கு ரூபா 1900/=

தொடர்புகளுக்கு:- 0770641256(ஆசிரியர்)

## தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு

வீட்டுத் தளபாடங்கள், tution மேசைகள், வாங்குகள், Sony T.V 20", Water Pump, Show Case, T.V Stand என்பன விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 0777959991

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
(சுத்தம் செய்தல் இலவசம்)
A.S.S பாம், தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

இதோ!
ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி.
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔடதம்

## பீம் வாசக சிரப் (Vasaka Syrup)

இருமல் பாணி

**யாழ்.குடாநாட்டின் அனைத்து பாமர்ஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

*Manufactured By:*
*Beamhela osulanka (PVT) LTD*
*18/263 Kethsiry Place*
*High Level Road, Kottawa*
*Pannipa Panniptiiya*
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே: 021 222 2567
(சி/562080)

The TRADESMANN Traditionally Trusted 1956

"த ரேட்ஸ்மன்" 1956 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு உற்பத்தி மற்றும் விநியோகித்தலில் கடந்த 50 ஆண்டுகளாக தேசத்தின் நம்பிக்கை வென்ற நிறுவனமாகும். எமது நிறுவனத்தின் கொழும்பு பஸார் விற்பனைப் பகுதிக்கு இளம் சுறுசுறுப்பான இளைஞர்கள் தேவைப்படுகின்றனர்.

## விற்பனை பிரதிநிதிகள்

### கொழும்பு பஸார்


கொண்டிருக்க வேண்டிய தகமைகள்

- 20-30 வயதுக்கிடைப்பட்டவர்கள்.
- கல்விப் பொதுதராதரப் சாதாரண தரத்தேர்ச்சி பெற்றவர்கள்.
- 1-2 வருட விற்பனை அனுபவம்.
- தமிழ் மொழி தெரிந்திருத்தல் மேலதிகத் தகமையாக கருதப்படும்.

தெரிவுசெய்யப்பட்டவர்கள் மாதாந்தம் ரூபா 30,000.00 க்கு மேற்பட்ட வருமானத்தைச் சம்பாதிக்கக்கூடிய வாய்ப்புக்கான உத்தரவாதம். மொத்த விற்பனை பற்றிய அனுபவம் பெறும் வாய்ப்பு.

உங்கள் தொடர்பு இலக்கங்களுடனும் உறவினரல்லாத இரு நடுவர்களின் பெயர் முகவரியுடனும் உங்கள் சுயவிபரக் கோவையை எங்களுக்கு அனுப்பிவையுங்கள்.

சிரேஷ்ட வியாபார முகாமையாளர் - பஸார்
**வரையறுக்கப்பட்ட த. டிரேட்ஸ்மன் இலங்கை (தனியார்) நிறுவனம்.**
இல 40, பொருப்பன பெரி வீதி.
இரத்மலானை.
தொலைநகல்: bazaar@tradesmann.com




C.P.T. CAUSEWAY PAINTS

நிறுவனத்தின் சகல
தயாரிப்புகளின்
யாழ்ப்பாண மாவட்ட ஏக
விநியோகஸ்தராக
இல 37, ஸ்டான்லி வீதியிலுள்ள
**NEW KAMAAL CERAMICS**
தொ.பே. 021-3205444, 021-2222085
நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது
என்பதை சகல விற்பனை
முகவர்களுக்கும்
அறியத்தருகின்றோம்.

Tel : 038-2240040-5, 2243166-9,038-5599800-8, 038-5673152, 038-5673154
Fax : 038-2240046, 038-5599810, 038-4281900
E-mail : luxury@sltnet.lk
Web : www.causewaypaints.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியக் காட்சி 22

# எம்பிரான்! ஓடாதே வாராய்!

பெரியாழ்வாருடைய பக்தியனுபவத்தை வெளிப்படுத்தும் பாடல்கள் தனித்துவமான சிறப்புடையவை. கண்னனை நீராட அழைக்கின்ற தாயாக நிற்கும் அவருடைய புதுமையான பக்திக் கோலத்தை சொற்சித்திரமாக்கிக் காட்டும்போது தாய்மையின் ஒப்பற்ற அன்பையும் வெளிப்படுத்துகிறார். குழந்தைக் கண்ணனின் குறும்பான செயற்பாடுகளை எடுத்துக் கூறுகிறார். ஆயர்பாடியில் குழந்தையான கண்ணனின் செயற்பாடுகள் வேறுபட்டவை. மாடுமேய்த்து வாழ்வு நடத்தும் ஆயர் முன்னெப்போதும் காணாத குறும்புகளைக் கண்ணன் செய்கிறான்.

மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகளோடு கன்றுகளும் கூடச் செல்லும். அவற்றின் பின்னே செல்லும் கண்ணன் கன்றுகள் தாயின் பின்னே ஓடும்போது ஒரு புதுமையான குறும்பு செய்கிறான். ஓடுகின்ற கன்றுகளின் செவியில் கட்டெறும்பைப் பிடித்து போட்டு விடுகின்றான். அவை கன்றுகளின் காதினுட் புகுந்து கடிக்கும்போது கன்றுகள் துள்ளித்துள்ளி அங்குமிங்கும் ஓடுகின்றன. அந்த ஓட்டத்தைக் கண்ணன் வெகுவாய் ரசிக்கிறான்.

அடுத்து அவன் செய்யும் பிள்ளைக் களவு பற்றிப் பெரியாழ்வார் குறிப்பிடுகின்றார். ஆய்ச்சியர் மோர் கடைந்தெடுத்த வெண்ணெய்யைக் களவாடும் கண்ணன் செயல் பெரியாருக்கு நினைவுக்கு வருகிறது வெண்ணெய்யைத் திரட்டி வாயில் போட்டு அவசரமாக விழுங்குவதைக் கண்டவேளை பற்றிக் குறிப்பிட்டு அவனை நீராட ஓடிவரும்படி அழைக்கிறார். வெண்ணெய்யை அவசரமாக எடுத்து விழுங்கியதால் அதன் துகள்கள் மேனியிலும் வாயிலும் படிந்திருக்கின்றன. அதைப்பற்றிக் கண்ணன் கவலைப்படவில்லை. தாயாகி நிற்கும் பெரியாழ்வார் பெரிதும் கவலைப்படுகிறார். குழந்தையின் உடற்சுத்தமே தாயின் சிந்தனையாக இருக்கிறது. அவனை நீராட்டிச் சுத்தப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறார்.

இவ்வேளையில் கண்ணன் வராதிருப்பது அவர் மனத்தை வருத்துகிறது. எனவே தெய்வீக நிலையில் கண்ணன் மராமரம் சாய்த்த அருட்செயலை நினைத்துப் பார்க்கிறார். கண்ணன் பிறந்த நாள் திருவோண நட்சத்திரம் என்பதும் நினைவுக்கு வருகிறது. தேவகி பெற்றெடுத்த குழந்தை கண்ணன், யசோதை வீட்டில் வளர்ந்த வரலாறு பெரியாழ்வார் நினைவில் அலைமோதுகிறது. பிறந்த அன்றைய நட்சத்திரம் மாதந்தோறும் வரும். அன்றைக்காவது கண்ணனை நீராட்ட ஆசைப்படுகிறார் வளர்ப்புத் தாயாகப் பாவனையில் நிற்கும் ஆழ்வார்.

'நீ பிறந்த திருவோணம் இன்று நீ நீராட வேண்டும்' என்று மிகப் பரிவோடு அவனை அழைக்கின்றார். உலகியலில் நாம் காணும் தாயாகப் பெரியாழ்வார் தம்மைப் பாவனை செய்து பாடுவது எமக்கும் தாய்மையுணர்வைத் தருகிறது. மாதம் ஒருமுறையாவது குழந்தைக்கு நீராட்டி விடவேண்டும் என்ற விருப்பம் அவருக்கு ஏற்பட்டிருப்பதை இத் தொடர் நன்கு விளக்குகிறது. அதனால் எம்பிரானே! ஓடாதே என அன்போடு அழைக்கிறார்.

தாயின் பரிவான அழைப்பைச் சற்றும் பொருட்படுத்தாமல் ஓடித்திரியும் குழந்தை கண்ணனை எமது மனக் கண்ணின் முன்னே கொண்டு வந்து காட்டுகிறார். 'ஓடாதே' என்ற சொற்பிரயோகம் தாயின் பரிவையும் அன்பையும் விளக்கி நிற்கிறது. சின்னக் குழந்தையை ஓட ஓட விரட்டும் தாயாக அன்றிப், பக்குவமாக அழைக்கும் பண்பு நலன் இப்பாடலில் விரவி நிற்கிறது.

கண்ணன் பற்றிய செய்தியை ஒரு பாடலில் கூறும் புலமை நயம் இங்கு கவனத்திற்குரியது. அவற்றை வருமாறு குறிப்பிடலாம்.

1. கன்றுகளின் செவியில் கட்டெறும்பு போடும் குறும்பு நிலை.
2. வெண்ணெய் திருடியுண்ணும் களவு நிலை
3. மராமரம் சாய்த்த அருள் நிலை
4. அவனது பிறந்த நாள் விவரம்.

பெரியாழ்வார் காலத்தில் இன்று போல நாட்காட்டிகள் பயன்படுத்தப் படவில்லை. மாதந்தோறும் வரும் நட்சத்திரங்களைக் கொண்டே நாள்கள் கணிக்கப்பட்டன.

அக்கால வாழ்வியல் நடைமுறையையும் இப்பாடல் சுட்டிக்காட்டுகிறது. குழந்தையின் பிறந்த நாள் கொண்டாடப்பட வேண்டிய நன்னாளாகக் கருதப்பட்டுள்ளது. ஆயர்பாடியிலும் இவ்வழக்கம் இருந்துள்ளது. குழந்தைச் செல்வம் அக்காலத்தில் பெருஞ்செல்வமாகக் கருதப்பட்டுள்ளது. வள்ளுவருடைய குறளும் இதனை வலியுறுத்தியுள்ளது. ஒருவன் பெறும் பேறுகளில் மிகச் சிறந்தபேறு மக்கட்பேறாகும். பண்புடைய மக்களைப் பெற்றால் எத்தகைய நன்மை வரும் என வள்ளுவர் கூறியுள்ளார்.

'' எழு பிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்''

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவனை செய்து பாடியதற்கும் இதுவே காரண மெனலாம். ஏழுபிறப்புகளிலும் துன்பங்கள் அணுகாதிருப்பதற்கு நன் மக்களைப் பெறவேண்டும். கண்ணன் தன் குழந்தையாக இருக்கப் பெரியாழ்வார் பெரிதும் விரும்புகிறார். அதனால் தன்னை யசோதையாகப் பாவனை செய்து கண்ணனின் வளர்ப்புத் தாயாகி நின்று தனது பக்தியனுபவத்தைத் தனித்துவமாக வெளிப்படுத்திப் பாடியுள்ளார்.

''கன்றுகள் ஓடச் செவியில்
கட்டெறும்பு பிடித்திட்டால்
தென்றிக் கெடுமாகில்
வெண்ணெய் திரட்டி விழுங்குமா
காண்பன்
நின்ற மராமரம்
சாய்த்தாய் நீ பிறந்த
திருவோணம் இன்று
நீ நீராட வேண்டும்,
எம்பிரான் ஓடாதே
வாராய்!



கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

## அமானுஷ்ய வாழ்வு!

கடந்து போன துயர்நிறைந்த
கொடு நீள நாள்களின்
ஞாபக வடுக்களுடன்
நகர்ந்து கொண்டிருக்கிறது
எமக்கான வாழ்வியல்
இருப்பினும்
அதீத விழப்புப்பற்றிய
பிரக்ஞையோடு
உறங்கிக் கொண்டிருக்கின்றேன்
சூனியத்தின் பிரமாண்டம்
கண்டு
ஒரு கணம் திகைப்புற்றுத்தான்
போனேன்
வழமைபோல
கனவுகள் அற்ற
வெற்று உறக்கம் தான்
ஆனாலும்
தொலைந்து போன
நேற்றைகளை
புதுப்பிப்பதற்கான
இன்றைய பகீரத்தன
முயற்சி இது
சூனியங்களே வழமையாக
சூழ்ந்துவிட்ட
எம்(ன்) வாழ்வியலில்
வேதனைகளும், வலிகளும்
சற்றும் தானே
காலாதி காலமாக
புரையோடிப்போன
எம்வாழ்வு
அதனால்தானடா
என்றுமே
அமானுஷ்யமாகும்படி
சபிக்கப்பட்டிருக்கின்றதோ.....?

வை.ஜெயந்தினி
அல்வாய்.

## கரம் கொடுப்போம்!

ஊர் துறந்து வந்தவர்கள்
உறவு இழந்து அழுதவர்கள்
கரம் இழந்து கதறியவர்
கால் முறிந்து தவழ்ந்தவர்கள்
கஞ்சிக் கலயம் கொண்டு
கால் கடுக்க நின்றவர்கள்
தாகம் தீர்ப்பதற்கு
தண்ணீருக்கு அலைந்தவர்கள்
இயற்கைக் கடன் தீர்க்க
இடமின்றி அலைந்தவர்கள்
உயிருடன் வருவதற்கு
ஒன்பது நாள் நடந்தவர்கள்
அவல வாழ்வதனை
அணு அணுவாய் அனுபவித்தோர்
சொந்தங்களைத் தேடி
நந்திக் கடல் கடந்தோர்
எம்மினிய உறவுகளின்
இழிவு நிலை அகற்றிடவே
பொருள் கொடுப்போம்
பொன் கொடுப்போம்
'காமதேனுவாகி' கற்பக தருவாகி
கரம் கொடுப்போம் காலமெல்லாம்.

நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி.

# மைமலாகிறது

உடய் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டிய மிளகாய்க் கன்றுகளை மழைவந்து நிரவலடித்து விட்டது. கொத்திப் பண்படுத்திப் பதமாக இருந்த மண் இறுகிவிட்டது. கன்றுகள் விறைத்து, வெள்ளாரித்துப்போய் நிற்கின்றன. தனக்குரிய பத்துப் பட்டிகளிலும்தான் அவள் மிளகாய்க்கன்றை நாட்டியிருந்தாள். கொஞ்சம் பிந்தி நட்ட தறைதான். மிளகாய்க் கன்றுகள் விறைத்து வெள்ளாரித்ததோ....?

மற்றவர்களின் மிளகாய்க் கன்றுகள் கன்னங்கரும் பேட்டுக் கோழிகள் பரந்து நிற்பதுபோல அவளின் கண்களுக்குக் காட்சி தருகின்றன.

நல்லாய் கண்டடியை இழக்கி இரண்டு வெய்யிலுக்கு வாடவிட்டு இறைத்தால் ஒரு மாதிரிக் கறுத்துக் குழைத்துவிடும். புல்லுக் கிண்டியால் கன்றடிகளைக் கிண்டிக் கோரைக் கிழங்குகளை அகற்றிக் கொண்டிருக்கிறாள் பொன்னம்மா. புல்லுக்கிண்டி வேரைத்தாக்கினாற் கன்றுகள் வாடிவிடும். அதற்காக அவதானமாகத்தான் கிண்டிக்கொண்டிருக்கின்றாள். அருகிலிருந்த புலவுத் தரையில் கட்டியிருந்த பசுமாடு புல் மேய்ந்து விட்டு அசை போட்டுக்கொண்டிருக்கின்றது.

அமைதி, தனிமை....

பொன்னம்மா தனக்குள்ளேயே சிரிக்கின்றாள்.... ஏன் அந்தச் சிரிப்பு வந்ததோ, அவள் சிரிப்பதை அந்தத் தோட்டத்தில் யாரும் கவனித்திருக்க முடியாது. ஒருவேளை அந்த மிளகாய்க் கன்றுகள் கண்டிருக்கலாம்.

மாலை வெய்யில் மங்கி எரிகின்றது. சிவப்பு, பச்சை, நீலம், நாவல், ஊதா, காவி இவ்வாறு பல வர்ணங்களைக் காட்டிப் பகலவன் தன் பயணத்தின் பயனை அனுபவிக்கின்றான்.

பொழுதுபடு வதற்கு முன் இந்தக் கீலத்தைக் கிண்டி முடிக்கவேண்டும். பொன்னம்மாவின் இதயத்து உந்தல் கைகளுக்கு வேகத்தையும் வலுவையும் கொடுக்கின்றது. பொன்னம்மா மளமளவென்று கன்றடிகளைக் கிண்டிக்கொண்டிருக்கின்றாள்.

கைமட்டும் கன்றடிகளைக் கிண்டுகிறது.... இறுகிப்போய் இருக்கும் நிலத்தைக் கிண்டிவிட்டால் மிளகாய்க் கன்றுகள் கறுத்துச் சடைக்கும். இறுகிப்போய் இருக்கும் இதயத்தைக் கிண்டுவதால்...

வேலையை விரைவாக முடிக்க வேண்டுமென்ற உந்தலை முந்திக் கொண்டு.. பசுமாடு அசை போடுகின்றது.

இன்று காலை பருத்தித்துறைக் கோட்டுக்குப் போய்ப் படிக்காசை வாங்கிக்கொண்டு வரும்பொழுது....

கோடு, படிக்காசு இவையெல்லாம் பொன்னம்மாவுக்குப் பழகிப் போனவை.

ஆனால் இன்று...

அவளுக்கும் பிள்ளைக்குமாக நூறுரூபா படி தீர்ந்திருந்தது. பத்து மாதங்களாகக் கட்டாமற் தாக்காட்டித் திரிந்தவர். அரசாங்கத்திற்குப் பயந்து இன்று ஆயிரம் ரூபாவாகக் கட்டி இருக்கிறார்.

காசை வாங்கிக்கொண்டு பொன் னம்மா ''பஸ்ராண்''டை நோக்கி வந்துகொண்டிருக்கிறாள். பிரக்கிராசிமாரின் கந்தோர்களைத் தாண்டிக் கொட்டடிப் பிள்ளையார் கோயிற்சந்தியை நெருங்கிக் கொண்டிருக்கிறாள்.

''இஞ்சார் உன்னைத்தான் இஞ்சாரப்பா'' உன்னைத்தான், எனக்குப் பெரிய இடைஞ்சல், கஸ்ரம். உந்தக் காசிலை ஒரு ஐநூறு ரூபாவைத்தா நான் நெல்லு வெட்டி அடிச்சுப் போட்டு ''மணிஓடரிலை'' அனுப்பி விடுகிறன். கெஞ்சலாகக் கேட்கிறான்.

அவளுக்கு யார் கேட்பதென்பது தெரிகின்றது. ஆனால் அவள் திரும்பியே பார்க்கவில்லை!

''இஞ்சார், இஞ்சார்....''

(12 ஆம் பக்கம் பார்க்க....)



★★★★★ வடமராட்சி, கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை சிவலிங்கராஜா தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியராகவும், தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.

தமது மாணவப் பருவத்திலேயே தமிழ்ச் சிறுகதைகளை எழுதியவர். இவரது பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகள் சிரித்திரன், சஞ்சிகை, சிந்தாமணி வாரப் பத்திரிகை என்பவற்றில் பிரசுரமாகியுள்ளன.

தமிழர் புனைகதைத்துறை தவிர, மொழி, இலக்கியம், பண்பாடு முதலிய துறைகளில் பல ஆய்வு நூல்களையும் எழுதியுள்ளார்.

அவ்வப்போது கவிதைகளையும் எழுதிவந்த இவரது கவிதைத் தொகுப்பு ''சொல்லினால் ஒரு மாளிகை'' என்ற பெயரில் வெளிவந்துள்ளது.

1973 ஆம் ஆண்டில் சிரித்திரன் பத்திரிகை நடாத்திய அ.ந.கந்தசாமி ஞாபகார்த்த சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற இவரது சிறுகதை ''மைமலாகிறது'' இங்கு

மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2036 ஆம் ஆண்டு ராட்சத விண்கல் பூமியில் மோதும்

விண்வெளியில் கோடிக்கணக்கான விண்கற்கள் சுற்றி வருகின்றன. அவை எப்போதாவது பூமி ஈர்ப்பு விசைக்குள் வந்து பூமியை நோக்கி வேகமாக வரும். ஆனால் வரும் வேகத்தில் அவற்றில் தீப் படித்து நடுவானிலேயே சாம்பலாகி விடும்.

அளவில் சிறிய கற்கள் இப்படி சாம்பலாகி விடுவது உண்டு. பெரிய கற்களாக இருந்தால் எரிந்து சாம்பலாகாமல் அதன் மீது பகுதி பூமியில் விழுவதும் உண்டு. அதுவும் சிறிய அளவே இருப்பதால் பெரிய பாதிப்புகள் எதுவும் சமீப காலங்களில் ஏற்படவில்லை.

இப்போது மிகப்பெரிய ராட்சத கல் ஒன்று பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அது விண்ணில் தீப்படித்தாலும் கூட கல் பெரிய அளவில் இருப்பதால் பூமிக்கு பெரும் சேதம் ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கிறார்கள்.

இந்த கல் 350 மீட்டர் குறுக்களவு உள்ளது. அதன் சுற்று வட்ட பாதையில் இருந்து விலகி கொஞ்சம் கொஞ்சமாக பூமி பக்கமாக வந்து கொண்டிருக்கிறது.



2029ஆம் ஆண்டு இந்த கல் பூமிக்கு 30 ஆயிரம் கிலோ மீற்றர் உயரத்தில் வரும். அடுத்த 7 ஆண்டில் மேலும் பூமியை நோக்கி நகர்ந்து 2036-ம் ஆண்டு பூமி சுற்றுப் பாதைக்குள் நுழையும். உடனே புவி ஈர்ப்பால் ஈர்க்கப்பட்டு பூமியில் விழும்.

அப்போது பூமியில் பிரான்ஸ் நாட்டு அளவுக்கு பெரிய பள்ளம் உருவாகும். பல லட்சம் மக்கள் உயிரிழக்கவும் நேரிடும். பூகம்பம்,சுனாமி, போன்ற இயற்கை பேரழிவு நிகழலாம்.

எனவே இதை நடுவானிலேயே அழிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டு உள்ளனர். இதற்காக ஆய்வில் ரஷ்ய விஞ்ஞானிகள் ஈடுபடுகிறார்கள். அவர்களுடன் அமெரிக்கா, சீனா, ஐரோப்பிய விஞ்ஞானிகளும் ஆய்வு செய்கின்றனர்.

இது தொடர்பான விஞ்ஞானிகள் கூட்டம் விரைவில் நடைபெறும் என்று ரஷ்ய விண்வெளி ஆராய்ச்சி மைய தலைவர் அனாடலி பெரிமினோங் தெரிவித்தார். * * *




# சுகமான தூக்கம், சுறுசுறுப்பான விழிப்பு

அதிகாலைத் தூக்கம் ஆனந்தம் தரும். ஆழ்ந்த உறக்கமாக இருக்கும். வெயில் சுள்ளென்று முகத்தில் விழுந்தபிறகுதான் எழத்தோன்றும். இல்லாவிட்டால் பசி வயிற்றைக் கிள்ளிய பிறகு எழுவோம்.

அப்படி இருக்கும்போது, அதிகாலையில் அலாரம் வைத்து எழுப்பினால் எப்படி இருக்கும்? சத்தம்போட்ட கடிகாரத்துக்கு உச்சி மண்டையில் ஒரு தட்டு. செல்போனுக்கும் அதே கதிதான். மீண்டும் தூக்கத்துக்குள் புகுந்து சொர்க்கப் பரவேசம் செய்வோம்.

இனி அப்படித் தூக்கத்தைக் கெடுத்து எழவேண்டாம். உங்கள் உடலுக்குத் தேவையான ஓய்வு கிடைத்தபிறகு எழுப்பிவிடும்படியான அலாரம் உருவாக்கிவிட்டோம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

இந்தக்கருவி கடிகார வடிவில் இருக்கிறது. இது இங்கிலாந்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 'ஸ்லீப்டிராக்கர்' எனப்படும் இந்தக்கருவியை கையில் கட்டிக் கொண்டு படுத்தால்போதும். நமது ஆழ்ந்த தூக்கத்தைக் கெடுக்காமல் போதுமான ஓய்வு கிடைத்தபிறகு எழுப்பிவிடுமாம். மற்றவற்றை ஆய்வாளரே கூறுகிறார்.

இதுவரை தூக்கத்தில் இருந்து எழுப்பிவிடும் கடிகாரம், செல்போன்கள் போன்றவை குறிப்பட்ட நேரம் முடிந்ததும் எழுப்பிவிடும். இதனால் நிம்மதியான உறக்கம் கெடும். திடீரென்று எழுவதால் மன அழுத்தம், தோல் பாதிப்பு, சோர்வு எனப் பல பாதிப்புகள் ஏற்படும்.

ஆனால் எங்களது உடற்கடிகாரம் தூக்கத்தின் அளவைக் கண்காணிக்கும். மூளையானது மெலட்டானின் என்னும் ரசாயனம் சுரப்பதை நிறுத்தத் தொடங்கிவிட்டால் உடலுக்குப் போதுமான ஓய்வு கிடைத்துவிடும். அதைக் கண்காணித்து இந்தக்கருவி நம்மை எழுப்பிவிடும். இதில் ஏற்படும் அதிர்வுகள் 7-9 ஹேட்ஸ் வரை இருப்பதால் வேறு பாதிப்புகளும் ஏற்படாது. * * *







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMK

# எப்படி நம்புவது?

"இந்த தேசம் சிங்கள மக்களுக்கு சொந்தமானது என நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் நாம் எமக்கு சமமாக நடத்தும் சிறுபான்மை சமூகங்களும் உள்ளன. இந்த நாட்டின் 75% பெருபான்மையினரான எமக்கு இந்த நாட்டை பாதுகாக்கும் உரிமையுண்டு என்பதுடன் அதை விட்டுகொடுக்கமுடியாது. நாம் பலமிக்க ஓர் தேசம். அவர்கள் எம்முடன் இந்த நாட்டில் வாழலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மை சமூகமாக இருக்கவேண்டுமன்றி தேவையற்றவிடயங்களை வேண்டக்கூடாது."

நஷனல் போஸ்ட் – கனடா பத்திரிகைக்கு
சரத் பொன்சேகா வழங்கிய நேர்காணலிலிருந்து


(அ-563711)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 94



அனுப்புபவர் பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

கையொப்பம்:..............................

### இடமிருந்து வலம்

1. பந்தோபஸ்து
5. செவிலித்தாய்/ கூடமாட உதவும் பெண்.
7. வெண்ணெய் பிரித்தெடுக்க பாலை இப்படி மாற்ற வேண்டும்.
8. வஞ்சகத்தனம்.
10. மண்ணுக்கு முந்தியது.
11. சீவித்தல்.
12. இந்தியா.
14. மதிப்புக்குரிய பெரியவர். மகாத்மா காந்தியை இப்படி அழைப்பர்.
15. முகத்தில் வருவது.
16. சீவியப் பிரதேசம்.
17. சுகம்.
18. அரைவாசி.
19. திரைப்படங்களில் இளம் நடிகைகள் காட்டுவது.
20. ஒரு தமிழ் மாதம். அசைந்து வரும்.

### மேலிருந்து கீழ்

1. பாதிப்பான - எதிரான-நிலைமை.
2. உறக்கம்.
3. கருமேகம்/ மழைகாலம்.
4. ஏத்துதல்/ துதித்தல்/ போற்றுதல்.
5. நாட்டியம் இந்த வகைக்குள் அடங்கும்.
6. நாம்.
9. பரத நாட்டியத்திலும் உண்டு. சரியான நிலையைக் குறிக்கும்.
11. யானை.
12. இவர்கள் ஐவர்.
13. வருமானம்.
14. இல்லாமல் செய்/ ஒழி.
15. பன்மைத் தன்மையைக் குறிப்பது.
16. வாழ்த்தும் சொல்.
17. ஆறு.
18. ஈரமான இடத்தில் படரும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்ட சாலிகளது பெயர்விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 94**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 13.01.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.94 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 17.01.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 92 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) சுதந்திரம் (6) வாகு (7) கதி (8)அது (9) சதிபதி (11)கடமை (12) நலம் (13) கடகம் (15) பகு (17) தண்ணளி (18) கொன்றை (19) பணம்(20) மாசு (21)தின் (22)ஊன்றுதல்

**மேலிருந்து கீழ்**
(1)சுவாசம் (2) தகுதி (3)திகதி (4) ரதி (5) பதுமை (8) அடம்பன் (10) பட்டணம் (11) கல (12)நம் (13) கண்ணன் (14) களி (16) குறைதல் (17) தபதி (18) கொசுறு (20) மான்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 92 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — செல்வன் சண்முகநாதன் ரவிசங்கர், வைத்தியர் வளவு, இடைக்காடு, அச்சுவேலி.

**2 ஆம் பரிசு** — இ.சதாசிவம், வக்கமோடை தும்பளை, பருத்தித்துறை.

**3 ஆம் பரிசு** — திருமதி ஸ்ரீ.அற்புதராணி, 15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) **வி.யசோதரன்,** R.D.S. ஒழுங்கை, மல்லாகம்.

(2) **வி.சியாமினி,** மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

(3) **சி.சசிகுமார்,** சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டை.

(4) **தர்மகுலசிங்கம் ஸ்ரீரஞ்சினி,** மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

(5) **கமலாவதி செல்லையா,** 70/4, ஈச்சமோட்டை றோட், சுண்டுக்குளி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# மைமலாகிறது.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவள் வேகமாக நடக்கிறாள். அவள் தலையோ, கண்ணோ, உடலோ திரும்பிப் பார்க்க ஒருப்படவில்லை. ஆனால் - துன்பம், துயரம், விரக்தி இவையெல்லாம் பாட்டமாகப் பெய்து இறுகிப்போய் இருக்கும் இதயம் மட்டும் திரும்பிப் பார்க்கிறது. ஏதோ பிச்சை கேட்பதுபோலக் கைகளை நீட்டிக்கொண்டு அவன், பின்னே வருவது....

கண் மட்டும் ஒட்டைப் பட்டையாக ஒழுகிறது. அவள் திரும்பியே பார்க்கவில்லை.

பொன்னம்மா சாவகச்சேரி பஸ்ஸில் ஏறிவிட்டாள். பஸ் புறப்படுகின்றது.

பொன்னம்மாவின் கண்கள் ஒருமுறை பஸ்ஸை வெள்ளாட்டு மேய்ச்சல் மேய்ந்து திரும்புகிறது.

ஒரு நிம்மதிப் பெருமூச்சு. பஸ்ஸின் கடமுடாச் சத்தத்தில் அவளின் பெருமூச்சு அவளுடனேயே உறவாடுகின்றது. அசை போட்ட மாடு எழுந்து மேயத் தொடங்குகிறது...

''சீ... ஒரு (500) ரூபாவைக் கொடுத்திருக்கலாம். ஏதோ பாவமாய்க் கிடக்கு...'' அவளின் நினைவுத் திரையில் தாறுமாறாகச் சில கரிக்கோடுகள் கீறப்படுகின்றன. சுடலைச்சுவர், சுமைதாங்கி, கோயில்மடம் இவைகளில் மேலும் மேலும் கீறப்பட்டு, அழிந்தும் அழியாமலும், தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் கோடுகள் தாமா இவை?

''ஏதோ... இரக்க சிந்தையோ? வாழ்ந்து வாழ்வில் வசந்தத்தையே காணாத எனக்கா இரக்க சிந்தை வரவேண்டும்? இந்தத் தோட்டத்திலே தான் ஐஞ்சாறு வருடங்களுக்கு முன் வெங்காயப்பூ முறித்த அனுபவம். அந்த நினைவு ஆழமாக இருதயத்தில் அறையப்பட்டிருக்கின்றது. 'அவர் வந்து எப்படி மண்டாடினார். ஒரு மைமலுக்கை....'

''பொன்னம்மா நீ என்னைத்தான் கலியாணம் செய்யவேண்டும் - ஓம் எண்டு சொல். நீ மறுத்தால் நான் வாழன். இந்த ஆடுகால் பூவரசிலை தூங்கிச் சாவன்.''

நான் மௌனம் சாதிக்கிறேன்; ஒரு சில நிமிடம்.

''நீங்கள் ஏன் இந்தப் பட்டபொழுதுக்கை இதுக்கை வந்து நிக்கிறியள். ஆருங் கண்டால் என்ன நினைப்பினம்'' எனது சம்மதத்தை இந்த வசனங்கள் அவருக்குக் கொடுத்தன.

தோளிலே மண்வெட்டி, அதிற் கொளுவியிருந்த பீலிப்பட்டையும் துலாக் கயிறும்...

''ஒரு 500 ரூபாவைக் கொடுத்திருக்கலாம்'' இதயம் படம்போடுகின்றது.

மாலை வெய்யில் மாறி மாறி பலவர்ணங்களையும் காட்டிக் கொண்டிருக்கின்றது.

ஒரு நல்ல நாள்பெருநாள் என்று எனக்கு வேண்டாம் தன்ரை பிள்ளைக்கு ஒரு காற்சட்டை, சேட்டு வாங்கிக் குடாதவர்'' அவளின் இதயம் இறுகுகின்றது....

கன்றடிகளை இழக்கிக்கொண்டிருக்கிறாள். சில இடங்கள் கலடாகி... கால் நடந்த இடம்... நல்லாய் இறுகி அவளின் கைகளைக் களைக்க வைக்கிறது.

''அவரைப் பாவமெண்டுதான் நானும் ஒப்புக் கொண்டனான். சிலவேளை ஆண்களே இப்படித்தானோ. முதல் நல்லாய் மண்டாடுவினம்...''

''சீ... அப்படியென்றால் செல்லாச்சியையும் சிவகுரு மண்டாடித்தானே முடிச்சவன். அவன், சாகிறன், மாயிறன் என்று நிண்டது எனக்கெல்லோ தெரியும். இப்ப அவளுக்கென்ன - முத்துப்போல மூன்று ஆம்பிளைப்பிள்ளையள். கமம், கார், உழவுமெசின்... இந்த அரிசி யாவாரத்தோடை லொறியும் வாங்கிப்போடுவினம்...

''நான்... எங்கடை இவரை வைத்துக்கொண்டு எல்லோரையும் இப்படி எண்ணக்கூடாது.''

மாலை வெய்யில் ஒரே நேரத்தில் பலவர்ணங்களைக் காட்டிக்கொண்டிருக்கின்றது.

''இவரும் சிலவேளை; நான் ஒரு 500 ரூபாவைக் கொடுத்திருந்தால்... என்னோடை உறவாகியும் இருப்பார். ஏன் எங்கடை தங்கமாக்கையும் பத்து வரியம் புருஷனோடை கோவிச்சுப் படிவழக்கும் வைச்சவதானே. அதுக்குப்பிறகு ஒற்றுமையாகித்தானே உந்த இரண்டு பெடியனும் பிறந்தது.

கட்டுக் கொடியில் நின்று மேய்ந்த மாடு எட்டி மிளகாய்க் கன்றைக் கடிக்கின்றது.

''இவரிலை பிழையில்லை. தமக்கையும் தாயும்தான் இதுக்கெல்லாங் கால். வழக்குக்கு முந்தியும், இரண்டு மூண்டு முறை எத்தனை பேரிட்டைச் சொல்லி விட்டவர். வழக்கு வையாதை எண்டு.''

''உப்பிடி வன்னி, கண்டியெண்டு போவமெண்டு கேட்டவர்தானே. அதுக்கு என்ரை அப்பு, ஆத்தையும் விட்டினமே.''

''போனால் போகுதெண்டு 500 ரூபாவைக் கொடுத்திருக்கலாம். என்னத்தைச் செய்தாலும் கட்டின புருஷனல்லே.''

மாலை வெய்யிலுக்காகத் தலையில் போட்டிருந்த தொங்கலை எடுத்து விடுகிறாள். கையும் நோகின்றது. நாரியும் உழையத் தொடங்குகிறது.

''ஆளும்பேருமாய்... எண்டால் இது பெரிய வேலையே - பொடியனும் படிக்கப்போட்டான்.''

''கலியாணம் கட்டின வரியம் என்ன மாதிரித் தோட்டம் செய்தம். ஆளில்லாத் துன்பம் - இப்ப.... எங்கையோ வன்னிக் காட்டுக்கை அவர் தனியாப் பாடுபடுகிறார். இஞ்சை நான் தனிய முறியிறன்.''

''எப்படியும் 500 ரூபாவைக் கொடுத்து ஆரிட்டையெண்டாலும் அனுப்புவமோ...''

சபலம் பல பெறுகின்றது.

''அம்மோய்... அம்மோய்...

பாடசாலை முடிந்து படிக்கப் போய் வீடுவந்த மகன் தாயைக் காணாததாற் தோட்டத்துக்கே தேடி வந்து விட்டான்.''

''இஞ்சார் இதிலையெல்லாம் மிளகாய்க் கண்டுகளை மாடு கடித்துவிட்டது.''

மிளகாய்க் கன்றுகளை ஆர்வமாகப் பார்க்கிறான்.

''அம்மா - ஐயா இண்டைக்குக் காசு கொண்டந்து கட்டினவரே. நான் 'ரியூசன்' காசு நாளைக்குக் கொடுக்கவேணும்.''

''இப்ப நான் படிச்சிட்டு வரயுக்கை நெல்லியடியிலை ஐயாவைக் கண்டனான். என்னைக் கூப்பிட்டு, என்னோடை வாவன்ரா? எண்டு கேட்டார். நான் பேசாமல் நிண்டன்.

''ஓ... அவள் கொம்மா விடாள்'' எண்டார்.

அவருக்குப் பக்கத்திலே ஒரு மனிசியும் நிண்டுது. என்னைக் காட்டி இது என்ரை முந்தின மனுசியின்ரை மோன் எண்டார். இது உன்ரை குஞ்சியம்மா. இவவோடை கதையடா? என்றார். நான் ஒண்டும் கதைக்கயில்லை.

''பின்னை சொன்னார், அவள் கொம்மாவுக்குச் சொல்லு என்னையும் குஞ்சியம்மாவையும் கண்டதெண்டு, இப்ப படம் பாத்துப் போட்டு விடியப்புறம் பஸ்ஸிலை வவுனிக்குளம் போறமெண்டு சொல்லு'

பெடியன் சொல்லிக்கொண்டே போகிறான். புல்லுக்கிண்டியைப் பற்றிப் பிடித்து, ஒட்டிக் காய்ந்துபோய் இருந்த மண்ணை உரஞ்சிக் கொட்டியபடியே... 'நீமாட்டை அவிள், நாங்கள் போவம்'' பொன்னம்மா ஒன்றுமறியாதவள்போல் மகனைப் பாராமலே சொல்லுகிறாள். மாடுவீட்டை நோக்கி இழுக்கின்றது.

பலவர்ணங்களைக் காட்டி மகிழ்ந்த பகலவன் பனங்கூடலுக்குள் பதுங்குகிறான். உலகம்..... மைமலாகிறது.

★★★★★★★
★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு இணைப்பால் எந்த இனத்துக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை

**இலங்கையின் - இந்த நாட்டின் - அரசுத் தலைவர் யார் என்பதனை அறிவதற்காக, நிர்ணயிப்பதற்காக இந்நாட்டின் சுமார் 11 மில்லியன் வாக்காளர்கள் தமது வாக்குரிமையை இன்னும் இருபத்திரண்டு நாள்களில் பயன்படுத்த உள்ளனர்.**

**ஒரே அணியில் நின்று உழைத்து வன்னிப்போரை வென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவும் இன்று எதிர் அணிகளில் நின்று மோதுகின்றார்கள்.**

**முன்னர் எப்போதும் இல்லாதவாறு தமிழ் பேசும் மக்களின் வாக்குகளையே இம்முறை புதிய ஜனாதிபதி யார் என்பதை நிர்ணயிக்கப் போகின்றன.**

**இத்தகைய பின்புலத்தினை மனதிற் கொண்டு தமிழ் மக்களின் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பதினைந்து அம்சங்கள் அடங்கிய கோரிக்கைப் பட்டியல் ஒன்றை ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவரினதும் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.**

**ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் அவற்றை நிறைவேற்றுவர் என்பதனை முன்கூட்டியே அறிவிக்குமாறும் கூட்டணித் தலைவர் தமது கடிதத்தில் கேட்டிருக்கிறார்.**

**வீ.ஆனந்தசங்கரியின் கோரிக்கைக் கடிதம் இவ்வார ஞாயிறு உதயனில் உரைகல் பகுதிகளில் தரப்படுகின்றது.**



## தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி ஜனாதிபதி வேட்பாளர்களிடம் 15 அம்சக் கோரிக்கை

**உரைகல்**

தமிழர் விடுதலைக் கூட்டணி தற்போதைய அரசியல் நிலைமையை மிக்க அவதானத்துடன் பரிசீலித்து ஜனாதிபதிக்கும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களுக்கும் இவர்களில் யார் வெற்றி பெற்றாலும் அதனை அமுல்படுத்துமாறு 15 அம்சக் கோரிக்கையை முன்வைக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைக்கும் கோரிக்கைகள் புதியவையல்ல. அவை சிறுபான்மை மக்களின் உரிமைகள் பற்றி மட்டுமல்லாமல் நாட்டின் பல்லின மக்களின் பிரச்சினைகளைத் தழுவுவதோடு சகல மக்களும் சகல உரிமைகளையும் அனுபவித்து அனைவரும் சமமாக வாழக்கூடிய ஒரு நல்ல அரசை நிறுவுவதுடன் தொடர்புபட்டதாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெளிப்படையான கருத்து யாதெனில், சகலருக்கும் மனத்திருப்தியை ஏற்படுத்தக்கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்கி சிறியவன், பெரியவன் என்ற பேதமின்றி அனைவரும் வாழவேண்டும் என்பதே. மக்களின் நினைவாற்றல் குறைந்ததே. அதற்கு இலங்கை மக்கள் விதிவிலக்கு அல்லர். நம் நாட்டில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினை அனைத்தும் எம் அனைவரையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதித்துள்ளது. பல்லாயிரக்கணக்கான உயிர்கள், பல கோடி பெறுமதியான தனியார், அரச உடைமைகள் அண்மையில் நடந்து முடிந்த யுத்தத்திற்குச் செலவழிக்கப்பட்ட கற்பனைக்கு எட்டாத பெருந்தொகைப் பணம், தினம் தினம் பலகோடி ரூபா செலவு செய்து இராணுவ முகாம்கள், தளபாடங்கள், அவர்களுக்கு ஏற்படுகின்ற செலவுகள் அத்தனையும் நம் அனைவருக்கும் நல்லதொரு பாடத்தைப் போதித்துள்ளன. இத்தகையதொரு நிலைமை மீண்டுமொரு தடவை ஏற்படக்கூடாது என்பதே அது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உண்மையாகவும் மிக உறுதியாகவும் நம்புவது பின்வரும் ஆலோசனைகள் அமுல்படுத்தப்பட்டால் இக்கட்டான நிலையில் தள்ளப்பட்டுள்ள இந்த நாட்டை மீட்டெடுக்க முடியும் என்பதே. ஆகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் த்ாம் ஆதரிக்க இருக்கின்ற வேட்பாளர்களுக்கு ஒவ்வொரு வாக்காளரும் அழுத்தத்தைக்கொடுத்து எம் ஆலோசனையை அமுல்படுத்தவைத்தால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வோடு இழந்த அமைதியையும், சமாதானத்தையும் மீளப்பெற்று அதிகமாகத் தேவைப்படுகின்ற ஒற்றுமையையும் செழிப்பையும் இந்நாட்டில் ஏற்படுத்த முடியும்.

01.தமிழர் விடுதலைக் கூட்டணி சோல்பரி அரசியல் சாசனத்தின் சிறுபான்மை இனத்துக்கு ஒரேயொரு பாதுகாப்பாக இருந்த 29ஆவது அம்சத்துக்கு ஏற்பட்ட கதியை நன்கு அறிந்தமையால் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் ஏற்பட்டால் அத் தீர்வு எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் மீள் பரிசீலிக்க நேர்ந்தால், இதுவரை காலமும் பல உயிரிழப்புக்களுக்கும், சொத்தழிவுகளுக்கும் மத்தியில் எடுக்கப்பட்ட முயற்சிகள் அத்தனையும் பாழாகிவிடும். கடந்த ஐந்தாண்டு காலமாக சமஷ்டி அமைப்பின் கீழ் ஒரு தீர்வை அடையப் பெரு முயற்சி எடுத்து அதற்கு ஒரேயொரு மாற்றாக இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த தீர்வொன்றை ஏற்கத் தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக இருந்தது. ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் சிறுபான்மை மக்களுக்குத் தீர்வொன்றை ஒருபோதும் அடைய முடியாதென முழுமையாக நம்புகிறது.

02.வடக்கு, கிழக்கு இணைப்பால் இந் நாட்டிற்கோ அன்றி அப் பகுதியில் வாழும் எந்த இனத்துக்கோ எதுவித பாதிப்பும் ஏற்படாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி முற்று முழுதாக நம்புகிறது. அதற்குப் பதிலாக பல்லின மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும், சமாதானத்தையும் வளர்க்க உதவுவதாக அது அமையும். நாடாளுமன்றத்தில் பிரதம அமைச்சர் கொடுத்த வாக்குறுதிக்கமைய இரு மாகாணங்களின் இணைப்பு பற்றிய விடயத்தை அப் பகுதியில் வாழும் மக்களிடமே கையளிப்பது பொருத்தமானதென தமிழர் விடுதலைக் கூட்டணி நம்புகிறது.

03.இடம்பெயர்ந்த மக்களை அவரவர் இடங்களில் குடியேற்ற இத்தகைய தாமதம் மிக நியாயமற்ற செயலெனத் தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகிறது. சிங்களவரோ, முஸ்லிம்களோ, தமிழரோ, இந்திய வம்சாவளியினரோ அன்றி வேறு எந்த இனத்தவராகிலும் அவர்கள் இடம் பெயர்வதற்கு முன் குடியிருந்த இடங்களிலேயே குடியமர்த்தப்பட வேண்டும். கிளிநொச்சி அரச அதிபரும், சில கிராம சேவையாளரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையாலேயே இப் பிரதேச மீள் குடியேற்றத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளமை வருந்தத்தக்கது.

04.இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கும், சொத்து சேதத்திற்கும் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள், மலையகத்தவர்கள் என்ற பேதமின்றி முழு அளவிலான நட்டஈடு வழங்கப்பட வேண்டும்.

05.யுத்தம் ஆரம்பித்த பின்னர் வன்னிப் பகுதியில் இறந்தும், காணாமலும் போயுள்ள குடிமக்களின் பெயர், முகவரி, போன்ற புள்ளி விவரங்களைத் திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

06.பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவிச் சிறுவர்களை முறையற்ற வழியில் விடுதலைப் புலிகள் என முத்திரை குத்தி புனர்வாழ்வு இல்லங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அவரவர் பெற்றோரிடம் உடன் கையளிக்க வேண்டும். அவர்களில் சிலர் புலிகள் இயக்கத்தில் தாமாக இணைந்திருக்கலாம். ஆனால் ஏனைய அனைவரும் பலாத்காரமாக இயக்கத்தில் சேர்க்கப்பட்டவர்களாவர். இப்போது இச் சிறுவர்களுக்கு அவசியமாகத் தேவைப்படுவது பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் ஆகும். இந்த அப்பாவிப் பிள்ளைகளைப் பெற்றோரிடம் கையளிப்பின் அவர்களுக்கு எத்தகைய கல்வியை ஊட்ட வேண்டுமென பெற்றோரே தீர்மானிப்பார்கள். அநேகமான பிள்ளைகள் யுத்தம் காரணமாக மட்டுமன்றி பலாத்காரமாக இணைத்துக் கொள்ளப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக பலவருடக் கல்வியை இழந்துள்ளனர். அத்தகையோர் தமது கல்வியைத் தொடர அரசு ஆவன செய்யவேண்டும். இந்திய அரசிடம் வேண்டுகோள் விடப்படின் சில நூறு புலமைப் பரிசில்களைத் தமிழ்நாடு அரசிடம் பெற்றுக்கொள்ளலாம். முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலரின் இலங்கை விஜயத்தின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் இக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

07.'வடக்கின் வசந்தம்' வெறும் கேலிக்கூத்தாக மாறிவிட்டது. அங்கே அமைதியான கடும் புயல் தொடர்ச்சியாக மக்களின் அமைதியைக் குழப்பி வருகிறது. இம் மக்கள் பல வருடங்கள் பயப் பீதியுடன் நடமாடும் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றை இழந்து வாழ்கின்றனர். அங்கேயுள்ள ஆயுதக்குழுவின் செயற்பாடுகள் அமைதியான வாழ்வைச் சீர்கெட வைக்கிறது. அத்தகைய ஆயுதக் குழுவிடமிருந்து ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும்.

08.வடக்கு,கிழக்கில் ஆள்கடத்தல்கள், கொலைகள் ஆகியவற்றை விசாரிப்பதற்கு மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடு வடக்கிற்கு விஸ்தரிக்கப்பட வேண்டும்.

09.தற்போது யுத்தம் முடிவடைந்து, விடுதலைப் புலிகள் மீளத் தலைநிமிர்த்தி செயற்பட முடியாத நிலையில், உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு அங்குள்ள வீடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஆயுதக் குழுக்களால் பலாத்காரமாகப் பயன்படுத்தப்படும் தனியார் வீடுகள் மற்றும் வேறு கட்டடங்கள் உடனடியாக உரியவர்களிடமோ அன்றி அவர்களது வாரிசுகளிடமோ ஒப்படைக்கப்பட வேண்டும்.

10.அரச பிடியிலிருந்தும், இடம்பெயர் முகாம்களில் இருந்தும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் தப்பிச்செல்ல, மிக அற்ப குற்றங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட வேண்டும். இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காரணங்கள், குற்றச்செயலாகக் கணிக்கப்பட முடியாதென்பது விசேட அம்சமாகும். அத்துடன் பயங்கரவாதத் தடைச்சட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும்.

11.சில ஆண்டுகளுக்கு முன்பு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அப்பாவி மக்களிடமிருந்து குறிப்பிடத்தகுந்தளவு தங்கம், பிறிதொரு காலத்தில் திருப்பிக் கொடுக்கப்படும் என்ற உறுதியோடு பெறப்பட்டது. ஒரு சிலருக்குத் தங்கம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. பலருக்குக் கொடுக்கப்படவில்லை. இது தவிர மக்கள் தமது தங்க நகைகளைப் புலிகளிடம் ஈடு வைத்திருந்தனர். அத்துடன் தமது பணத்தைப் புலிகளால் நடத்தப்பட்ட ஈழ வங்கிக் கிளைகளில் வைப்புச் செய்தனர். வன்னியில் மீட்டெடுக்கப்பட்ட தங்கமும், பணமும் வடக்கு, கிழக்கு மக்களுக்குச் சொந்தமானவை. ஆகவே அங்கு மீட்கப்பட்ட நகைகளும் பணமும் உரிமை கோருவோருக்கு போதிய கால அவகாசம் வழங்கிப் பாதுகாப்பாக வைத்திருக்கப்பட வேண்டும்.

12.உயர்கல்வி பெறும் வாய்ப்பு பெற்றும் யுத்தம் காரணமாகவும், பலாத்காரமாகப் பிடிக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் அதனைத் தொடர முடியாது பலர் இருப்பதால் வன்னிப் பகுதிக்கென பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்கி அங்கு குறைந்த பட்சம் விவசாயம், கலைப்பிரிவு போன்ற துறைகளை இயங்கவைக்க வேண்டும்.

13.வன்னி வர்த்தகர்களில் அநேகர் அனைத்து சொத்துக்களையும் இழந்துள்ளனர் என்பதால், இடம் பெயர்வதற்கு முன்பு அவர்கள் பெற்றிருந்த அங்கீகார உரிமைகளான ஏக விநியோக உரிமை, உத்தரவுபெற்ற வர்த்தக உரிமை,பெற்றோல் நிலையம் நடத்தும் உரிமை போன்றவற்றுக்கான உரிமைகள் வழங்கும்போது பாதிக்கப்பட்ட இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

14.இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் போது இரு விசேட பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். முதலாவதாக, 1992ஆம் ஆண்டு வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் நலன்களைப் பேணவும், இரண்டாவது மிகவும் துர்ப்பாக்கியவான்களாகிய விசேடமாக 1958 இற்கும் 1983 இற்கும் இடைப்பட்ட காலத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் இருந்தும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் குடியேறிய மக்களின் நலன் பேணவும் ஆகும்.

15. மீறுவோருக்குக் கடும் தண்டனை வழங்கப்படக்கூடியதான வலுவுள்ள ஓர் அடிப்படை உரிமை சாசனம் சட்டமாக்கப்பட வேண்டும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தசாக கிரகயஞ்ஞ அழைப்பு



25.12.2009 வெள்ளிக்கிழமை
காலமான புங்குடுதீவு
சிவன்கோயில்
**அருணோதயக் குருக்கள் சுபாஷினி**
அவர்களின்
ஆத்மசாந்திக் கிரியைகள்
03.01.2010 ஞாயிறு
தசாகம்
04.01.2010 திங்கள்
ஏகோதிஷ்டம் மாசிகம்
05.01.2010 செவ்வாய்
சபிண்டிகரணம்
06.01.2010 புதன் கிரகயஞ்ஞம்
ஆகிய ஆத்மசாந்திக் கிரியைகள் நடைபெறவுள்ளன.

*06.01.2010* அன்று நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளவும்.

சிவஸ்ரீ நா.அருணோதயக் குருக்கள் (கணவர்),
சிவகஜன், சிவப்பிரியன். (பிள்ளைகள்)
சிவன்கோயில்,
புங்குடுதீவு 03.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 18 ★ 11 ★ 2007
உதிர்வு 04 ★ 12 ★ 2009



## சாயினி ஜெயராஜா

கடந்த 01.12.2009 அன்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்பு மழலை சாயினியின் இறுதி நோய்களில் அவரின் உயிரைக் காப்பாற்றப் போராடிய பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை வைத்தியர்கள், MSF வைத்திய நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள், மற்றும் அவரின் மறைவை அறிந்து நேரில்வந்து எமது துயரில் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தியோர், தொலைபேசி தந்தி குறுந்தகவல் மூலம் ஆறுதல் கூறியோர் மற்றும் பல வழிகளில் உதவிபுரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் நினைவாக இன்று 03.01.2010 ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிராரத்தனைநிகழ் விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*198, தம்பசிட்டி வீதி,*
*தம்பசிட்டி, பருத்தித்துறை.* (சி/563833) குடும்பத்தினர்.




## லொறி பொடி

கண்டெயினர்/பலகை / அலுமினியம்
முழுதாக மூடிய பொடி / இரும்புதட்டு
அரைவாசி பொடி தயாரிப்புகள்.
கந்தவல லொறி பொடி தயாரிப்பாளர்கள்
457இகந்தவலஇகட்டான.

கொழும்பிலிருந்து யாழ்பாணத்திற்கு
லொறி வாடகைக்கு உண்டு.

031-2240275,071-2757528,077-7588598

## புதிய வீடியோ ஆங்கிலப் பாடநெறிகள்
தமிழ் மூலம்



.... 20 VCDs .... VCD Player .... Package .... VCD Player .... 2500.00

077 0631440 / 0772487234 / 021-222 1155
Apple Computer Network
# 28. Vempadi Road, Jaffna

## காணி விற்பனைக்கு

யாழ். K.K.S. ROAD,
CHAMPION LANE சந்தியில்
(6 ½) பரப்பு காணி மற்றும்
யாழ்.பருத்தித்துறை வீதியில்
சுபாஷ் ஹோட்டல் சந்திக்கு
அருகாமையில் (4) பரப்பு
காணி விற்பனைக்கு உண்டு.
(MAC TRAVELS BUILDING)
தொடர்புகளுக்கு:
0777320051, 021 – 2222336

## Personal Class

புதிய கல்வியாண்டிற்கான தரம் 1-A/Lவரையான மாணவர்களுக்கு English Personal Classஉம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களும் ஆசிரியரைத் தொடர்பு கொள்ளவும். Note: (O/L மாணவர்களுக்கும் கற்பிக்கப்படும்)
தொடர்பு: 0771372280 கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.


## புதிய மாணவரை வரவேற்கும் நிகழ்வு.

யாழ்ப்பாணம்,ஜன.3

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் 2010 புதிய கல்வியாண்டில் 6 ஆம் ஆண்டுக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்குச் சம்பிரதாய பூர்வமாகக் கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிதாக அனுமதி பெற்ற அனைத்து மாணவர்களும் தமது பெற்றோருடன் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ)


Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

18 வருட அனுபவம்
- தபால் மூலம் -
தமிழ் மொழி மூலம்
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
Dec 2009 to May 2010

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவலை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.01.2010

புத்தாண்டிற்கான புதிய அனுமதிகள்

7th Anniversary
சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்
பாலர் பாடசாலை

Play Group - 2-3 years | Montessori - 3 -4 years
கற்பித்தல் முறை: Pre-School - 4-5 years

- சர்வதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட Dr. Maria Montessori & Canadian Early Learning Method
- ஆங்கில மொழியில் சர்வதேச தரத்திற்கேற்ப பாடத்திட்டம்
- தாய்மொழி கட்டாய பாடம்.

Contact : 0774083656

விசேட நிகழ்ச்சிகள்
English Concert, முத்தமிழ் விழா
ஒளி விழா, பட்டமளிப்பு விழா
மாணவர் சித்திரம்/ கைவேலை
கண்காட்சி, Sports Meet

அங்கீகரிக்கப்பட்ட ஆங்கிலப் பாடநெறிகள்
பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமையவும்,
சர்வதேச தரத்திற்குமேற்ப, G.C.E(O/L), G.C.E(A/L)
சிறார்களிற்கு
படிப்படியாக ஆங்கில
அறிவை விருத்தி செய்யும்
மாதகால பாடநெறிகள்...

PRE FOUNDATION
FOUNDATION
LEVEL 1-2-3-4

கறநேரரநகு......
வெளிநாடு செல்ல விரும்புவோரிற்கு,
வெளிநாடு, உள்நாட்டு
தொழில்வாய்ப்புக்களுக்கு சரளமாக
ஆங்கிலம் பேசுவதற்கு............

IELTS
DIPLOMA IN ENGLISH
CERTIFICATE IN ENGLISH

# BRITISH BUSINESS SCHOOL

நல்லூர் : No : 140, Temple Road, Nallur, Jaffna. Tel : 021 222 5796
சுன்னாகம் : Lakshmi Cottage ( Near the New Court), K.K.S Road, Mallakam.
மானிப்பாய் : 252, ஆலடிச் சந்தி, Jaffna Road, Manipay.
புலோலி : Sri Pathmanathan Ilam, Manthikai.

எமது நிறுவனத்திற்கு வேறு எந்தப் பெயரிலும் கிளைகள் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# STUDY IN LONDON

JAFFNA மாநகரத்தில்
CITY COLLEGE ஆரம்பம்



UK INTAKE ,May,Jul
MEMBER OF UCAS

- O/L சித்தி மாத்திரம் போதுமானது
- சாதாரண ஆங்கில அறிவு போதுமானது
- University / College Admission
- தேவையான Document ஒழுங்குகள்
- நேர்முகப்பரீட்சை (Interview இல்லை)
- மூன்றே வாரத்தில் விசாவுக்கான ஒழுங்குகள்
- ஒழுங்குகள் (Sponsor)
- 100% விசாவுக்கான ஒழுங்கமைப்புகள்



DIPLOMA IN ENGLISH
DIPLOMA IN PROFESSIONAL ENGLISH
யாழ் நகரில் புதிய வகுப்பு ஆரம்பம்
100% Guarantee Job , Boarding Arrangements
LAWYERS: Mr M. DINESH - Mr.M.ZAHIR - Miss.SUBASINY
100%GUARANTEE
HND-BBA-BA-BSc-MA-MSc-BEng-B.Com-MBBS, PhD-IT-LLM-LLB-PGDip-MPharm-computer& ect
ISO CERTIFIED INSTITUTION
INTERNATIONAL CITY COLLEGE
No: 07,W.A Silva Mawatha Wellawatte, Colombo - 06 ,
10 METERS FROM GALLE ROAD Tel : 0114 594 104 , fax: 0112 582722
தமிழ் மொழிமூல அழைப்புக்கு – 0772 955 977
Jaffna Branch: 21 Stanly Rd, (Near People's Bank)
தமிழ் மொழிமூல அழைப்புக்கு – 0774 032 051 - 0214 901464


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்திருக்கும் 2010 உங்களுக்கு எப்படி?

அனுபவ அறிவுடன், படிப்பறிவையும் தந்து அதனுடன் உலக நடப்பு பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தக்கூடிய புதனின் ராசியான மிதுனத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பதால் நாடெங்கும் படித்தோர் எண்ணிக்கை உயரும். அரசும் மாணவ-மாணவிகளுக்கு பயனளிக்கும் வகையில் பல சலுகைத் திட்டங்களை அறிவிக்கும். குழந்தைத் தொழிலாளர் இடையிலேயே படிப்பை நிறுத்துபவர் எண்ணிக்கை குறையும். தொடக்கநிலை பள்ளிக் குழந்தைகளைத் தாக்கும் நோய்கள் வரக்கூடும்.

ஆண்டு பிறக்கும் நேரத்தில் குரு கும்பத்தில் நிற்பதால் வெளிநாட்டு நிறுவனங்கள் அதிக முதலீடுகள் செய்து புதிய தொழிற்சாலைகளை அமைக்கும். வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு வீடு, வாகனம் வாங்க சலுகை வட்டியில் பணத்தை வாரி வழங்கும். ஆனால் வங்கிகளில் தவறான பணக்கையாடல்கள் கண்டுபிடிக்கப்படும். சில வங்கிகள் போராடி தங்களை நிலை நிறுத்திக்கொள்ளும்.

எண் ஜோதிடப்படி 2010ம் ஆண்டு குருவின் ஆதிக்க எண்ணான 3இல் வருவதுடன் ஒட்டு மொத்த இயக்கம் (1+1+2010=5) புதனின் 5ஆம் எண்ணில் அமைவதால் கல்வியாளர்கள் கௌரவிக்கப்படுவார்கள். மொழி அறிஞர்கள் முன்னேறுவார்கள். ஆன்மீகத்தில் போலியானவர்கள் அகற்றப்படுவார்கள். சிறு தொழில்கள் மீண்டும் வளரும்.

ராகுவின் திருவாதிரை நட்சத்திரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதுடன் அதன் எதிர் கதிர்வீச்சு கிரகமான கேதுவுடன் சந்திரன் நிற்பதால் மக்களிடையே சிற்றின்ப வேட்கை பெருகும். குறுக்குச் சிந்தனை, வக்கிர சிந்தனை வயப்படுபவர்கள் அதிகரிப்பர். வருடம் பிறந்த உடனேயே சந்திர கிரகணம் நிகழ்ந்து இருப்பதால் கருக்கலைப்பு, குறைப்பிரசவங்கள் மற்றும் இதய நோயால் அதிகமானோர் பாதிக்கப்படுவார்கள். வீதி விபத்துகள், வான் விபத்துகள் அதிகரிக்கும். வாகனம், தொலைக்காட்சி, செல்போன் விலை மேலும் குறையும். விவாகரத்துகள் அதிகரிக்கும். மக்களிடையே தொலை நோக்குச் சிந்தனை குறையும். இலங்கைப் பொருளாதாரம் ஏப்ரல் வரை தடுமாறும்.

சனிபகவான் புதன் வீட்டில் வலுவாக இருப்பதால் புதிய வீதிகள், மேம்பாலங்கள் அமைக்கப்படும். சுற்றுச்சூழலை பாதுகாக்க நீதிமன்றம் ஆணைகளைப் பிறப்பிக்கும். புகழ்பெற்ற கோயில் கோபுரங்கள் பாதிப்படையும். பொதுச் சொத்துகளை அபகரிப்பவர்கள் அதிகரிப்பார்கள்.

இந்த வருடம் முழுக்க செவ்வாய் பலவீனமாக இருப்பதால் பாரம்பரியக் குடும்பங்களில் பாகப்பிரிவினைப் போக்கு அதிகரிக்கும். மக்களிடையே சுயநலம் மேலோங்கும். பெரிய நிறுவனங்கள் உடையும். வருடம் பிறந்த உடனேயே சந்திரகிரகணம் ஏற்பட்டதன் இன்னொரு பாதிப்பால் நாட்டில் பாதுகாப்புக் குறைகள் உண்டாகும். உள்நாட்டு குழப்பங்கள் அதிகரிக்கும். இலங்கையிலும், பாகிஸ்தானிலும் தொடர்ந்து பதற்றம் நீடிக்கும்.

கலைத்துறை சூடுபிடிக்கும். என்றாலும் 27.10.2010 முதல் 26.11.2010 வரை சுக்கிரன் வக்கிரமாவதால் கலைத்துறையினர் பாதிக்கப்படுவார்கள். 21.7.2010 முதல் 6.9.2010 வரை செவ்வாய் - சனி சேர்க்கை இருப்பதால் இயற்கை சீற்றங்கள், துர்மரணங்கள், இழப்புகள், கலவரங்கள் அதிகரிக்கும்.

பொதுவாக இந்தப் புத்தாண்டு மக்களை சுகங்களை அனுபவிக்கத் தூண்டினாலும் வருங்காலம் பற்றிய அச்சத்தையும் தரும்.

## வித்யா தருவதைப் படியுங்கள்...

## மேடம்

வெற்றி பெற்றவர்களின் வாழ்க்கையை விரும்பிப்படிக்கும் நீங்கள், வரலாற்றில் இடம் பிடிக்கவே எப்போதும் விரும்புவீர்கள். உங்களின் பிரபல யோகாதிபதியான குரு பகவான் இலாப வீட்டில் நிற்கும் போது இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதையும் சாதித்துக் காட்டுவீர்கள். பணப் புழக்கமும் திருப்திகரமாக இருக்கும். உங்களுக்குப் பிரச்சினைகள் தரும் கிரகமான சனி பகவான் 6ம் வீட்டில் அடங்கிக் கிடப்பதால் கடன் பிரச்சினையிலிருந்து விடுபடுவீர்கள். தேர்தலில் வெற்றி கிடைக்கும்.

முடங்கியிருந்த நீங்கள், இனி முன்னேற்ற பாதையை நோக்கி பயணிப்பீர்கள். குடும்பத்தில் எதற்கெடுத்தாலும் சண்டை சச்சரவுதானே மிஞ்சியது! இதை சமாளிக்க முடியாமல் தவித்தீர்களே! இனி வீட்டில் அமைதிதங்கும். கணவன்-மனைவி மனம் விட்டுப் பேசுவீர்கள். வீண் சந்தேகம் விலகும். ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் குடும்ப வருமானம் உயரும். வாங்கிய கடனில் வட்டியை மட்டுமே கட்டிக் கொண்டிருந்தீர்களே! இனி முதலின் ஒரு பகுதியை செலுத்திவிடுவீர்கள். குரு ஐந்தாம் வீட்டை பார்ப்பதால் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளை நீங்கள் எதிர்பார்த்த நல்ல பள்ளி, கல்லூரிகளில் சேர்ப்பீர்கள். தாய்மாமன், அத்தை வழியில் இருந்து வந்த மனஸ்தாபங்கள் விலகும். மகளின் கல்யாணத்தை சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைக்கும். அடிக்கடி தொந்தரவு தந்த வாகனத்தை மாற்ற வங்கிக் கடன் கிடைக்கும்.




உங்களின் பூர்வபுண்யாதிபதியான சூரியனின் உத்திரம் நட்சத்திரத்தில் செப்ரம்பர் மத்தியபகுதிவரை சனிபகவான் செல்வதால் இக்கால கட்டத்தில் உங்களின் செல்வாக்கு, புகழ் கூடும். ஆனால், கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு மட்டும் அவ்வப்போது நெஞ்சுவலி வந்து போகும். வெளிவட்டாரத்தில் எல்லோரும் உங்களை மதிப்பார்கள். வழக்கில் நல்ல தீர்ப்புக்கிடைக்கும். 4.5.2010 முதல் 6.11.2010 வரை குருபகவான் அதிசாரம், வக்கிரத்தின் பொருட்டு 12ல் சென்று மறைவதால் சுபச்செலவு அதிகமாகும். யாருக்கும் பினான்ஸ் மூலம் பணம் வாங்கித்தரவோ, பொறுப்பேற்கவோ வேண்டாம். நீண்டகாலமாக நினைத்திருந்த புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். பெரிய பதவிகள் தேடி வரும்.

கேது 3ஆம் வீட்டில் சாதகமாக இருப்பதால் சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்கள் உதவுவார்கள். ஆனால் 9ம் வீட்டில் ராகு தொடர்வதால் தந்தையாரின் உடல் நிலை பாதிக்கும். எவ்வளவு வந்தாலும் எடுத்து வைக்க முடியாதபடி செலவுகள் துரத்தும். வருடம் பிறக்கும்போது உங்கள் ராசிநாதன் செவ்வாய் வக்கிரம் அடைவதுடன் 27.5. 2010 வரை உங்கள் சுகவீடான 4ஆம் வீட்டில் நீசகதியில் நிற்பதாலும் இரத்தம் சம்பந்தப்பட்ட நோய் வரும். சின்னச்சின்ன அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். சகோதர வகையிலும், தாயார் வகையிலும் சங்கடங்கள் வரும். சொத்துப்பத்திரங்கள் தொலையக் கூடும். 21.7.2010 முதல் 6.9. 2010 வரை உங்கள் ராசிநாதன் செவ்வாய் சனியுடன் சேர்வதால் வீண்பழி, மறைமுக அவமானங்கள் வந்துசெல்லும்.

வியாபாரிகளே! உங்களுக்கு பின்னால் தொழில் தொடங்கியவர்கள் கூட முன்னேற்றமடைந்தார்களே! வட்டிக்கு கடன் வாங்கி கடையை விரிவுபடுத்தி நஷ்டப்பட்டீர்களே! இனி உங்களின் மாறுபட்ட அணுகுமுறையால் இலாபமீட்டுவீர்கள். ஜனவரி, பெப்ரவரி, செப்ரம்பர், ஒக்ரோபர் மாதங்களில் திடீர் இலாபம், பெரிய நிறுவனங்களுடன் புது ஒப்பந்தங்கள் கூடிவரும். மருந்து, உணவு, போன்றவற்றால் இலாபம் உண்டு. கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் புரிந்து கொள்ளாமல் அவ்வப்போது பிரச்சனை செய்தார்களே! இனிப் பணிந்து போவார்கள்.

உத்தியோகதர்களே! பணிகளை முடிப்பதிலிருந்த தேக்கநிலை மாறும். மேலதிகாரிகள் உங்களை நம்பி முக்கிய பொறுப்புக்களை ஒப்படைப்பார்கள். வருடத் தொடக்கத்திலேயே பதவி உயர்வு, சம்பள உயர்வு மற்றும் புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். கன்னிப் பெண்களே! தோழிகளுக்கெல்லாம் திருமணமாகிவிட்டதே நமக்கு இன்னும் ஆகவில்லையே என வேதனைப்பட்டீர்களே! இனி கண்ணுக்கு அழகான கணவர் வந்தமைவார்.

மாணவர்களே! உங்கள் பெற்றோரின் தலை நிமிரும்படியாக செய்யுங்கள். அரசியல்வாதிகளே! புதிய பொறுப்புகளை தலைமை ஒப்படைக்கும். கலைத்துறையினரே, இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சம்பளமீதி கைக்கு வரும். விவசாயிகளே! காட்டிய இடத்திலெல்லாம் கையெழுத்திட்டு மாட்டிக் கொண்டீர்களே; இனி கடனிலிருந்த பத்திரங்களை மீட்பீர்கள்.

இந்தப் புத்தாண்டு இடையிடையே உடல் வருத்தம், மன அழுத்தத்தைத் தந்தாலும் பணப்புழக்கம், செல்வாக்குடன் வெற்றியையும் வாரித்தரும்.

★ ★ ★

## இடபம்

படித்ததையும் பார்த்ததையும் கலந்து கற்பனை எனும் தேன் தடவி வெளிப்படுத்துவதில் வல்லவர்கள் நீங்கள். உங்களுடைய 2ஆவது ராசியில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் குடும்பத்தில் அமைதி பிறக்கும். உங்கள் ஆலோசனையை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். மே மாதத்திலிருந்து நவம்பர் மாத முற்பகுதி வரை குரு 11ஆம் வீட்டில் வந்தமர்வதால் தடைப்பட்ட பல காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். குடும்பத்தில் குழப்பங்களை ஏற்படுத்திய உறவினர்கள், நண்பர்களின் சுயரூபத்தை கண்டறிந்து ஒதுக்குவீர்கள். கணவன்-மனைவிக்குள் இனி மனம் விட்டுப் பேசுவீர்கள். வீண் சந்தேகம் விலகும். ஆனால் 2இல் கேது நிற்பதால் பார்வைக் கோளாறு வந்து நீங்கும். உங்களின் பேச்சை சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள்.

குரு உங்கள் ராசிக்கு 2ஆம் வீட்டைப் பார்ப்பதால் அனுபவபூர்வமாகவும் யதார்த்தமாகவும் பேசுவீர்கள். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். ராசிக்கு 5இல் சனி நிற்பதால் பிள்ளைகளை கண்காணியுங்கள். அவர்களின் தவறுகளை அன்பால் திருத்தப்பாருங்கள். மகளுக்கு வரன் தேடும்போது மணமகனின் பழக்க வழக்கங்களை விசாரித்து முடிவெடுப்பது நல்லது. ஜனவரி மாத மையப் பகுதியிலிருந்து மே மாத மையப் பகுதி வரை சனி வக்கிரமாவதால் பூர்வீகச் சொத்தால் செலவுகளும் தாய் வழி உறவினர்களுடன் மனத்தாங்கலும் வந்து செல்லும்.

குரு ஏழாம் பார்வையால் சுகவீட்டைப் பார்ப்பதால் எப்போதும் விரக்தியில் இருக்கும் தாயாரின் மனசு மாறும். கை, கால், முதுகு வலியிலிருந்து தாயார் விடுபடுவார். வெகுநாள்களாக திட்டமிட்டபடி வீடு, காணி அமையும். வங்கிக் கடனும் கிடைக்கும். பழுதாகியிருந்த வாகனத்தை மாற்றுவீர்கள்.




குரு 9ஆம் பார்வையால் 6ஆம் வீட்டை பார்ப்பதால் பழைய கடனில் ஒரு பகுதியை தீர்க்க வழி பிறக்கும். தள்ளிப் போய் கொண்டிருந்த வழக்கு சாதகமாக முடியும். பூர்வீக சொத்தை விற்றுப் புது சொத்து வாங்குவீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வெளிநாட்டிலிருப்பவர்களால் ஆதாயம் உண்டு. என்றாலும் உறவினர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

ராகு 8இல் நிற்பதால் மனைவிக்கு சிறுசிறு அறுவைச் சிகிச்சை ஏற்படும். அவருடன் கருத்து மோதலும் வரக்கூடும். பழைய கசப்பான சம்பவங்களை அடிக்கடி பேசவேண்டாம். ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் வாகனத்தில் கவனம் தேவை.

வியாபாரிகளே! சங்கத்தின் சார்பில் கௌரவப் பதவிகள் தேடிவரும். பழைய வாடிக்கையாளர்களை ஈர்க்க புதுத் திட்டங்களை செயல்படுத்துவீர்கள். உங்களிடமிருந்து பிரிந்து சென்ற அனுபவமிக்க வேலையாள்கள் மீண்டும் உங்களைத் தேடி வருவார்கள். புதிய பங்குதாரர்களை சேர்ப்பீர்கள். பெப்ரவரி, மார்ச், யூன், யூலை, ஒகஸ்ட் மாதங்களில் பழைய கடன்கள் வசூலாகும்.

உத்யோகதர்களே! வருட முற் பகுதியில் வேலைச்சுமை அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றங்களும் வரும். மேலதிகாரியின் தவறுகளை மேலிடத்திற்கு சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். மத்திய பகுதியிலிருந்து மனநிம்மதியுண்டு. உங்களை உரசிப் பார்த்த சக ஊழியர்கள் இனி அடங்குவார்கள். யூலை, ஒகஸ்ட் மாதங்களில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

கன்னிப் பெண்களே! சோம்பல் நீங்கும். இனி பொறுப்பாக நடந்து கொள்வீர்கள். காதல் விவகாரம் நல்ல முடிவுக்கு வரும். தடைப்பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள். கல்யாணம் வருட பிற்பகுதியில்தான். தாயாருடன் மனக் கசப்புகள் நீங்கும்.

மாணவர்களே! ஏனோதானோ என்றில்லாமல் படிப்பல் கூடுதல் கவனம் செலுத்துங்கள். ஆசிரியர்களிடம் சந்தேகங்களை கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். விடைகளை எழுதிப் பாருங்கள். விளையாட்டின் மீது இருக்கும் ஆர்வத்தை படிப்பிலும் காட்டுங்கள். வகுப்பில் முதல் மாணவனாகலாம்.

அரசியல்வாதிகளே! உட்கட்சிப் பூசலில் தலையிடாமல் ஒதுங்கியிருங்கள். தொகுதி நிலவரங்களை உடனுக்குடன் மேலிடத்திற்கு கொண்டு செல்லுங்கள். இருக்கும் பதவியை தக்கவைத்துக் கொள்ள கொஞ்சம் போராட வேண்டியிருக்கும்.

கலைத்துறையினரே! தள்ளிப்போய் கொண்டிருந்த வாய்ப்பு இனித் தேடி வரும். விவசாயிகளே! விளைச்சலை அதிகப்படுத்த மாற்றுப் பயிரிடுங்கள். நெல், கரும்பு, நிலக்கடலை மூலம் ஆதாயமடைவீர்கள்.

இந்தப் புத்தாண்டு சிறுசிறு இடையூறுகளை தந்தாலும், அவையாவும் இறுதியில் வெற்றிப் பாதைக்கு வித்திடுவதாக அமையும். ★ ★ ★

## மிதுனம்

உளவியல் அறிந்த நீங்கள், மற்றவர்களின் முகத்தைப் பார்த்தவுடனேயே அவர்களைப் பற்றி முடிவெடுத்து விடுவீர்கள். தன்னை அண்டி வந்தவர்களை அரவணைத்துப் பேர்கும் நீங்கள் அதிகாரம் செய்பவர்களை கண்டு அஞ்ச மாட்டீர்கள். உங்கள் ராசியை ஐந்து கிரகங்கள் பார்க்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதையும் சாதிப்பீர்கள். ஆனால் உங்கள் ராசியிலேயே இந்தப் புத்தாண்டு பிறப்பதால் வேலைச்சுமை அதிகரிக்கும். அவ்வப்போது உடல்நிலை லேசாக பாதிக்கும். குருபகவான் வருட முற்பகுதி வரை சாதகமாக இருப்பதால் தொடங்கிய பணிகள் உடனே முடியும். குடும்பத்தில் இனம் புரியாத கவலை, வாக்குவாதங்கள் என இருந்தது. இனி வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வருமானத்தை உயர்த்த புது வழிகளில் முயற்சி செய்வீர்கள். கணவன்-மனைவிக்குள் சின்னச் சின்ன பிரச்சனைகள் வரும். என்றாலும் ஒற்றுமைக்கு குறைவிருக்காது. இருவரும் தங்கள் வழி சொந்த பந்தங்களைப் பற்றி பெருமையாகப் பேசிக்கொண்டிருக்காதீர்கள். ராசிக்குள் கேது நிற்பதால் ஒற்றைத் தலைவலி, காய்ச்சல், தூக்கமின்மை, எதிலும் ஒரு வித சலிப்பு, முன்கோபம் வந்து நீங்கும். வருமானம் அதிகரித்தாலும் சேமிக்க முடியாமல் கையிருப்பு கரையும். திடீர் பயணங்களுக்கு குறைவிருக்காது. நண்பர்களுடன் வீண்பேச்சை குறைக்கப் பாருங்கள். பிள்ளைகளிடம் அதிக நேரம் பேசி அவர்களின் அடி மனதிலிருக்கும் தாழ்வு மனப்பான்மையை நீக்க முயற்சி செய்யுங்கள். அவர்களின் உயர்கல்வியில் கூடுதல் அக்கறை செலுத்துவீர்கள். மகனுக்கு நல்ல வாழ்க்கைத்துணை அமையும். நினைத்தபடி வேலை கிடைக்கும். மகளுக்கு அயல் நாட்டில் படிக்கும் வாய்ப்பு கிட்டும்.




வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கையில் காசுபணம் புரளும். சொத்துச் சேரும். தடைபட்ட காரியங்களை முழு வேகத்துடன் முடித்துக் காட்டுவீர்கள். அர்த்தாஷ்டம சனி நடை பெறுவதால் தாயாரின் உடல் நிலை பாதிக்கும். யாருக்கும் பிணையாக நின்று கையெழுத்திட வேண்டாம். 7இல் ராகு நிற்பதால் மனைவியுடன் விவாதங்கள், சந்தேகம், பிரிவு என்று வரும். முன்கோபத்தை குறைக்கப் பாருங்கள்.

குருபகவான் ஐந்தாம் பார்வையாக உங்கள் ராசியை பார்ப்பதால் வாடிக்கிடந்த உங்கள் முகம் பிரகாசிக்கும். சேமிக்கத் தொடங்குவீர்கள். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. சிலருக்கு வேலை கிடைக்கும். தந்தை வழி சொத்தை அடைவதில் இருந்த தடைகள் விலகும். முதல் 27.9.2010 வரை உங்கள் யோகாதிபதியான சனிபகவானின்

(18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்டம்

★ 1895 ஆம் ஆண்டு வில்லியம் ஜி.மோர்கன் என்பவரால் அமெரிக்காவில் ஆரம்பிக்கப் பட்டது இவ்விளையாட்டு. ஆரம்பத்தில் மின்டொனெற் எனப்பட்டது.

★ 1896 ஆம் ஆண்டு கலாநிதி அலிபிரட் ஹீல்ஸ்டம் இவ்விளையாட்டிற்கு 'Volley ball' எனப்பெயரிட்டார்.

★ இவ்விளையாட்டு 1900 இல் கனடாவிலும் இந்தியாவிலும் அறிமுகம் செய்து வைக் கப்பட்டது.

★ 1916 ஆம் ஆண்டு வோல்ரர்சீகமெக் என்பவர் இலங்கையில் இவ்விளையாட்டை அறிமுகப் படுத்தினார்.

★ 1921 ஆம் ஆண்டு முதலாவது ஆசிய கரப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றது. 1947 ஆம் ஆண்டு சர்வதேச கரப்பந்தாட்டச் சம்மேளனம் 14 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதி களுடன் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1949 இல் ஆண்களுக்கான முதலாவது சர்வ தேச கரப்பந்தாட்ட போட்டிகளும் 1952 இல் பெண்களுக்கான முதலாவது சர்வதேச கரப்பந்தாட்ட போட்டிகளும் ஆரம்பிக்கப்பட் டன.

★ 1964 ஆம் ஆண்டு இருபாலருக்குமான கரப்பந்தாட்டப் போட்டிகள் தனித்தனியே ஒலிம்பிக் போட்டிகளில் சேர்க்கப்பட்டது.

க.ஜெயசீலன், தரம் -11C,
ஹாட்லிக்கல்லூரி,
பருத்தித்துறை.

## உலகில் கூடியவை

1. கூடிய மக்களால் பேசப்படும் மொழி மண்டாரின் (சீனமொழி)
2. கூடிய நாடுகளை கொண்ட கண்டம் ஆபிரிக்கா
3. சனத்தொகை கூடிய நகரம் - டோக்கியோ (ஜப்பான்)
4. தீவுகள் கூடிய நாடு பிலிப்பைன்ஸ்
5. கூடிய மழை வீழ்ச்சி மேகலாய மாநிலம் சிராபுஞ்சி (இந்தியா)
6. கூடிய வெப்பமான இடம் அஸீஸியா 137°F (லிபியா)
7. கூடிய குளிர்ச்சியான இடம் - அண்டார்டிக்கா-72°F
8. கூடிய சனத்தொகை கொண்ட நாடு-சீனா

போ.டன்ஸ்ரன்,
யா/ சில்லாலை றோ.க.த.க பாடசாலை.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -47

01. 2010 உதயன் நாள்காட்டியில் பொறிக்கப் பட்டுள்ள மணிக்கூட்டுக் கோபுரம் காட்டும் நேரம் என்ன?
02. 01.01.2010 இல் காலமான அமைச்சர் பெ. சந்திரசேகரன் எந்தக் கட்சியின் தலைவர்?
03. றேடியத்தைக் கண்டுபிடித்தவர்கள் யாவர்?
04. சோவியத்யூனியன் எப்போது நிறுவப்பட்டது?
05. குடாநாட்டை தற்போது உலுப்பிவரும் கொடியநோய் எது?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 13.01.2010 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர் களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

**விடை தெரியுமா? -45 சரியான விடைகள்**

01. கிறிஸ்ரியன் அடம்
02. கிராண்ட் மாஸ்ரர் போரிஸ் கெல் பாண்ட்
03. சரத் பொன்சேகா
04. திருகோணமலை, தும்பளை
05. தேசிய சுதந்திர முன்னணி

**பரிசுபெறுவோர்**

01. அ.மேரிடானியா, தரம்-6ஏ, யாழ்.திருக் குடும்ப கன்னியர் மடம்.
02. சி.யசோக்குமார், தரம்-10ஏ, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
03. யோகநாதன் யசோதா, தரம் -9, வட இந்து மகளிர் கல்லூரி.
04. க.யாழினி, தரம்-09, வேம்படி மகளிர் கல்லூரி.
05. வீ.ஸேனுகா, தரம் -8, சந்திரபுர ஸ்கந்த வரோதய மகா வித்தியாலம்.
06. கிருபானந்தன் ஷியாமளன், தரம் -7ஏ, நாவற்குழி மேற்கு, கைதடி.



# ஓநாய்ச் சிறுவன் 17

ஆங்கிலத்தில்: 'றுத்யாட் கிப்லிங்'
தமிழில்: ரம்யன்

பகீரா கூறினார் "இப்படி ஒரு அடையாளம் எனது நாடியில் இருப்பது இந்தக் காட்டிலுள்ள ஒருவருக்குமே தெரியாது தம்பி, நானும் உன்னைப் போல மனிதர்கள் மத்தியில்தான் பிறந்து வளர்ந்தேன். அவர்கள் மத்தியில் தான் என் தாயும் செத்தார். உதைப்பூர் மகாராஜாவின் மாளிகையில். முன்னர் காட்டையே பார்த்தது கிடையாது. என்னை ஒரு கூட்டில் அடைத்து உணவூட்டி வளர்த்தார்கள். ஒருநாள் இரவு நான் ஒரு முடிவுக்கு வந்தேன் நான் பகீரா - ஒரு கரும் புலி- என்னை மனிதர்கள் விளையாட்டுப் பொருளாக நடத்தமுடியாது . இவ்வாறு சிந்தித்ததன் பின் கூட்டின் பூட்டை ஓர் அடி கொடுத்து உடைத்தேன். காட்டுக்குள் ஓடி வந்துவிட்டேன். இங்கே வந்த பின்பு மிக மோசமான- குரூரத் தன்மையுடன் நடந்து கொள்ளலானேன் ஷேர்கானை விட பயங்கரமாக இருந்தன என் செயல்பாடுகள்." "ஆமாம் காட்டில் எல்லாருமே பகீரா என்றால் பயந்து சாகிறார்கள். என்னைத் தவிர" என்றான் மௌலி.

"ஓம் ஓம் நீ மனிதப் பிள்ளையல்லவா" என்று அன்பாகக் கூறிய பகீரா நான் காட்டுக்குள் வந்துவிட்டது போலவே நீயும் நாட்டுக்கு - உன் மக்களிடம் போக வேண்டும் - ஆம் ஓநாய்க்கூட்டம் உன்னைக் கொன்று விடுவதற்கு முன் உன் மக்களிடம்நீதிரும்பி விட வேண்டும்."



"ஆனால் என்னை யார் எதற்காக கொல்லத் துணியப் போகிறார்கள்" என்று கேட்டான் மௌலி, பின் கரிய புலியாகிய பகீராவைக் கூர்ந்து எரித்து விடுவது போல் பார்த்தான். பகீராவால் அந்தப் பார்வையைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவர் கூறினார், " இது தான் காரணம் உனது பார்வை மிகவும் சக்தி வாய்ந்தது. என்னாலேயே உன் பார்வையை சகித்துக் கொள்ள முடியவில்லை யென்றால் ஓநாய்களால் எப்படி முடியும். நீ புத்திசாலியாய் இருக்கிறாய். அதுமட்டுமல்ல நீ ஒரு மனிதப்பிள்ளை. உன்னை வெறுக்கும் படியாக ஷேர்கான் ஓநாய்களின் புதிய தலைமுறையினரை வளைத்து வைத்திருக்கின்றான். பகீரா மேலும் சொன்னார்- அவர்கள் உனக்காக மலை உச்சியில் கூட்டம் நடக்கும் பாறையின் அருகில் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று.மேலும் ஓநாய்கள் இரவே அகீலாவைக் கொன்றுவிட யோசித்தார்கள். ஆனால் நீயும் வரும்வரை காத்திருப்பதற்கு முடிவு செய்துள்ளார்கள் என்று பகீரா கூறினார்.




## இராமகிருஸ்ணரின் அருள் மொழிகள்

1. உனக்குப் பைத்தியம் பிடிக்குமானால் அது பகவத்பிரேமையால் உண்டாகட்டும். உலகப் பொருள்களுக்காக பைத்தியம் கொள்ளாதே.
2. பண ஆசை பிடித்து அலையும் உலோபியைப் போல் உன் மனம் ஈசுவரன் மீது ஆசை கொண்டு அலையட்டும்.
3. தண்ணீரில் மூழ்கிவிட்டவன் மூச்சுவிடுவதற்கு மிகவும் தவிப்பது போல ஈசுவரனைக் காண்பதற்கு முன்னால் ஒருவனுடைய மனம் அதற்காக மிகவும் ஆசை கொள்ள வேண்டும்.
4. கடவுளை அடைய எத்தகைய அன்பு வேண்டும் தெரியுமா? தலையில் அடிபட்ட நாய் கலக்கமுற்று ஓடுவது போல, கடவுள் இல்லாமல் ஒருவன் சஞ்சலப்பட்டு அலைய வேண்டும்.
5. எவனிடம் அருளை வேண்டும் தாகமும், தியானமும் அதிகம் உள்ளதோ அவன் ஈசுவரனை விரைவில் காண்கின்றான்.
6. விளையாட்டுப் பொருள்களையும் காசுகளையும் தரும்படி வேண்டும் குழந்தை அழுது தொந்தரவு செய்து தன் தாயாரை வருத்திக் கேட்பது போல தனக்கு சமீபமாகவும் பிரியமாயும் ஈசுவரன் இருப்பதை உணர்ந்து கொண்டவன் அவ்வீசுவரனைக் காணவேண்டும் என்று உள்ளன்புடன் மனம் கசிந்து உருகுவானாகின் அவன் கடைசியில் திவ்விய தரிசனத்தைப் பெறுவது நிச்சயம்.
7. கடவுளைக் காணத் துடிப்பவனே வாழ்க்கையை வெல்கின்றான், தன்னை அவ்விதம் அன்போடும் திடபக்தியோடும் தேடுபவனுடைய திருஷ்டிக்குப் புலப்படாமல் ஈசுவரன் மறைந்திருப்பதில்லை.

ஆக்கம்:- .இ. அகல்லியா, தரம் -10,
சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-........................................
தரம் :-........................................
பாடசாலை :-........................................
........................................

இத்தோடு இணைக்கபபட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாணவர் தூரிகை



சி.ஷர்மிகா, தரம் - 10B,
யா/வேரணி மகா வித்தியாலயம்.




க.யுவநீதா, தரம் -6E,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாட.



த.ரீகஜன், தரம் -8,
யா/மத்திய கல்லூரி.



தே.சிவாகரன், தரம் - 9B,
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.



ப.பிரதீபன், தரம் -4,
யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.



பி.பிரதாபினி, தரம் - 6,
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா நல்லூர் கந்தசுவாமி கோயிலில் வழிபாடு செய்வதையும், யாழ்.ஆயர் இல்லத்தில் ஆயர் அதிவண. தோமஸ்சௌந்தரநாயகத்தைச் சந்தித்துக் கலந்துரையாடுவதையும், வர்த்தக சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடுவதையும் மேலேயுள்ள படங்களில் காணலாம்.

இந்தப் படங்களில் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம், ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த டாக்டர். ஜயலத் ஜயவர்த்தன, ரவி கருணாநாயக்க, அகில காரியவாசம் ஆகியோரும் காணப்படுகின்றனர். *(படங்கள்: லக்ஸ்மன், உமா)*

# 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று மத்தியின் அதிகாரங்களைப் பகிர வேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டியு சொல்கிறார்



13 ஆவது திருத்தச் சட்டம் பிராந்திய ரீதியான அதிகாரப் பகிர்வை மட்டுமே உள்ளடக்கியது. எனவே 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் மத்திய அரசின் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அதில் விசேட இடம் வழங்கப்பட வேண்டும். ஏனைய விடயங்கள் அனைத்தையும் அனைத்துக் கட்சிக்குழுவின் யோசனையின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் அரசமைப்பு விவகார அமைச்சரும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளருமான டியு குணசேகர.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அவர் உதயனுக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு:-

தேர்தல் வரும்போதுதான் ஐ.தே.கவினர் அரசியலமைப்பு மாற்றம் குறித்துப் பேசுவார்கள். தேர்தல் முடிந்ததும் அவர்கள் அதைப்பற்றி அலட்டிக் கொள்ள மாட்டார்கள். 1978 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஐ.தே.க.வினரால் எந்தவொரு அரசமைப்பு மாற்றத்தையும் கொண்டுவர முடியவில்லை. 2000 ஆம் ஆண்டில் சமஷ்டி அரசமைப்புத் திட்டத்தை ஜே.வி.பி. யினரும் ஐ.தே.கவினரும் சேர்ந்து எரித்தார்கள். இதனால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொன்னான சந்தர்ப்பம் ஒன்றை நாம் இழந்தோம். இந்தச் சமஷ்டி அரசமைப்பை ஆதரிக்கு மாறு ஐ.தே.க.வினருடன் நான் பேச்சு நடத்தினேன். அவர்கள் அதற்கு உடன் படவில்லை. இந்த அரசமைப்பை ஐ.தே.க. ஆதரித்திருந்தால் பிரச்சினை எப்போதோ தீர்ந்திருக்கும். இந்தச் சந்தர்ப்பம் இனிக் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

ஜே.வி.பியினரை தமது கூட்டுக்குள் சேர்ந்துக் கொள்வதற்காகத்தான் ஐ.தே. கவினர் அரசமைப்பு மாற்றம் பற்றிப் பேசுகிறார்கள். அவர்களுடைய கட்சியில்கூட இதற்கு முழு, உடன்பாடு இல்லை. இது ஐ.தே.கவினரின் சந்தர்ப்பவாத அரசியல்.

### நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க மஹிந்த ஆதரவு

கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பத்திலிருந்தே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை எதிர்த்தது. அன்றிலிருந்து இன்றுவரையும் நாம் அதனை எதிர்க்கிறோம். இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை அகற்றப்படவேண்டும். அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நிச்சயமாக அகற்றப்படும். அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஒத்துழைப்பு வழங்குவார்.

சரத் பொன்சேகா ஐ.தே.கவுடனோ அல்லது மனோகணேசனுடனோ அல்லது ஜே.வி.பியுடனோ எந்தவொரு உடன்பாட்டையும் செய்து கொள்ளவில்லை. தற்செயலாக இந்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றி பெற்றால் ஜனாதிபதி மட்டுமல்ல முப்படைத்தளபதியும் அவர்தான். தொடர்ந்து 12 வருடம் அவர் ஆட்சியில் இருப்பார். தனது கூட்டணியில் இப்போதுள்ள அனைவரையும் சிறையிலடைத்து விட்டு அவர் சர்வாதிகார ஆட்சி செய்வார்.

அனைத்துக் கட்சிக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எனினும், அனைத்துக் கட்சிகளும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஐ.தே.க, ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவு அதற்குக் கிடைக்கவில்லை. இதனால் அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை. அனைத்துக்கட்சிகளையும் இதற்குள் இழுப்பதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

கட்சிகளுக்குள் ஒரு தேசிய நல்லிணக்கம் இல்லாமையே இனப்பிரச்சினை தீர்க்கப்படாமைக்கான முக்கிய காரணம். இந்த நாட்டில் மாத்திரமல்ல எந்த நாட்டிலும் தேசிய நல்லிணக்கம் இல்லாமல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது.

### கம்யூனிஸ்ட் கட்சியை குடாநாட்டில் மீளமைப்புச் செய்வோம்

தமிழ் மொழியும் அரச கருமமொழி என்பது சட்டத்தில் மட்டுமே இடம் பெற்றிருந்தது. அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்ததன் மூலம் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டுள்ளது. 1950 ஆம் ஆண்டு முதல் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. 2007 ஆம் ஆண்டில் இதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் தீர்வு காணப்பட்டது.

26 வருடங்களின் பின்னர் நான் தற்போது யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளேன் எனது விஜயத்தின் நோக்கம் கம்யூனிஸ்ட் கட்சியை யாழ்ப்பாணத்தில் மீளமைப்புச் செய்வதுதான். முன்னர் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து மூன்று தமிழர்கள் நாடாளுமன்றம் சென்றார்கள். யாழ்ப்பாணத்தில் எமக்கு அலுவலகம் இருந்தது. பல கிராம சபைகள் கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தன. 1970 களில் அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கம்யூனிஸ் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்தவேளை இலங்கையில் ஊழல் அற்ற சங்கங்களில் முதலிடத்தைப் பெற்றது-என்றார்.

செவ்வி:-
அதிரன், தமிழரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## வளர்மதி கல்விக்கழகம்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

எமது கல்விக் கழகத்தில் கல்வி பயின்று 2009 ஆம் ஆண்டில் நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்.

| மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|
| 01.ஸ்ரீதரன் கிருத்திகன் | 168 |
| 02.சோமசுந்தரம் யதுர்ஷன் | 168 |
| 03.ராதாகிருஷ்ணன் அஜித் | 161 |
| 04.முகில்வண்ணன் துசிதரன் | 155 |
| 05.கந்தசாமி மிதுர்ஷன் | 155 |
| 06.சிவபாலன் ஜெய்சன் | 151 |
| 07.சிவசுப்பிரமணியம் டதுர்ஜிகா | 151 |
| 08.சுதாகர் சாருப்பிரியன் | 148 |
| 09.மகாதேவன் ஐங்கரன் | 143 |

இவர்களையும் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப்பெற்ற மாணவர்களையும் இவர்களுக்கு கல்வி கற்பித்த கல்விக்கழகஆசிரியர்களையும் விசேடமாக புலமைப் பரிசில் வகுப்புக்களை எடுத்த ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வளர்மதி கல்விக்கழகம்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (சி-563844) நிர்வாகம்.





தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலைப் பயிற்சி- பாகம் 1 (சுதர்சனகிரியா எனும் சிறப்பு மூச்சுப் பயிற்சி உள்ளடக்கியது)

**இலவச அறிமுக உரை**

இடம்: கம்பன் கோட்டம் / நல்லூர்
காலம்: நாளை (04.01.2010), மாலை 5 மணிக்கு
பயிற்சி நாள்கள்: 05.01.2010 முதல் 09.01.2010 வரை
காலை 6.30-8.30 அல்லது மாலை 5-7
மேலும் விவரங்களுக்கு,
சர்வதேச வாழும்கலை அறநிறுவனம்
தொ.பே. 0771000750, 0771777998
(93213)



# முக்கிய அறிவித்தல்

எமது வாழ்வகத்தின் பெயரைப் பயன்படுத்திச் சிலர் வீடு வீடாகச் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டுவருவதாக அறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். இவ்விதமான நடவடிக்கைகளுக்கும் எமக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதையும் நாம் ஒருபோதும் இவ்விதமான நிதி சேகரிப்பில் ஈடுபடுவதில்லை என்பதையும் திட்டவட்டமாக அனைத்து அன்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

தலைவர், வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி,சுன்னாகம்.


# 45ஆம் நாள் நினைவஞ்சலி

யாழ்/நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை இசை ஆசிரியை திருமதி ச.அருணகிரிவாசன் அவர்களது அன்புத் தாயார்

**திருமதி நாகேஸ்வரி நல்லையா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(93234) இசையாசிரியர்கழகம், யாழ்.வலயம்.

# நீங்கா நினைவில் ஓராண்டு....!



திருமதி
**கலாநிதி சுரேஷ்குமார்**

மலர்வு
25-05-1966
உதிர்வு
13-01-2009

திதி: 03.01.2010

கண்ணீரில் கரைந்தது ஆண்டொன்று
எம்முன்னே நீங்கள் இல்லை உறவாட அம்மா
குடும்பக் கோயிலின் கோபுர தீபமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (93220) த.சுரேஷ்குமார், சு.ஆத்மிகா.

# தையல் பயிற்சிக்கு பெண் போதனாசிரியர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.3

தென்மராட்சி பிரதேச தொழில் பயிற்சிப் பிரிவினரால் தையல் பயிற்சிக்கான பெண் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பிரதேச எல்லைக்குள் வதியும் 22 வயதுக்கும் 35 வயதுக்குமிடைப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதர சித்தியுடன் தையல் பயிற்சி டிப்ளோமா சான்றிதழ் பெற்று இரண்டு வருட தையல் அனுபவமுள்ள பெண்கள் விண்ணப்பிக்கலாம் விண்ணப்பத்தை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாக அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (ஒ-270)

# உளநல மேம்பாடு சிந்தனை அரங்கு

யாழ்ப்பாணம், ஜன.03

''நொந்துபோயுள்ள எமது மனங்களின் உளநல மேம்பாடு''பற்றிய இரண்டாவது சிந்தனை அரங்கு இன்று ஞாயிறு மாலை 4.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை யாழ் ஐ.ஐ.ரி. நிறுவனத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உளநல மருத்துவ நிபுணர் பேராசிரியர் தயா.சோமசுந்தரம் கருத்துரை வழங்குவார். ஆர்வலர்கள் கலந்துகொள்ளலாம். (ஒ-7)

# பிறந்திருக்கும் 2010....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நட்சத்திரத்தில் குரு செல்வதால் ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். கோயில் திருவிழாவை முன்னின்று நடத்துவீர்கள். பணவரவு உண்டு. ஆபரணம் சேரும். ஆனால் மனைவிக்கு உடல்நலக்குறைவும் மருத்துவச் செலவும் வந்து போகும்.

வியாபாரிகளே! அரசு கெடுபடிகள் தளரும். பங்குதாரர்களின் துரோகங்களை மறந்து பழைய நிலைக்குத் திரும்புவீர்கள். பாக்கிகள் வசூலாகும். வேலையாள்களை மாற்றுவீர்கள். வாடிக்கையாளர்களை அதிகப்படுத்த பட் நோட்டீஸ், வானொலி விளம்பரம் என செலவிடுவீர்கள். மார்ச், ஏப்ரல் மாதங்களில் புது ஒப்பந்தங்கள் ஸ்கையெழுத்தாகும். புதிய தொழிலில் கால்பதிக்கும் முன்பு அனுபவஸ்தர்களிடம் ஆலோசனை கேளுங்கள். உத்யோகஸ்தர்களே! இழுபறியாக இருந்த பதவி உயர்வு இப்போது கிடைக்கும். மேலதிகாரி உங்களிடம் சில நேரங்களில் கோபப்பட்டாலும் உங்களை நம்ப முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார். கேட்ட இடத்திற்கு இடமாற்றம் உண்டு. செப்ரெம்பர் மாதத்தில் வேறு சில வாய்ப்புகளும் வரும். என்றாலும் 4.5.2010 முதல் 6.11.2010 வரை குரு 10ஆம் வீட்டிற்கு செல்வதால் மறுக்கப்பட்ட உரி மைகளைப் பெற சிலர் நீதிமன்றம் செல்ல வேண்டிவரும்.

கன்னிப் பெண்களே! முடிவெடுக்க முடியாமல் திணறினீர்களே! இனி சுயமாக சிந்தித்து முடிவெடுப்பீர்கள். தள்ளிப் போன கல்யாணம் கூடி வரும். பெற்றோரின் அரவணைப்பு அதிகரிக்கும். மாணவர்களே! நண்பர்களுடன் இருந்து வந்த சண்டை சச்சரவுகள் மறையும். படிப்பால் மட்டுமின்றி விளையாட்டிலும் சாதிப்பீர்கள். அரசியல் வாதிகளே! தலைமையுடன் நெருக்கமாக இருந்தாலும் அவரின் சொந்த விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது. சகாக்கள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். கலைத்துறையினரே! வீண்வதந்திகளால் ஒதுங்கியிருந்த நீங்கள், இனி உற்சாகமாகி தடைப்பட்ட வேலைகளை சிறப்பாக முடிப்பீர்கள். விவசாயிகளே! பயிரை பாதுகாக்க பலவகை மருந்துகளை போட்டும் பயனில்லாமல் போனதே! இனி அந்தநிலை மாறி மகசூல் பெருகும். மாற்றுப் பயிரால் லாபமும் வரும்.

இந்தப் புத்தாண்டு உங்களுக்குள் ஒளிந்து கிடக்கும் உள்ளுணர்வின் துணையால் எதையும் சாதிக்க வைக்கும்.


**விபாழன் மாற்றம்** 2010 - தைப்புத்தாண்டுப் பலன்கள் 30/= எங்கும் விற்பனையாகின்றன.
கணிப்பு:- PROF:- சத்தியதாசன்
பாடசாலை உபகரணங்கள் கிடைக்குமிடம்
அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை,
14, பஸ்நிலை..., யாழ்ப்பாணம். (93232)



# தேவை

சித்த சுவாதீனமற்ற பெண் பிள்ளையை பகுதிநேரமாக அல்லது முழுநேரமாக பராமரிப்பதற் குரிய சேவை மனப்பாங்குள்ள பெண் தேவை: சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.
077 8575042


# முன்பள்ளி கலைவிழா

கைதடி கலைமகள் வளர்மதி முன்பள்ளியின் வருடாந்தக் கலைவிழாவும் மழலைகள் கௌரவிப்பு விழாவும் இன்று ஞாயிறு பி.ப. ஒரு மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (50-288)

# ப.நோ.கூ.சங்கக் கிளைகள் அனைத்தும் இன்று முழுநாளும் திறந்திருக்கும்

## நிவாரணங்களைப் பெற இன்றே இறுதிநாள்

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் நிவாரணம் பெறுவோர் தமக்கான அனைத்து நிவாரணப் பொருள்களையும் இறுதி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை பெற்றுக்கொள்ளுமாறு சங்கத் தலைவர் க.தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

நிவாரண விநியோகங்களுக்காக சங்கக்கிளைகள் யாவும் விடுமுறை தினமான இன்று ஞாயிற்றுக்கிழமையும் முழுநாளும் திறந்திருக்கும்.

சமுர்த்தி, இடம்பெயர்ந்தோர், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்தோர், இலகு வேலலைத்திட்டம் போன்ற நிவாரணப் பொருள்களின் விநியோகம் இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது. (ஒ- 224)

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் சந்திரசேகரம்



(ஓய்வு பெற்ற போமன், வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை, பகுதிநேர ஆங்கில ஆசிரியர்)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சந்திரசேகரம் தனது 77ஆவது வயதில் 01.01.2010,வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார்காலஞ்சென்றபொன்னம்பலம் அருணாசலம்-வாலாம்பிகை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற பொன்னையா- பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், நாமகளின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசு, அசலாம்பிகை, அமுதாம்பிகை, காலஞ்சென்ற கமலாதேவி, குமாரசாமி, வனஜா ஆகியோரின் ஆசைச் சகோதரனும், கோபீசகனின் (வேலை மேற்பார்வையாளர், யாழ்.மாநகர சபை) அன்புத் தந்தையும், கமலலோஜினியின் (ஆசிரியை. யாழ்.மத்திய கல்லூரி) அருமை மாமனாரும் கலாத்மிகாவின் பாசமிகுபேரனும், சண்முகநாதன், ஞானபண்டிதன், தையல்நாயகி, மயில்வாகனம், தெய்வநாயகி ஆகியோரின் அருமை மைத்துனரும், நிவேஜா, லோகசுதன், நிரூபனா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இணுவிலில் அவரது இல்லத்தில் நாளை (04.01.2010) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால்இந்துமயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு
T.P. No. 0213215732 (93236) தகவல்:ச.கோபீசகன்(மகன்) இணுவில்.

## காசிப்பிள்ளை கணேசரத்தினம் (JP)



(மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர்)

தெல்லிப்பழை Barr Lane ஐ பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கணேசரத்தினம் 01.01.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை-பவளரத்தினம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், யோகவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லையா-மனோன்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும் நவரத்திணம் (கனடா), ஜெயரத்தினம், புஷ்பராணி, காலஞ்சென்ற யோகரத்தினம், சறோஜினிதேவி ஆகியோரின் சகோதரனும் கமலஜோதி, சிந்தாதேவி, சிங்காரநாதன், பாலச்சந்திரன், திலகவதி, விஜயசந்திரன், சோமாவதி, யோகேஸ்வரன், விமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத் துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

சைவபாடசாலை ஒழுங்கை,
திருநெல்வேலி. (93233) தகவல்: மனைவி 021 222 6601

## வேலுப்பிள்ளை கந்தையா



யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உடுவில் செபமாலைமாதா கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா நேற்று (02.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும், அமரர் செல்லம்மாவின் அன்புக் கணவரும் ஈஸ்வரானந்தன், கமலாதேவி, மல்லிகாதேவி, ஜெயக்குமார் (பிரான்ஸ்), விமலாதேவி, வசந்தகுமார், (பிரான்ஸ்), தயா ஆகியோரின் பாசமிகுதந்தையும் சுப்பிரமணியம், கணேஸ், ஜீவரட்ணம், சியாமளாதேவி, பவானி, கவிதா ஆகியோரின் மாமனாரும், பூமணி, பாக்கியம், சிவமணி, காலஞ்சென்றவர்களான, சோமு, திரவியம், மற்றும் துரைரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செபமாலை மாதாகோவிலடி,
உடுவில், சுன்னாகம். (93235) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிக்கும் உரிமை இழப்பு

இடம்பெயர்ந்த மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கான வசதியை-உரிமையை-பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் தேர்தல் செயலக அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகளின் அலட்சியப் போக்குக் குறித்துத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் ஏமாற்றமும் பெருவிசனமும் வெளியிட்டிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

இடம்பெயர்ந்த மக்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் வாக்களிப்பதற்கு வசதியாகத் தங்களைப் பதிந்து கொள்வது மற்றும் அவர்களுக்குத் தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவது போன்ற விடயங்களில் பெரும் அலட்சியப் போக்கு நிலவுகின்றமையைச் சுட்டிக்காட்டியுள்ள தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், இதனால் ஜனவரி 26ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் சுமார் பதினைந்து இலட்சம் மக்கள் தமது வாக்குரிமையை இழக்கும் அபாயம் உள்ளது என்ற திடுக்கிடும் தகவலையும் வெளியிட்டிருக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்களின் கணிசமானோர் தமிழர்களும், முஸ்லிம்களுமே என்பதால் இப்படி வாக்களிக்கும் உரிமையை இழக்கப்போகின்றவர்களில் மிகப் பெரும்பான்மையினர் தமிழ் பேசும் வாக்காளர்களாகவே இருப்பர் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தென்னிலங்கையின் இருபிரதான வேட்பாளர்களிடையே நேரடியான கடும் போட்டி இந்தத் தேர்தலில் நிலவும் இந்தச் சூழலில், பதினைந்து இலட்சம் வாக்குகள் என்பது, வெற்றி-தோல்வியைத் தீர்க்கும் பெரிய காரணியாகக் கருதப்படக் கூடியது. அவ்வாறு நாட்டின் எதிர்காலத் தலைவிதியைத் தீர்மானிக்கும்-நாட்டின் அடுத்த அரசுத் தலைவரைத் தெரிவு செய்யும்-இந்தத் தேர்தலின் பெறுபேறை முடிவு செய்யும்-வாய்ப்பைத் தமிழ்பேசும் மக்கள் இழப்பது என்பது பெரும் வரலாற்றுத் தவறாகும்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கள் வாக்குரிமையை இத்தேர்தலில் பிரயோகிப்பதற்கான மீள் பதிலை-ஏற்பாட்டை-செய்துகொள்ளவில்லை என்றால் அதற்கான-மீள்பதிவுக்கான-உட்கட்டமைப்பு வசதிகளை தேர்தல் செயலகம் அவர்களுக்கு வழங்கவில்லை என்பதே பிரதான காரணம் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அதிகாரிகள் மீது சீறுகின்றன.

வன்னியில் இடம்பெயர்ந்த மக்கள் வன்னியில் இடம்பெயர்ந்தோருக்கான முகாம்களில் அல்லது உறவினர் வீடுகளில் அல்லது மீள்குடியேற்றம் என்ற பெயரில் கூட்டிச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்ட இடங்களில் அவல வாழ்வு வாழ்கின்றனர்.

அன்றாட வாழ்வுக்கே-வயிற்றுப்பாட்டுக்கே-அல்லாடும் அந்த மக்களுக்கு அந்த மோசமான கஷ்ட நிலைமைகளுக்கு மத்தியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காகத் தம்மைப் பதிவு செய்துகொள்வது என்பது அர்த்தமற்றதாக-அபத்தமானமாக-இருக்கக்கூடும். வயிற்றுப் பசிக்காக அலைபவர்கள், வாக்குப் போடும் உரிமைக்காக அச்சமயத்தில் சிரத்தை காட்டவே மாட்டார்கள் என்பது புரிந்துகொள்ளத் தக்கதே.

வன்னியில் இடம்பெயர்ந்த சுமார் மூன்றரை இலட்சம் பேர் மத்தியில், வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக அங்கு சென்ற பிரதித் தேர்தல் ஆணையாளரும் அவரது அதிகாரிகளுமாக 23 ஆயிரம் பேரின் விண்ணப்பங்களை மட்டுமே மீள்பதிவுக்குப் பெற்றுக்கொண்டு வர முடிந்துள்ளது.

இந்த விடயத்தில் தேர்தல் அதிகாரிகள் மட்டுமல்லாமல், பிரதேச செயலாளர்கள், கிராமசேவை அலுவலர்கள் போன்றோரும் உரியவற்றை உரிய நேரத்தில் ஆற்றாமல் பெரும் தவறிழைத்திருக்கின்றார்கள் எனத் தேர்தல் கண்காணிப்பு அலுவலகம் தெரிவித்திருக்கின்றது.

இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு புதிய இடங்களில் சிதறடிக்கப்பட்ட நிலையில் திக்குக்கு ஒரு பக்கமாக வாழ்வதால், தேர்தலில் வாக்களிக்கும் ஒழுங்கு முறையை மீள்பதிவின் மூலம் அவர்கள் செய்துகொள்ள வேண்டியிருப்பது தவிர்க்கமுடியாததே. அதற்கான தூண்டுதலை அவர்களுக்கு வழங்கவேண்டும். வெறும் ஊடக அறிவிப்புகளை மட்டும் விடுப்பதன் மூலம் இதனை எட்டிவிட முடியாது. இந்த அகதிகள் மத்தியில் செயற்படும் தொண்டர் அமைப்புகள், அரச அதிகாரிகள் போன்றோர் ஊடாக இவ்விடயத்தில் விசேட ஊக்குவிப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது செய்யப்படவேயில்லை. தேர்தலுக்கு இன்னும் 23 நாள்களே இருக்கையில், இனி இதில் ஆக்கபூர்வமாக ஏதும் செய்யமுடியும் என்பது துர்லபமே.

இதற்காக வெறுமனே தேர்தல் அதிகாரிகளையும், அரச அலுவலர்களையும் மட்டும் நோவதில்-வைவதில்-அர்த்தமில்லை.

இந்த மக்களில் பெரும்பாலானோரை ஆறு மாதங்களுக்கு மேல் முட்கம்பிவேலி முகாம்களுக்குள் அடைத்து வைத்துக் கொண்டு, அச்சமயம் இத்தகைய மீள்பதிவுக்கான ஏற்பாடு எதனையும் முன்னெடுக்காமல் பார்த்து இருந்துவிட்டு, திடீரென ஒரேசமயத்தில் இவர்களில் கணிசமானோரை பல திசைகளுக்கும் சிதறிச் செல்ல அனுமதித்தபடி, மறுபுறத்தில் திடுதிப்பெனத் தேர்தலை அறிவித்து, அதை இப்படி முன்னெடுக்கும் அரசுத் தலைமையின் நிகழ்ச்சித் திட்டத்தில், இந்த மக்களின் வாக்களிப்பு உரிமையை இத்தகைய செயற்பாட்டின் மூலம் சிதைக்கும் எண்ணம் இருந்ததோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

அதுமட்டுமல்ல, இவ்வளவு நிலைமைகளுக்குப் பின்னரும், இந்த மக்களை அவர்களின் வாக்களிப்பு உரிமையைச் சரிவரப் பயன்படுத்தச் செய்வதற்கான தூண்டுதல் நடவடிக்கைகளை அவர்கள் மத்தியில் சென்று முன்னெடுக்காமல், பொறுப்பின்றி, அசிரத்தையாக விட்டேத்தியாக நடந்துகொண்ட தமிழ்த் தலைமைகளும் கண்டிக்கப்பட வேண்டியவையே. தமது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை இப்படிப் பறிபோகின்றமை குறித்து அலட்டிக் கொள்ளாமல்-விசனப்படாமல்-மௌனம் காக்கும் அவர்களது போக்கு பெரும் விந்தைக்குரியதாகும்.

# உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பாடசாலைகளை செயற்படுத்த ஏற்பாடு

## வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 3

குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயங்களில் தற்போது இயங்கும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களும், மாணவர்களும் இலகுவில் சென்று வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள ஏனைய பாடசாலைகளைத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக வட மாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்தார்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் தற்போது இயங்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்ட் கல்லூரி உள்ளிட்ட பாடசாலைகளுக்கான போக்குவரத்தை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் தற்போது இயங்கும் பாடசாலைகளுக்கு மாணவர்களும் ஆசிரியர்களும் சிறிது தூரத்தை நடந்துசெல்ல வேண்டியுள்ளதால், அவர்களின் அசௌகரியத்தைக் களைய அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் இன்னமும் 51 பாடசாலைகள் மீளத் திறக்கப்பட வேண்டியுள்ளன. இவை தற்போது வேறு பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டு கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது - என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (1)

# குரு முதல்வருக்கு இன்று பிரியாவிடை

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ்.சென். பீற்றர்ஸ் மெதடிஸ்த சபையின் யாழ்.குரு முதல்வராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் வண எஸ்.கே.கதிர்காமருக்கு பிரியாவிடை வழங்கும் நிகழ்வும் ஒன்றுகூடல் நிகழ்வும் இன்று சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

சபையின் சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு சபைச் செயலாளர் கேட்டுள்ளார். (ஒ-1)

# சகல பாடசாலைகளும் டெங்கு ஒழிப்பில் தீவிரமாக ஈடுபட வேண்டும்

## வலயப்பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜன. 3

யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளின் கல்விச் சமூகங்கள் ஒவ்வொன்றும் தமது பாடசாலைச் சூழலில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் முழு மூச்சாக ஈடுபட வேண்டும். இதற்கு ஏற்ற வகையில் பாடசாலை ஆரம்பத்தில் பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்யும் செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் பாடசாலை சமூகச் சூழலில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

யாழ்.கல்விவலயப் பணிப்பாளர் திருமதி அ .வேதநாயகம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார். டெங்கு ஒழிப்பு தொடர்பாக அவர் தொடர்ந்து தகவல் தெரிவிக்கையில்

இன்று டெங்கு தொடர்பாக ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் முற்றாக போக்கப்பட வேண்டும். அதற்கு மாணவர் சமூகம் முழுமையான பங்களிப்பினை நல்க வேண்டும் அதற்கான ஏற்பாடுகளை அதிபர், ஆசிரியர்கள் செய்ய வேண்டும். நாமும் நமது சூழலும் நலமாக இருக்க வேண்டும். இதன் மூலம் தான் எதிர்கால வாழ்வும் வளமாக அமையும் எனவே சிரமதானம் மூலம் பாடசாலையையும் அதன் சுற்றாடலும் சுத்தம் செய்யப்படல் வேண்டும். அதே போன்று ஒவ்வொரு மாணவனின் இல்லமும் அதன் சுற்றுப்புற சூழலும் சுத்தம் செய்யப்பட வேண்டும். அதற்கான வாய்ப்பு வசதிகளை பெற்றோர் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

டெங்கு காய்ச்சலை உண்டாக்கும் நுளம்பின் பெருக்கத்துக்கான வாய்ப்புக்கள் இல்லாமல் முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும். '' சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்'' என்ற முதுமொழிக்கேற்ப நாம் ஒவ்வொருவரும் உடல் நலத்துடன் இருந்தால் தான் கல்விச் செயற்பாடுகளை எதிர்காலத்தில் முன்னெடுக்க முடியும்.

பாடசாலை ஆரம்ப நாளில் டெங்கு ஒழிப்புக்கான முன்னெடுப்புகளை முழுமையாக முன்னெடுக்க வேண்டும் எனக் கூறினார்.

# வடக்கு, கிழக்கு இந்து ஆலயங்களை புனரமைக்க 18 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

கொழும்பு, ஜன. 3

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் சேதமான சகல இந்து ஆலயங்களையும் புனரமைப்புச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென 18 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் 100 ஆலயங்களைப் புனரமைக்கவும், வட மாகாணத்தில் உள்ள கோயில்களைத் தேர்ந்தெடுத்து ஆலயத்திற்கு இரண்டு லட்சம் ரூபா வீதமும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சுமார் 100 ஆலயங்களுக்கு 3 கோடியே 93 லட்சம் ரூபா நிதியுதவியாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. மேலும் மிகவும் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த சிறிய ஆலயங்களின் நாளாந்த பூஜை நடைமுறைகளை மேம்படுத்துவதற்கென பூஜை உபகரணக் கொள்வனவுக்காக கிழக்கு மாகாணத்தில் சுமார் 200 ஆலயங்களுக்கு தலா ரூபா 25 ஆயிரம் வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் சேதமடைந்திருந்த இந்துக் கோவில்களின் பூஜை வழிபாடுகள் வழமைபோன்று இடம்பெற்று வருகின்றன.

இதே போன்று வடக்கின் வசந்தம் செயற்றிட்டத்தின் ஊடாக இந்து சமயத்திணைக்களத்தின் கீழ் சிறப்பான செயற்றிட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, கோப்பாய், பருத்தித்துறை, உடுவில், வேல ணை, யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி, காரைநகர், கரவெட்டி, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் -

வவுனியா மாவட்டத்திலுள்ள நெடுங்கேணி, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, செட்டிக்குளம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மன்னார் மாவட்டத்திலுள்ள மன்னார், மாந்தை, நானாட்டான், முசலி மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா இரண்டு ஆலயங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொன்றிற்கும் இரண்டு லட்சம் ரூபா திருத்த வேலைகளுக்கீாக நிதியுதவி வழங்கப்பட்டது.

இதைவிட ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள இரண்டு அறநெறிப்பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள், உபகரணங்கள் வாங்குவதற்கென நிதியுதவி வழங்கப்பட்டது.

மொத்தமாக ரூபா 18 மில்லியன் செலவிடப்பட்டிருக்கிறது. வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் ஐந்து இந்து ஆலயங்கள் அமைப்பதற்காக 2.3 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, செட்டிக்குளம் மெனிக்பாம் முகாமில் நான்கு இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டு நான்குகால பூஜைகள் நடைபெற்று வருகின்றன - என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (1)

# பாற்குட பவனி

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ்.சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் இடம்பெற்றுவரும் மகரஜோதி மண்டலப் பெருவிழாவில் பாற்குட் பவனி, பாலாபிஷேகம் ஆகியன இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு ஐயப்பன் ஜெயந்தி தின நிகழ்வும் 14 ஆம் திகதி இடம்பெறும் மகரஜோதிப் பெருவிழாவில் திரு ஆபரணப் பெட்டி வருதல் விசேட பதினெட்டுப்படிப்பூசை ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-1)

# மாணவர்களுக்கான பொது அறிவுப்போட்டி

வண்ணை,ஜன.3

சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் 11 - 15 வயதுக்குமிடைப்பட்ட மாணவர்கள் மத்தியில் பொது அறிவுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

முதல் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 12 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 8 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதுடன் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகும் மேலும் 15 மாணவர்களுக்கு வெற்றிச் சான்றிதழ்களும் வழங்கப்படுமென பணியகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பாக இல. 8, குருசோ வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சமாதானத்திற்கும் நல்லிணக்கத்துமான பணியகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பிக்கலாம். (ஒ-160)

# நாளை

| | |
|---|---|
| மார்கழி 20 | 04.01.2010 |
| | திங்கட்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.ப 04.57 வரை |
| நட்சத்திரம்: | மகம் |
| | பி.இ 02.06 வரை |
| சுபநேரம்: | 12.31-02.01 வரை |
| ராகுகாலம்: | 08.01-09.31 வரை |

# நெடுந்தீவிலிருந்து கால்நடைகளை வெளியே கொண்டுசெல்லத் தொடர்ந்து தடை

நல்லூர், ஜன.03

நெடுந்தீவில் போதிய அளவு கால்நடைகள் இல்லாத நிலையில் மார்கழி, தை மாதங்களில் வெளியிடங்களுக்கு கொண்டு செல்வது அனுமதிக்கப்பட மாட்டாது என நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் என்.திருலிங்கநாதன் தெரிவித்தார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், கடற்படை அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்கிடையிலான ''மக்கள் பிரச்சினைகள்'' குறித்த சந்திப்பு கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இதன்போதே கால்நடைகளை வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல அனுமதி வழங்கவேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கைக்குப் பதிலளித்த உதவி அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் -

யாழ்.மாவட்டத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இங்கு போதிய அளவு கால்நடைகள் இல்லை. இதனால் இங்கிருந்து வெளி மாவட்டங்களுக்கு கால்நடைகளை கொண்டு செல்வதற்கு அரச அதிபர் தடை விதித்துள்ளார். இதனால் தை மாதம் வரை அதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது - என்றார். (04-111)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

வேம்படி, சென்றல் உட்பட

# சகல பாடசாலைகளிலும் கல்விச் செயற்பாடுகள் நாளை ஆரம்பமாகும் என அறிவிப்பு

அச்சுவேலி, ஜன. 3

யாழ்.மாவட்டத்தில் ஜி.சீ.ஈ விடைத்தாள் மதிப்பீடு நடைபெறுகின்ற இரண்டு கல்லூரிகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளும் நாளை திங்கட்கிழமை முதலாம் தவணைக் கல்விச் செயற்பாடுகளுக்காகத் திறக்கப்படும்.

வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி இரண்டிலும் ஜி.சீ.ஈ சாதாரண பரீட்சை விடைத்தாள் ம்திப்பீட்டுப் பணிகள் ஜனவரி 09 ஆம் திகதி வரை நடைபெறுகின்ற போதிலும் மாற்று ஒழுங்குகள் மூலம் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. யாழ் மத்திய கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். ஏனைய அனைத்து வகுப்பு களுக்குமான கல்விச் செயற்பாடுகள் நாளை ஆரம்பமாகும் என மத்திய கல்லூரியின் அதிபர் எல். ஓங்காரமூர்த்தி அறிவித்துள்ளார்.

## 4,000 பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது.

அதனை அடுத்து தேர்தல் விதிகளை மீறியதாக தெரிவித்து இவர்களின் வாக்குகளை ரத்துச்செய்வதாக தேர்தல் ஆணையாளர் தேர்தல் கண்காணிப்பாளர்களான 'கபே' அமைப்புக்கு அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வாக்காளர்கள் வாக்களிப்பதை அனுமதிக்க வேண்டாம் என்று தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

## அம்பாறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமாற்றங்கள் நிகழக்கூடாது என்ற தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் இந்த அதிகாரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதன்கீழ் மஹிந்தவின் 'கட் அவுட்டை' அகற்ற முயற்சித்த அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே. ஆர் ஜெயவர்த்தனவை கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்ய பொலிஸ்மா அதிபர் விடுத்த உத்தரவை உடனடியாக ரத்துச்செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளர் பணித்துள்ளார்.

ஏற்கனவே இந்த ஆணை நடைமுறையில் உள்ளபோதும் அரசாங்கம் குறித்தபொலிஸ் அதிகாரியை கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்தது. இதனை ஆட்சேபித்த எதிர்க்கட்சிகள் விடயத்தை தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்தன.

இந்த நிலையிலேயே இது தேர்தல் சட்டமீறல் எனக்கூறி குறித்த இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

எனினும் இதுவரை இந்த இடமாற்ற உத்தரவை பொலிஸ்மா அதிபர் பாலசூரிய ரத்துச் செய்யவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## சந்திரசேகரனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரசேகரனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய திருமாவளவன் நாளை தலவாக்கலையில் நடைபெறும் இறுதிக் கிரியைகளிலும் பங்குபற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துக் கலந்துரையாடவிருக்கிறார்.

பொதுமக்களைச் சந்தித்து ஆதரவு திரட்டவிருக்கும் அவர் பல கூட்டங்களிலும் உரையாற்றவிருக்கிறார் என ஜனாதிபதி செயலகம் நேற்றிரவு தகவல் வெளியிட்டுள்ளது. (அ-1)


யாழில் முதல் முதல் தோன்றிய தன்னிகரில்லா நிறுவனம்
விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி,யாழ்
தரம் 6,7,8,9,10,O/L EVENING BATCH
பிரிவு 2 ஆரம்பம் 04.01.2010 -மாலை 4 மணி
O/L DAY CLASS ஆரம்பம் 10.01.2010 10.30 8.30 - 2.30 Mon - friday
▾ வன்னி மாணவர்களுக்கும், இம்முறை பரீட்சை எடுக்காத மாணவர்களுக்குமான விசேட வகுப்பு
▾ இம்முறையும் பிரிவு 6 மட்டுமே. (சி/56361)

கடந்த ஆண்டு எம்மிடம் கற்ற
மூன்று மாணவர்கள் 3A!
12 மாணவர்கள் பல்கலை செல்கின்றனர்!!
நீங்களும் எம்முடன் இணைந்து
உயர்வடையுங்கள்
A/L 2012 கலைப்பிரிவு ஆரம்பம்
04.01.2010 திங்கள் பிற்பகல் 3.30 மணி
A/L DAY CLASS நடைபெறுகின்றது.
மதுரம் இன்ஸ்ரிரியூட்,
உயர்கல்விப் பிரிவு, கட்டப்பிராய்.

விக்னா கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி,யாழ்
A/L DAY CLASS
கலை வகுப்புகள்
Tam. -திரு.குழந்தை
Eco. -திரு.B.கஜீதரன்
Log. -திரு.R.S.சந்திரன்
Hic. -திரு.N.T.தரன்
Geo. -திரு. சுரேன்
Hist. -திரு . தாஸ்
Hin. -திரு.N.T.தரன்
Plsc. -திரு.ஸ்ரீரங்கநாத்
Chri. -திரு. யூட்
Dram. -திரு. மயூரன்
ஆரம்பம் 04.01.2010
வர்த்தக வகுப்புகள்
Eco. -திரு.B.கஜீதரன்
Acc. -திரு.P.பகீரதன்
B.Stu. -திரு.யசோ
(C563812)

STUDY WITH WORK IN UK
A/L பரீட்சை முடிந்ததும் அடுத்தது என்ன?
கவலையை விடுங்கள் !
அங்கீகாரம் பெற்ற College/University களில்
புதிய வீசா நடைமுறைகளிற்கு அமைய Visa Process
செய்து தரப்படும்.
Free Counseling
பெப்ரவரி ஏப்ரல் 2010 ற்கான பதிவுகளை
தற்போது மேற்கொள்ள முடியும்.
அனைத்து கற்கை நெறிகளுக்குமான அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.
B.F.C Services
No 01, ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
(ARRUL GLOBAL EXPRESS) அருகாமையில்.
T.P.0212226113, 0776147174





வர்த்தகப்பிரிவு A/L 2012
(தமிழ், ஆங்கிலமொழி மூலம்)
பொருளியல்:திரு.N.B.கஜீதரன்
வணிகக்கல்வி:திரு.S.K.பாலசுரேஷ்
கணக்கீடு: திரு.பாலகஜன்
(யாழ்நகரின் நம்பிக்கைக்கு பாத்திரமான ஆசிரியர் குழாம்)
ஆரம்பம் 04.01.2010 திங்கள் மாலை 4 மணி
BRAIN POWER INSTITUTE
(சின்னக்கடை சந்தை அருகில்)

நியூ கேம்பிரிச் (அளவெட்டி)
புதிய நிர்வாகம் புதிய ஆண்டு புதிய உதயம்
♥ தரம் 1 - O/L புதிய ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவை.
♥ நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்.
♥ சிறப்பு வகுப்புகள் - தரம் 5 ஆசிரியர் அன்பழகனின் வழிகாட்டலில் பரீட்சை.
(C/ 563803)

SUBRA(14)
சித்தன்கேணி வட்டுக்கோட்டை
இரு இடங்களிலும் 15.01.2010 A/L மாலை 4.30
* 2009 A/L 7 மாணவர் 3A பெறுபேறு, 49 பேர் பல்கலைக்கழக அனுமதி.
* நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்.
* தரம் 1 முதல் O/L வரை புதிய பிரிவு 05.01.2010 இல் 4.30 இற்கு ஆரம்பமாகின்றது.
Spoken English- BY: Britto
புதிய பிரிவு செவ்., வியா., 8 - 9 மணி - 05.01.2010

<= ஆரம்பித்தோம் வென்றோம் =>
A/L - 2012
கலை, வர்த்தகப்பிரிவு
உடனடியாகவே
பிரிவு II
ஆரம்பம்:- ஜனவரி 9 இல்
நேரம் :- சனி - 8 a.m.
பொருளியற்கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(563864)

அன்னை புத்தகசாலை
வாடிக்கையாளர்களின் நன்மைகருதி
இன்று(03.01.2010)
ஞாயிற்றுக்கிழமை கடை
திறந்திருக்கும் என்பதனை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
நிர்வாகி.
அன்னை புத்தக நிலையம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் - 04.01.2010
Mon.7 a.m.
அனுபவமான ஆசிரியர் குழாம்
NEC
Clock Tower Road, Jaffna


## கூட்டுறவாளர்களுடனான கலந்துரையாடல்

சனச குழுமத்தின் தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவத்தெனிய அவர்கள் கூட்டுறவாளர்களுடன் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி தொடர்பாகவும், சனச அபிவிருத்தி வங்கியினுடைய எதிர்கால செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடவுள்ளார்.

இடம்: வீரசிங்கம் மண்டபம்
காலம்: 05.01.2010 (செவ்வாய்)
நேரம்: முற்பகல் 10 மணி

அனைத்து கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதியையும் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளர், ஊழியர்கள்,
சனச அபிவிருத்தி வங்கி,
யாழ்ப்பாணம்.

(93207)


O/L, A/L மாணவர்களுக்கான ICT, GIT புதிய வகுப்புக்கள்
பிரத்தியேகமாக/குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி
Call : 0217429005
e.com
Diploma in Microsoft Office 2007
Diploma in Desk Top Publishing
Diploma in Network Engineering
Diploma in Web Designing
Diploma in Hardware Engineering
Diploma in Software Engineering
Diploma in Server Administration
Certificate in Internet & E-Mail
No.95A Temple Road, Nallur, Jaffna. No.95 Thavady South, Kokuvil, Jaffna

CISCO-CCNA
Network பயிற்சி
உயர்சம்பளத்துடனான வேலைவாய்ப்பு.
அனைவரும் பயிலலாம்
(வரையறுக்கப்பட்ட பதிவுகள்)
0772 395 895

Phillips Nursing Home
பிலிப்ஸ் நேசிங் ஹோம்
★ அதி நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் நியாயமான கட்டணத்தில் சத்திர சிகிச்சைகள்.
★ தனித்தனி தொலைக்காட்சி வசதிகளுடன் கூடிய சுகாதாரமான வார்ட் வசதிகள்.
★ இலவச வைத்திய ஆலோசனைகளுடன் கூடிய அடிப்படை உடற்பரிசோதனையும் (Basic Full Body Check-up) கணனி மய ஆய்வு கூட பரிசோதனைகளும்.
★ நிபுணத்துவமிக்க யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் வழங்கப்படும் (OPD) வெளிநோயாளர் சேவை.
223, பிரதான வீதி,
(யாழ்.சிறைச்சாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 4172

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses... மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள்
*MS Office *Accounting*MAYA(Graphics 3D)
*Printing & ICDL Typing,Hardware*English
*Web Designing* Video Editing *AutoCAD
* VB.net,LINUX,O/L ICT,A/L GIT,Kids Program
International Courses...
MCSE Spl_Network Security, CIMA, IELTS
Cisco-CCNA, ICDL-AutoCAD,BCS
Sun Java programmer,Red Hat Engineer
Degree Course-University of Colombo
* Diploma in -IT,Higer Diploma-IT,* Bachelor-IT
Free:Hardware,ICDL-AutoCAD,ICDL-International Computer Driving Licence,
50%Off:Java (Awarded by Sun)
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
324, பலாலி வீதி,யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில்,
0772395895 Bus Route - 764
MCS Supported By UNDP/JRRP


## மரண அறிவித்தல்

### சுப்பையா குமாரசாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா குமாரசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) நேற்று (02.01.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.01.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சங்குவேலி தெற்கு. ப.ஜெயரட்ணம்


புத்தாண்டின் புதிய கணனி ஒன்றின்
உரிமையாளர் ஆவதற்கு 37,250/= மட்டுமே
அனைத்து உதிரிப்பாகங்களுக்கும் ஒன்று முதல் மூன்று
வருட முழு உத்தரவாதத்துடன் கூடிய கணனிகள்
NALIN
னின் காட்சியறையில்
இப்பொழுது விசேட சலுகைகள்
கணனிகளின் இணையத்தள இணைப்பின் வைரஸ்
பிரச்சனைகளுக்கான ஒரு வருடத்திற்கான உத்தரவாத தீர்வு
அனைத்து வகையான துல்லியமான WEB Cam ,
Head Phone பலவர்ண பல வடிவங்களில்
பலவடிவங்களில் HP, Kingston 2GB 4GB, 8GB Flash
NALIN Information Technologies Pvt Ltd
195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166, 0777667974 email: nitpvt@nalininfotech.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.